# பூவரசு



தை:1996

## ஐந்தாவது ஆண்டுமலர்

புலம்பெயர் கலை, இலக்கியத்துறையில்

# பூவரசு

தனது பணியைச் செவ்வனே தொடர
இதுவரைகாலமும் ஒத்துழைப்புத்தந்த–
ஒத்துழைத்துவருகின்ற–
படைப்பாளர்கள், வாசகர்களுக்கு

இனிய தமிழ் ஏட்டின்
இதயபூர்வமான நன்றிகள்!

இந்த ஆண்டுமுதல்
**பூவரசு வாசகர் வட்டம்**
புதிய பல தீர்மானங்களுடன்
தனது தமிழ்ப்பணியைத் தொடரும்.

# ஐந்தாவது ஆண்டுமலர்

# பூவரசு

இனிய தமிழ் ஏடு

Poovarasu
Sinniah Maheswaran
Otto Brenner Allee.56
28325 Bremen
Germany

**இதழ்:37**
**தை 1996**

## உலகமே நம் இல்லம்
## உள்ளமெல்லாம் நம் சொந்தம்

# DAS KULTURBÜRO · TENEVER

NEUWIEDER STR.44A. 28325 BREMEN. TELEFON 0421-42 46 31


Lieber Herr Maheswaran,

einen herzlichen Glückwünsch zum 5-jährigen Bestehen des Literatur-magazins "Poovarasu"

Es ist bewunderungswert, daß die Redaktion, trotz nur geringer finanzieller Mittel über einen solch langen Zeitraum durchgehalten hat. Viele Schwierigkeiten mußten dabei in der Vergangenheit bewältigt werden. Erinnert sei daran, daß das Magazin zu Beginn mit der Hand geschrieben werden mußte.

Kann zuerst die Zeitschrift alle zwei Monate heraus, so erscheint sie mittlerweile jeden Monat. Der LeserInnenkreis hat sich mittlerweile stark erweitert. Es ist beeindruckend zu hören, welche große Verbreitung "Poovarasu" findet und daß sich die Leserschaft aus verschiedenen europäischen Ländern zusammensetzt.

Ich wünsche Ihnen weiterhin viel Erfolg und Freude bei Ihrem Engagement, tamilische Kultur und Literatur zu erhalten und zu pflegen und vor allem auch der Jugend nahezubringen.

Aus diesem Anlaß möchte ich Ihren Mut machen Ihre wichtige Aufgabe weiterhin so engagiert fortzusetzen und ich versichere Ihnen, daß ich Sie auch weiterhin nach besten Kräften unterstützen werde.

Mit dem besten Wünschen

Wiltrud Kadelka



# பூவரசு

**ஐந்தாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட சிறுகதை, கவிதை, கட்டுரைப்போட்டி முடிவுகள்.**

சிறுகதை

முதற்பரிசு —
"ஒரு கலைஞன் காவியமாகிறான்"
— **பவன் கணபதிப்பிள்ளை**
(Grigny;France.)

இரண்டாவது பரிசு —
"அகத்தில் அரும்பிய ஆரூடம்"
— **இராஜன் முருகவேல்**
(Bremen, Germany.)

மூன்றாவது பரிசு —
"பரிகாரம்"
— **மா.தியாகேஸ்வரன்**
(Dortmund, Germany)

ஆறுதல் பரிசு —
"கனவு நனவாகியது"
— **வே.தேவநந்தினி**
(Stubben,Germany)



இனிய தமிழ் எடு.

கட்டுரை

முதற்பரிசு —
"ஐரோப்பிய நாடுகளில் எமது குழந்தைகள்"
— த.பவானந்தராஜா
(Alsdorf, Germany)

இரண்டாவது பரிசு —
"இனி ஒரு விதி செய்வோம்!"
— இ.ஸ்ரீராம்குமார்
(Bürstadt, Germany)

மூன்றாவது பரிசு —
"ஐரோப்பிய நாடுகளில் ஈழத்தமிழர்கள்"
— சுதர்சன் இரத்தினம்
(Beverstedt, Germany)

ஆறுதல்பரிசு —
"புலம்பெயர்ந்த தமிழர்களின் அவலங்கள்"
— இராஜேஸ்வரி சிவராஜா
(Duisburg, Germany)

கவிதை.


"புலம்பெயர்ந்து வந்ததனால்...!"

முதற்பரிசு —
எழிலன்.
(Lotte, Germany)

இரண்டாவது பரிசு —
வேலணையூர் பொன்னண்ணா
(Billund, Danemark)

மூன்றாவது பரிசு —
அ.வேணுகோபாலன்
(Volkersbach, Germany)

ஆறுதல் பரிசு —
எஸ்.நளாஜினி
(Zurich, Switzerland)


இனிய தமிழ் ஏடு.

*போட்டிகளில் பங்குகொண்ட அனைத்துப் படைப்பாளர்களுக்கும் பூவரசு தனது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறது.*
*பரிசுபெற்ற படைப்புக்கள் தவிர்ந்த ஏனைய படைப்புக்களில் பிரசுரத்திற்கு ஏற்றவையெனப் பூவரசு தேர்ந்துள்ள படைப்புக்களும் பூவரசு இதழ்களில் அவ்வப்போது வெளியாகும்*

*அன்புடன்-*
*ஆசிரியர்.*

ஓம் ஸ்ரீசாயிராம்!

அன்பின் பூவரசு ஆசிரியர்க்கு!
யாழ்ப்பாணத்தில் இருந்து ஜெர்மனிக்கு வந்தபோது தங்கள் பூவரசு புத்தகம் வாசிக்கும் பாக்கியம் கிட்டியது.

வெளிநாட்டில் தமிழுக்கும் தாய்நாட்டிற்காகவும் இப்படி ஒரு புத்தகமா என்று ஆச்சரியப்பட்டேன்.
தாய்த் திருநாட்டையும் தமிழையும் போற்றி தொண்டு செய்கின்றீர்கள்.
என்னே உங்கள் உள்ளம்.
எல்லா அம்சங்களும் பூவரசில் அடங்கி இருக்கின்றன.
தமிழர்கள் என்றென்றும் பூவரசுக்கு கடமைப்பட்டவர்கள்.

தெய்வீகப் பாதையில் செல்ல பத்துக் கோட்பாடுகள் என்னும் சாயிபகவானின் கோட்பாடுகளில் முதலாவது
'தாய்நாட்டை நேசித்து அதற்காகவே சேவை செய்யுங்கள். பிறருடைய தாய்நாடுகளை வெறுக்கவோ நிந்திக்கவோ கூடாது!'
அதன்படி பார்க்கும்போது தாங்கள் தாய்நாட்டிற்காகவும் தமிழுக்காகவும் அக்கரையில் இருந்து கொண்டு சேவை செய்கின்றீர்கள்.வாழ்க தங்கள் பணி.வளர்க தங்கள் பூவரசு.
நான் வணங்கும் தெய்வம் சாயிபாபாவின் அருளும் ஆசியும் கிடைத்து தங்கள் சேவை மேன்மேலும் வளர பகவானைப் பிரார்த்திக்கின்றேன்!

வாழ்க! வளர்க! நன்றி!
ஜெய் சாயிராம்.

சாயிஞானி,
கட்டுடைச்சந்தி, மானிப்பாய்,
யாழ்ப்பாணம் (இலங்கை)

திங்களொருமுறை பூப்பூப்பாய் பூவரசே!
தென்றலாய் எங்கிலும் தவழ்வாய் நீயே!
புலம்பெயர்ந்தோர் கரங்களிலே புன்னகை புரியும் பூவரசே!
நிலம் பெயர்ந்தாலென்ன உன்கிளைகளை நீளப்பரவிட்டாய்
நாடுபோற்றும் நல்ல தமிழ்ஏடே!
வாடும் தமிழர் நெஞ்சங்களில் வாச மலர் நீயே!
தேடும் இலக்கியச் சுரங்கத்தின் முத்த நீ!
பாடும் உனது புகழ் பைந்தமிழ் நூல்கள் வாழ்த்தி!
ஐந்தாண்டை நிறைவு செய்து ஆறாவது ஆண்டதில்
அடியெடுத்து வைக்கும் அழகு தமிழ் இதழே!
உனது பூங்காவில் பூத்த பூக்களோ பல!
பூக்கள் யாவும் வாசமே! பூஜைக்கேற்ற புஷ்பங்களே!
புலரும் புத்தாண்டில் பொங்கலை நாம் எதிர்பார்ப்பதுபோல்
மலரும் ஐந்தாண்டு நிறைவு மலரை
மனமுவந்து எதிர்பார்க்கின்றோம்!
மலர்வாய் நீ பூவரசே! வளர்வாய் நீ பூவரசே!
வாழ் நீ வளமுடனே பூவரசே!

— இ. சம்பந்தன்.
(இராட்டிங்கன், ஜெர்மனி)

என் இனிய பூவரசே!
ஐந்து வயதினை நிரப்பி
ஆனந்தத்துடன் ஆறு வயதினில்
கால்பதிக்கும் பூவரசே!
நீ பல்லாண்டுகாலம் வாழ என் வாழ்த்துக்கள்!
அழகுச் செந்தமிழால்
இலக்கிய மலராக உன்னை
எம்கைகளில் தவழவிட்ட
அண்ணன் இந்துமகேஷ் அளிக்கட்டும்
என் உள்ளம் கனிந்த வாழ்த்துக்கள்!
பூவரசே! உன் வளர்ச்சிக்கு
நானும் என்றென்றும் துணையாக நிற்பேன்!

— கச்சாயூர் வேலுநந்தினி.
(ஸ்ரூப்பன், ஜெர்மனி)

ஐந்தாண்டு காலமாய்
அன்னியநாடொன்றில்
அன்னைத்தமிழ்ப்பணியில்
அரசோச்சும்
என்னினிய பூவரசே!
என்றும் நீ இமயம்.
இன்றும் நான் உன்பணியை
இதயத்தால் வாழ்த்துகின்றேன்.

கூடியிருந்த சிலர் உனக்கு
குழிபறிக்க நினைத்தாலும்
தமிழ் உணர்வு கொண்டோர் உனை
தலைகுனிய விடமாட்டார்
தமிழ்ப்பணியில் என்றும் நீ
தரணிபோற்றும் தங்கம்
பணியை நீதொடர்ந்து
தமிழின் வளம்பெருக்க வாழ்த்துகின்றேன்

புலம்பெயர்ந்த தமிழர்களில்
தமிழ்ப்பணிக்கு
புறப்பட்டோர் பலர்
தங்கத் தமிழ்ப் பணியில் தம்மை
தங்கவைத்தோர் சிலர்
இந்த வரிசையிலே தம்பி
இந்துமகேஷ் தமிழர் இலக்கியத்திலொருவன்
இவன் கருவில் உருவாகும் பூவரசே தமிழர்
கனவிலும் உன்னை காணவே துடிப்பார் - அதனால்
முத்தான உன்பணிக்கு முடிசூட்டி வாழ்த்துகிறேன்.

வேலணையூர் பொன்னண்ணா.
(டென்மார்க்)

அரும்பாக இருந்த அரசே! பூவரசே! - நீ
அன்னை தமிழுக்கு ஆற்ற வந்த
அரியபணி தொடர்ந்து இன்று
ஆண்டு ஐந்து பூர்த்தியாமே..?

ஐரோப்பிய மண்ணில் எங்கும்
ஆயிரம் தமிழ் மலர்கள் மலர்ந்தும்
ஐயிரண்டு மலர்களுடன் - அவை
அழிந்ததனை நாம் அறிவோம்... ஆனால்

ஐந்தாண்டை பூர்த்தி செய்து - எமை
அதிசயத்தில் ஆழ்த்தும் உன்னை
வாழ்த்திடவே வார்த்தையேது?

மாதமொரு மலர் மலர்ந்து
மண்ணின் மணம் வீசுமுந்தன்
மகிமையினை என்ன சொல்ல...?

கற்பனைக்கு களம் அமைத்து
அற்புதங்கள் செய்யுமுந்தன்
அரும்பணியை வாழ்த்துகிறேன்.

— கொற்றையூர் வாசன்.
(ஸ்ரூர், ஜெர்மனி)

ஐந்தாவது ஆண்டை நிறைவு செய்யும்
பூவரசுவின் பணிதொடர வாழ்த்துகிறேன்.
பூவரசு இதழில் வெளிவரும் ஆக்கங்கள் யாவும்
சிறந்தனவாக இருப்பதற்குக் காரணமாக
இருக்கும் ஆக்கதாரர்களுக்கும் அதன்
ஆசிரியருக்கும் எனது வாழ்த்துக்கள்!

— சு. சூரியகுமார்.
( கேர்போர்ட், ஜெர்மனி)

பூவரசுக்கு ஐந்து வயது
பூவரசில் பூத்த மலர்கள்
பூத்துக் குலுங்குகின்றது
பூமியில் நீ என்றும் வாழ்வாய்!
தானும் வாடிவிடவில்லை
தன்னைச் சார்ந்தோரையும்
வாடாமல் பார்த்து வளர்ந்து வரும்
பூவரசே நீ என்றும் வாழ்க!
கையெழுத்துப் பிரதியாய்த் தோன்றி
கணனிவடிவில் வெளிவந்து
ஐந்தாண்டைப்பூர்த்திசெய்யும்
பூவரசே! நீ என்றும் வாழ்க!
இலைமறை காயாய் இருக்கும்
கலைஞர்களையும் ஒன்றிணைத்து
கலை இலக்கியம்,
செய்திகள் ,சிறுவர் பகுதி
என பலவற்றையும் தாங்கி
பார்முழுதும் பவனிவரும்
பூவரசே நீ வாழியவே பல்லாண்டு!

— க. ஸ்ரீதாஸ்
(நெதர்லாந்து)

உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம்சொந்தம் என
உரக்கச் சொல்லி
உலகத்தில் உள்ளவர்களைத்
தமிழ் படிக்க வைத்த உனக்கு
இன்று வயது ஐந்தாகிவிட்டது.
இன்னும் இன்னும் புதிய கிளை பரப்பி
புதியவர்களை உன் நிழலில் சேர்த்து
தமிழ்ப்பணிக்கு தாலாட்டுபாடுவாய் பூவரசே!
என்றென்றென்றும் உன் தமிழ்ப்பணி
சிறப்பாக ஓங்கி வளர்ந்திட வாழ்த்தும்
உன் அன்பு வாசகன்.

— கி. சின்னத்துரை
(நூறன்பேர்க், ஜெர்மனி)

## வாழ்த்தும் நெஞ்சங்கள்

*எங்கள் இனிய பூவரசே!*
*ஆண்டுகள் ஐந்தினை நிறைவு செய்தனை.*
*எத்தனை மகிழ்ச்சி!*
*வாழ்த்துக்கள் உங்கள் வெற்றிக்கு*
*வணக்கங்கள் உங்கள் ஒற்றுமைக்கு*
*ஐந்தாண்டுபோல் பன்னூறாண்டுகள் வாழ்க!*
*வாழ்த்தும் நெஞ்சங்கள் வளரட்டும்.*
*வளரும் கிளைகள் படரட்டும்*
*பூத்துக்காய்த்துக் குலுங்கட்டும்*
*நீடூழி வாழ்க!*
*வாழ்க!*

— மாலினி குணராஜன்
(பிறேமன், ஜெர்மனி)

*அணைக்கின்ற கரங்களிலே அரசே!*
*உன் எழில் காண்கின்றேன்-உனை*
*நினைக்கின்ற இதயத்திலே-நாளும்*
*உன் கவிகேட்கின்றேன்.*

*புவிமீதில் என் நாளும் உன் புகழ்பாடிடும்*
*சேவையை மறப்பேனோ? -உந்தன்*
*மடிமீது சேய்போல் தினமும்நான்வாழ*
*நீ எனை அழைத்தாயோ!*

*தேன்தமிழ் மொழியே உன்திருநாமம்*
*என்பதும் உண்மையன்றோ? உன்புகழ்*
*வான் மீதும் ஒலித்திட வனப்புடன் இலித்திட*
*வாயார வாழ்த்துகிறேன் என்றும்*
*வாழிய நீ பல்லாண்டு!*

— சக்திபாலா
(பிறேமன், ஜெர்மனி)

'அகரமுதல எழுத்தெல்லாம்
ஆதிபகவன் முதற்றே உலகு!'

ஐந்தாண்டு நிறைவிலும்
ஐம்புலன்களின் ஆக்கத்துடன்....

அகரம் எழுத்துக்களுக்கு அடியானது
அகிலம் ஆண்டவனுக்கு அடிமையானது
அகிலத்தின் (மேற்கு) ஜெர்மனியிலே
அந்நியமொழி பேசும் நாட்டினிலே
அந்நியரான எம்மத்தியிலே
ஆண்டவனை முதலில் போற்றி
அவனையே அடிபணிந்து. அகரத்தை முதலாக்கி
இடையில் மற்றைய எழுத்துவகை துணையாக்கி
இலக்கணத்தைத் தெளிவான சொல்லாக்கி
இலக்கியத்தைத் தேமதுரச் சுவையாக்கி
ஈழத்தில் உதித்த இந்துமகேஷின்
உந்தலில் எழுந்த சிந்தனை விதையாகி
ஊக்கமது கொண்ட சிலர் முயற்சியில் உருவாகி
எழுத்தாளர் பேனா மையினால் துளிர்விட்டு
ஏராளம் வாசக நேயர்களால் கிளைபரப்பி
ஏடொன்று 'பூவரசு' என நாமம் சூடி
ஐக்கியமாய் நாம் இந்த மண்ணில் -- நம்
மண்ணின் சிந்தனையுடன் நல்லபடி வாழ நிழல்தந்து
ஒன்றுடன் நான்கு வருடங்கள் விருட்சமாகி
ஓங்கியே நேராக பெருமரமாகி
ஒளி ஓசை சுவை ஊறு நறுமணம் கொண்டு
ஐந்து மலர்களும் முப்பத்தாறு இதழ்விரித்து
வாசனை வீசியது.
'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றமென்ற ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு'

ஐம்புலன்களின் நல்லாக்கத்தில்
வல்லமையுடையோன் அறிவியலில்
ஆறாவது ஆண்டிலும் காலடி பதிக்கும் வேளையிலே
ஐந்தாவது ஆண்டின் நிறைவு மலர் ஒன்று
நறுமண வாசனையுடன் புதுமெருகு கொண்டு
மொட்டவிழ்கின்றது.

'நலம் வேண்டும் நாணுடைமை வேண்டும்
குலம்வேண்டின் வேண்டுக யார்க்கும் பணிவு'
தமிழ்மொழி தழைக்கவே
நலமுடன் நம் குலம் வாழவே
நாணமுடை யோனாய் பணிவுடன் ஆற்றிய சேவையே
ஐந்தாவது ஆண்டு நிறைவிலும் 'பூவரசு'
மலரொன்று பூத்துப் புதுப்பொலிவுறுகிறது..
ஐந்தாவது நிறைவு மலரை முகர்ந்து
அக்களித்து மகிழும் வேளையில்
களிப்புடன் மேலும் நீ சிறக்க, நெஞ்சார வாழ்த்தி
ஆண்டவன் வழியால் போற்றுகின்றோம்.

— திருமதி புஷ்பராணி ஜோர்ஜ்.
(ஹம். ஜெர்மனி)

•

தீபங்கள் அனுப்பிய பூவரசு இதழ்கள் கிடைத்தன.
மகிழ்ச்சி! நன்றி! பூவரசு தரம் மேலோங்கி இருக்கின்றது.
ஒரு பொழுது போக்கு ஏடாகிடாமல்
எழுந்து நிற்கும் ஏடாகவே உள்ளது.
தொடர்க உங்கள் தொண்டு!
வெல்க அரும்பணி!

எஸ்.அருணாசலம்.
(பகாவ், மலேசியா).

•

பூவரசின் வேரின் வாசத்தில் இருந்து பூக்களின்வாசம்வரை (சு)வாசிக்கும் வாசகர்களில் நானும் ஒருவன். பூவரசு ஆண்டுகளை மட்டும் நிறைவு செய்வதோடு நின்றுவிடாமல் ஆழ்ந்த அனுபவ எண்ணங்களையும் நிறைவு செய்து கொண்டிருப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி. நல்ல ஆக்கதாரர்களோடும், நல் ஆசிரியர் இந்துமகேஷின் கைவண்ணத்தோடும் மலர்ந்துவரும் பூவரசு கதை, கட்டுரை, கவிதை, சந்திப்போம் சிந்திப்போம், இலக்கிய முத்துக்குளியல் இன்னோரன்ன அம்சங்களினூடே ஆரோக்கியமான சிந்தனைகளை வளர்ப்பதோடு புலம்பெயர்ந்த தமிழினம் தடம்புரண்டுபோகாமல் தமிழ் தொண்டாற்றி வருகின்ற பூவரசு தன் ஐந்தாண்டு நிறைவினைக் கொண்டாடும் வேளையில் என் இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்.

செ. யோகநாதன்.
(பிறேமன், ஜெர்மனி.)

எங்கள் இனிய தமிழ் ஏடே !
ஐந்தாண்டுகள் நிறைவு கொண்டாய்.
இன்னும் பல்லாண்டுகாலம் நீ உன் பணிகளைத்தொடர்வாய்!
கலை, இலக்கியம் என்று ஆரம்பித்து எத்தனையோ கலைஞர்கள்
படைப்பாளர்கள் தம் திறமைகளை வெளிக்கொணர இடமளித்தாய்.
இடமளித்துவருகிறாய்.
எங்கே வாழ்ந்தபோதும் உன்னை மறக்க முடியா வண்ணம்
எங்கள் கரங்களில் தவழும்
இனிய தமிழ்ஏடே! பூவரசே!
என்றும் நீ வாழ்க!
இனிய தமிழ்போல் என்றென்றும் நீடுவாழ்க!

**-திருமதி பத்மாதேவி ஞானப்பிரகாசம்.**
(அவுஸ்திரேலியா.)

எங்கள் இனிய பூவரசே!
உனக்கு வயது ஐந்துதான்.
ஆனால் நீயோ ஐம்பது வயதுக்கிழவியைப்போல்
அநுபவச்செல்வங்களை அள்ளி வழங்கிவிட்டாய்.
சஞ்சிகை உலகில் சரித்திரம் படைக்கிறாய்.
பல்லாண்டுகாலம் நீ தமிழ் மக்களுக்குச் சேவை செய்ய
நூறன்பேர்க் தமிழ் வாசகர்கள் உன்னை வாழ்த்துகிறோம்.

**வி.எம்.குலராசா.**
(நூறன் பேர்க், ஜெர்மனி)

படைப்பவர் ஆக்கமும்
படிப்பவர் ஊக்கமும்
வளர்த்திடும் உங்கள் பூவரசை!
இதயம்கனிந்து வாழ்த்தினையளித்த
இதயங்களுக்கு எம்நன்றி!
**— ஆசிரியர்.**

# பண்பாடு - கலாச்சாரம் - நாகரீகம்.

*22.10.1994 சனிக்கிழமை பகல்*

*திரு செ.இலங்கையன் அவர்களின் அழைப்பின் பேரில் விக்ரோறியாப் பாக் இடைநிலைப் பாடசாலையில் தமிழ்படிக்கும் மாணவர்களுக்குச் சொற்பொழிவு ஆற்றச் சென்றிருந்தேன். திரு இலங்கையன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு பொ.கனகசபாபதி, திரு.கந்தவேள் ஆகிய தமிழ்புகட்டும்பெரியார்களும் கலந்துகொண்டார்கள்.*

*பேச்சு முடிவில் கேள்விநேரம். கேள்விகளுள் ஒன்று பண்பாடு பற்றியது. மாணவர்கள் சிலர் பண்பாட்டுக்கும் கலாச்சாரத்துக்குமுள்ள வேறுபாட்டை நன்கு விளங்கிக்கொள்ளவில்லை என்பது தெரியவந்தது.அவர்களுக்கு அன்று கொடுத்த சுருக்கமான விளக்கத்தைப் பலரதும் பயன்கருதி இக்கட்டுரையில் விரிவாக்க விழைகின்றேன்.*

**-மதுரகவி வி. கந்தவனம்.**

பொதுவாகவே பண்பாடு,கலாச்சாரம்,நாகரிகம் ஆகிய சொற்களை ஒருபொருட்சொற்கள் என்ற பாங்கில் நாம் பேசியும் எழுதியும் வருகின்றோம் நுணுகி நோக்குமிடத்து அவை வேறுபடும் பொருளுடையன என்பது புலனாகும்.

தமிழர்வாழ்க்கை அக ஒழுக்கம் புற ஒழுக்கம் என்னும் பாகுபாட்டின் அடிப்படையில் நிகழ்ந்துவந்திருக்கின்றது.

அகம் உள்ளார்ந்தது. புறம் வெளிசார்ந்தது.

அகம் வீட்டு நிர்வாகம் பற்றியது. புறம் நாட்டு நிர்வாகம் தொடர்பானது. இரண்டும் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பவை. வீட்டுநிர்வாகம் குன்றின் நாட்டு நிர்வாகம் பாதிக்கும். நாட்டு நிர்வாகம் பிழைக்கின் வீட்டு நிர்வாகம் சீர்குலையும். ஒன்று இன்பத்துப்பால். மற்றது பொருட்பால். இரண்டுமே அறங்காத்தலை நோக்காகக்கொண்டவை.

அகம் உள்ளத்தோடு தொடர்புடையது. அதனால் அன்புக்குரியது. புறம் மூளையுடன் தொடர்புடையது.அதனால் அறிவுக்குரியது. இதனைக்கொண்டு அகவாழ்வுக்கு அறிவு முக்கியமில்லை என்று கருதலாகாது. அகவாழ்வில் அன்பு முதலிடம் வகிக்கின்றது.அவ்வளவே. அதுபோல புற வாழ்வில் அறிவுக்கு முதன்மை வழங்கப்படுகின்றது.

பண்பு அறிவியலிலும் அகவியலுடனேயே நெருங்கிய தொடர்புடையது. அதாவது அது உள்ளத்துடன் உறவாடுவதொன்றுஉள்ளம் உணர்ச்சிகளின் பிறப்பிடம். உணர்ச்சிகளும் பலவகைப்படும். நல்லுணர்ச்சிகளில் தலையாயது அன்பு உணர்ச்சி. அன்பு பாராட்டுதல் என்பது நல்ல ஒழுக்கத்தின் அடிப்படையில் அமைதல் வேண்டும்.
ஒழுக்கம் இல்லாதவர் அன்பு ஓட்டைப்பானையில் உள்ள பாலைப்போன்றது. அதனால், அன்பும் ஒழுக்கமும் உள்ளவரே பண்புடையவராகின்றார்.

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.
என்பது திருவள்ளுவர் வாக்கு.
உயர்ந்த குடிப்பிறப்பு ஒழுக்கத்துடன் கூடியது.
பண்பு என்னும் பதம் வண்ணம், வடிவு, அளவு, சுவை ஆகிய நாற்குணங்களையும் மற்றும் அழகு, வகை,முறை, செய்கை போன்ற பிற பொருள்களையும் குறித்து நிற்பினும் ஒழுக்கம் அல்லது நல்லியல்பு என்ற உளம்சார்ந்த பொருளிலேயே அது பெரிதும் வழங்கப்படுகின்றது.

'பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்' என்னும் முதுமொழியும் இப்பொருளையே வலியுறுத்துகின்றது.
ஆங்கிலத்தில் manner என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று person`s way of behaving towards others என்பது (Oxford Advanced Learner`s Dictionary of Current English- A S Hornby). இது பாடறிந்து ஒழுகல் என்பதுடன் மிகவும் பொருந்தி நிற்பது கவனிக்கத்தக்கது.

பாடறிந்து ஒழுகலாவது, பிறர் இயல்பறிந்து நடத்தல். பாடு — முறைமை, நிலைமை, இயல்பு, உலக ஒழுக்கம். எனவே மற்றவர்கள் மதிக்கத்தக்க வகையில் நற்குண நல்லியல்புகளுடன் ஒழுகுதலே பண்பு எனப்படுவது. இத்தகைய பண்பின் இயல்பு அல்லது முறைமை பண்பாடு எனப்படும். தமிழர் பண்பாடு என்னும்பொழுது தமிழரது மேலான இயல்புகள்,தமிழரது ஒழுக்க முறைமை அல்லது அக வாழ்வின் தன்மை என்பதே பிரதான கருத்தாகின்றது.

கலாச்சாரம் என்றால் ஏதோ ஆடல் ,பாடல், முதலாய நுண்கலைகளுடன் மட்டுமே சம்பந்தப்பட்டது என்று பலர் கருதுவது போலத் தெரிகின்றது. அது அத்தகைய கலை வளர்ச்சிகளுடன் மனிதனின் பிறதொழில் முறைகளின் வளர்ச்சியையும் உணர்த்தி நிற்கும் தன்மையுடையது.
Culture என்பதற்கு ஓரளவு இணையானது கலாச்சாரம்.

கலை என்பது கல்வியைக்குறிக்கும். அதனால் அது அறிவுசார்ந்த புற வாழ்வுக்குரியதாகின்றது.

கலாச்சாரம் என்னும் வடமொழி அறிவாலாகிய ஆக்கங்களின் கூட்டு மொத்தமான விளைவுகளை அல்லது பயன்களை உள்ளடக்குகின்றது.
ஆட்சிமுறை,கட்டிடக்கலை, தொழில் நுட்பம், கைத்தொழில்கள், பயிர்ச் செய்கை, உற்பத்திப் பொருட்கள், நுண்கலைகள் என்பன மனிதனின் புறம் சார்ந்த முயற்சிகளுக்கான சில உதாரணங்கள்.

பண்பாடும் கலாச்சாரமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையன என்பதனை மறக்கலாகாது. பண்பாட்டைச் சுற்றியே கலாச்சாரம் வளர்ந்திருக்கின்றது.
அதாவது பண்பாட்டின் தேவைகளை நிறைவேற்றவே கலாச்சாரக் கூறுகள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன.
கல்யாணம் முடிக்கும்வரை கற்பினைப் பேணுதல் பண்பாடு. கல்யாணச் சடங்குமுறைகள் கலாச்சாரம். கூடிவாழ்ந்து இல்லறம் நடத்துதல் பண்பாடு. அத்தகைய வாழ்க்கைமுறைக்கென்று வீடு ஒன்றைக்கட்டுதல் கலாச்சாரம்.
காலையும் மாலையும் கடவுளைத்தொழுவது பண்பாடு. அவ்வித வழிபாட்டுக்குரிய ஆலயம் ஒன்றைச் சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைத்தல் கலாச்சாரம்.

ஓர் இனத்தின் வாழ்க்கையை அல்லது வளர்ச்சியை மதிப்பிடுகையில் அந்த இனத்தின் பண்பாடு,கலாச்சாரம் ஆகிய இருகூறுகளின் தன்மைகளும் நன்கு ஆராயப்படுதல் வேண்டும்.
பண்பாடும் கலாச்சாரமும் சேர்ந்தது நாகரிகம்.
மனிதகுலம் விலங்குசார்ந்த நடைமுறைகளிலிருந்து விடுபட்டுப் படிப்படியாக முன்னேறிப் பண்பாலும் அறிவாலும் விருத்திபெற்ற வளர்ச்சியை நாகரிகம் குறித்துநிற்கின்றது.
சிந்துவெளி நாகரிகம் என்று சொல்கின்றபொழுது, சிந்துவெளி மக்களின் பண்பாடும் கலாச்சாரமும் கலந்த மொத்த வளர்ச்சியையே கருதுகின்றோம்.
Civilization என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு ஈடானது நாகரிகம் என்னும் சொல்.இதனைச்சிலர் நாகரீகம் எனப் பிழையாக எழுதுவதுமுண்டு.

இந்த நாகரிகத்துக்கும் 'பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்' என்னும் திருக்குறளில் வரும் நாகரிகத்துக்கும் பெரும்வேறுபாடுண்டு. 'நயத்தக்க நாகரிகம்' என்பது பலரும் விரும்பும் கண்ணோட்டம். கண்ணோட்டம் என்பது இரக்கம்.

மேலும் பரந்த அளவிலன்றித் தற்காலிக கலாச்சாரப் போக்குகள்,மாற்றங்கள் என்பவற்றைக் குறிக்கவும் நாகரிகம் என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது.
உதாரணம்,— தற்கால இளம்பெண்கள் மத்தியில் ஆடைக்குறைப்பு ஒரு நாகரிகமாக வளர்ந்துவருகின்றது. இவ்விதமான சந்தர்ப்பங்களில்fashion என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான பொருளை நாகரிகம் குறிக்கின்றது.

இதுகாறும் கூறியவற்றால், பண்பாடு என்னும் பதம் நல்லுணர்ச்சி, உயர் ஒழுக்கம், நற்குணம் முதலாய அகம்சார்ந்த தன்மைகளைக் குறிக்கும் என்பதும் கலாச்சாரம் என்னும்சொல் புறம்சார்ந்த அறிவுத் தொழிற்பாடுகளை உணர்த்தும் என்பதும் பண்பாடும் கலாச்சாரமும் சேர்ந்ததே நாகரிகம் என்பதும் விளக்கப்பட்டன.

□□□

**அடுத்த இதழில் ஆரம்பம்!**

உங்கள் அபிமான எழுத்தாளர்

**இராஜன் முருகவேல்** எழுதும்

# கைக்கெட்டாத கைமாத்துக்கள்.

(தொடர்கதை.)



# எழுவதற்கே எழுத்து

சொற்களை சோம்பேறியாக்கினோம்!
இனி எழுத்துக்கள் எழாது.
மரணப்பெட்டிக்குள்
மயானத்தையா புதைப்பது?
இதுதான் நடக்கிறது.
எழுவதெல்லாம் வீழ்ந்துவிட்டது!
இனி எழுவதற்கு ஏதுமில்லை.

சொற்கள்.
சோம்பல் முறிக்கட்டும்!
புதைந்துக் கிடந்த
தூவல்கள் துகிலுரிக்கட்டும்!
ஒரு புரட்சி வெடிக்குள்
நெருப்பாய் மலரட்டும்!

படைப்பாளர்கள்.
படுப்பவர்களல்லர்!
எழுபவனே எழுத்தாளன்.

மரணித்த செய்திகளை
மீண்டும் ஏன் சலவை செய்கிறாய்?
போதும்போதும்
புரட்சிக்கும் நெருப்புக்கும்
ஒரு புள்ளிதான்!

*—எஸ். அருணாசலம்*
(மலேசியா)

# விதைத்தாய்! அறுப்பாய்! — எழிலன்.

நாம்காணும் மனிதர்களெல்லோரும் நம் நண்பர்களில்லை.
நம் நண்பர்கள் என்பாரும் நிலைத்திருப்பதில்லை.
நம் அன்றாட நினைவுகளோடு நம்மையும் அறியாமல் சில அந்நியர்கள் ஒட்டிக்கொண்டு இருப்பார்கள்.

ஏன்? எதனால்? அவர்களுக்கும் நமக்கும் என்ன தொடர்பு?
— இப்படியான கேள்விகளுக்கெல்லாம் நமக்கு நியாயமான பதிலைக் கண்டு கொள்ள முடியாமல் தடுமாறுவோம்.

எங்கேயோ யாரோ ஓர் ஆபத்தில் சிக்கிக் கொண்டதாகக் கேள்விப்படுவோம். மனம்தாளாது. பெரும் கவலையும் சங்கடமும் நம்மை ஆட்கொள்ளும்.

திரைப்படமொன்றைப் பார்த்துக்கொண்டிருப்போம். அதில் ஒரு குடும்பம் அநியாயமாகக் கெட்டவர்களால் பெரும்துன்பங்களை அனுபவித்துப் பதறிக் கொண்டிருக்கும். முடிவில் குடும்பத்தலைவன் மடிவான். தலைவி அவனின் பொறுப்பை ஏற்று முயற்சிப்பாள். அவளுக்கு வரும் பெரும் பெரும் சோதனைகள். பசிக் கொடுமையுடன் பாவிகள் அவளது கற்புக்கே பெரும் ஆபத்தைத் தர முயல்வார்கள். அவள் தாளாத் துயருடன் தற்கொலை செய்து கொள்வாள். அவளது குழந்தைகள் அனாதைகளாகச் சிதறி அலைய... இப்படிக் கதைநீளும். நமது விழிகளில் நீர் பொங்கும். துக்கம் நெஞ்சை அடைக்கும்.

உண்மையில் அது வெறும் கற்பனைக்கதைதான் என்று நமக்கு நன்றாகத் தெரியும். நடப்பதும் உண்மையல்ல வெறும் நடிப்புதான் என்றும் தெரியும். அனைத்துக்கும் மேலாக அது வெறும் படம்மட்டும்தான் என்பது தெட்டத் தெளிவாகவே தெரியும். அப்படியும் நம்மால் தாங்க முடியவில்லையே! அது ஏன்?நடிகரின் திறமைதான் காரணம் என்று விட்டுவிட முடியாது.ஏனென்றால் முற்றிலும் புதுமுகமாக அவர் இருப்பார்.

உங்களுக்கும் எனக்கும் அதாவது நமக்கு இந்த அனுபவம் நிச்சயமாகப் பல தடவைகள் இருந்திருக்கும். இதைத்தான் மனிதம் என்கிறார்கள். மற்றவர் துயரை நம் மனம் தனதாய்க்கருதி — மற்றவர் துயரில் கலந்து கொள்ள விழைகின்றது. இது அன்பினாலா? அல்ல! அறிமுகத்தாலா? அல்ல! ஏதாவது எதிர்பார்ப்பினாலா? அல்லவே அல்ல!

அப்படியானால்? அதற்கான அடிப்படையொன்று வேண்டுமே!
ஆம் அதுதான். அதாவது நானே அனைத்தும். அனைத்திலும் நானே என்பது.

அதாவது நானே நீயாகவும் நீயே நானாகவும் இருப்பதால் அனைத்தும் நாமாக இருக்கின்றோம். இந்த உண்மை நம்மையும் அறியாமலே நம்முடன் கலந்திருக்கின்றது. நம்மிலே கலந்திருக்கின்றது. இதுதான் இயற்கையெனும் தெய்வமாய் எங்கும் பரந்திருக்கின்றது. இதை ஏற்றுக்கொள்ளும் தெளிவு அற்றோன் இயற்கையில் பேதம் காண்பான். அவனது மனம் இயற்கையை உணராது. அதாவது இறைவனை உணராது. அதனால் அவன் இறைவனை உருவகப்படுத்திக்கொள்கிறான். தனக்குச் சரியென ஒன்றை ஏற்கும்போது தானாகவே மற்றதை எதிர்க்கும் மனப்பான்மை வளர்ந்து விடுகின்றது.

அவன் தனது நம்பிக்கையைத் தனித்தவப்படுத்த விழைகிறான். மதம் பிறக்கிறது. அதைவிடாப்பிடியாகப் பிடிக்கப்பிடிக்க அதுவே அவனைப் பிடித்துக்கொள்கிறது.
இயற்கையாகவே பிறர் துன்பம் கண்டு துவண்டவன். பிறர் துயர் கேட்டு அழுதவன் தன்னைப் பிடிக்காத மற்றவனைத் தன் எதிரியாய்க் கருதிவிடுகிறான்.

தான்செய்வதில்தான் நன்மைவரும் என்றும் மற்றவன்செய்வதில் தீமைவரும் என்றும் அவன் சிந்தனையை மாற்றிச்சிந்திப்பதால் பாவம் — புண்ணியம் என செய்கைகளை வகுக்கிறான்.
ஆனால் அவனோ புண்ணியம்போல் பாவமே செய்கின்றான் என்பதை உணர மறுக்கின்றான். பிறரை நினைக்காதவன், பிறருக்காய் உழைக்காதவன், பிறர் துயர் கருதாதவன், பிறர் பசிக்குதவாதவன் எல்லாம் கோவிலில்கூடிவிட்டால் புண்ணியம் சேர்ந்துவிடும் என்று கூடிநின்று கத்திக் கும்மாளம் போடுகின்றான். நடப்பதென்ன?

இயற்கையை ஏமாற்றித் தன்னைக்காத்துக்கொள்ள அவனது செயற்கையான சிந்தனையானது வெறுமையில் உருவம் தேடி ஏமாந்து நிற்கின்றது.

வானத்தில் பறந்திடும் குருவியோ வனத்தினில் மேய்ந்திடும் குதிரையோ நம்போன்று தெய்வத்தைத்தேடி ஓடவில்லை.காரணம் — அவை இயற்கையை அனுசரித்து நடப்பதால் அது தேவைப்படவில்லை.


அறிவென்று சொல்லி இயற்கையை மீறினோம். அவதிகள்வந்து நம் நிம்மதி இழந்தோம். நம் வழிக்கு இழுக்கப்பட்ட கடலும்கூட நஞ்சாகிப்போயிற்றே!
தானாக வாழாமல் நானாக அகந்தைகொண்ட மனிதம் தானாக அழிவில் விழுந்துகொண்டிருக்கின்றது.

இவ்வுலகில் பிழை செய்ததால் நீ அழிய நின்றாய்.
இப்போது மறுவுலகிற்கு 'விசா' வழங்கும் பணிசெய்ய வந்தாய்!

ஆவதெல்லாம் அழியும். அது இயற்கை. நீ அழிக்கின்றாய்.அது செயற்கை. அதனால்தான் உனது கல்வி உலகின்அமைதிக்கு அச்சுறுத்தலாகி யிருக்கின்றது இயற்கை அமைத்ததை மாற்றும்.அதற்கந்த சக்தியுண்டு. உனக்கு? அந்தோ பரிதாபம்! விதைத்தாய்! அறுப்பாய்!

முதற்பரிசுச் சிறுகதை

# ஒரு கலைஞன் காவியமாகிறான்



— பவன் கணபதிப்பிள்ளை.

மயிலின்மேலே கந்தன் அமர்ந்த திருக்கோலம் வரைந்த திரைச்சீலை மூலஸ்தானத்துக்கு முன்னுள்ள வாசலை மறைத்தது. சுவாமிநாதக்குருக்கள் மதியபூசைக்கு தயாராகிக்கொண்டிருந்தார். ஊரின் மையத்தில் மூன்றடுக்குக்கோபுரத்தோடு கம்பீரமாய் உள்ள முருகன் ஆலயம். தினப்படி மூன்று வேளைப் பூசை நடந்தாலும் வெள்ளிக்கிழமைகளில் விசேடமாய் நடக்கும். பகல்பொழுதில் எழுந்தருளி ஆறுமுகன் உள்வீதி வலமும் இரவில் வெளிவீதி வலமும் வரும் காட்சியை காண...

அது எழுத்தில் விளக்கமுடியாத கண்கொள்ளாக்காட்சி!

இன்று வெள்ளிக்கிழமையானதால் ஒருகை மணி ஒலிக்க பூசைக்கு தயார் என குணசாமிப்பிள்ளையின் நாதஸ்வரமும் காற்றில் கலந்து இழைந்தது. இறைவன் ஒருஇசைப்பிரியன்என்பதாலோ பக்தர்களுக்குஅறிவிப்பதற்காகவோ மங்கள இசையும் ஒலிக்கும். பிரபலவித்துவான் தவநாதனிடம் தவில் பழகிக்கொண்டிருக்கும் கோகுலன் பயிற்சிக்காய் இங்கு தவில் இசைக்க தவநாதனின் இன்னுமொருசீடன் இருவருக்கும் சஞ்சா(தாளம்) போடுகிறான். இவர்கள் மூவரும் ஆஸ்தான மங்கல இசைக்குழுவினர். நிரந்தரமாய் மாதச்சம்பளம் நிர்வாகசபைமூலம் வழங்கப்படும். வெளியிலிருந்து விசேட குழுக்கள் வராத நாட்களில் வீதிவலம் வரும்போதும் வாசிப்பார்கள். ஒரு நாதஸ்வரம் என்பதால் சுதிப்பெட்டிபோட ஒருவரையும் சேர்க்கவில்லைப் போலும்.

தவில் இசைத்த கோகுலன் வாசிப்பை நிறுத்தி,

"அண்ணை... எங்கையோ துவங்கி எங்கையோ இழுத்துக்கொண்டு போறீங்கள்" என்று சொல்லி வலதுகையில் அணிந்திருந்த கூடுகளையும் வளையங்களையும் இடதுகையால் சரிப்படுத்திக் கொண்டு தொடர்ந்தான். கோகுலனின் கோபவார்த்தைகளை ஏற்று தன் தலை அசைத்து மன்னிப்புக் கோரிய நாதஸ்வரக்காரருக்கு வயது அறுபத்தி ஐந்து.

வெள்ளைமுடியும் திருநீறுஅப்பிய நெற்றியும் வயோதிபத்தைப் பறைசாற்றும் உருவம்.

அவர் நாபியிலிருந்து எழுந்த மூச்சு வாய்வழியால் நாதஸ்வரத்தை நிரப்பி கைவிரல்களின் அசைவுக்கு ஏற்ப நெளிந்து வளைந்து வெளியேறும்போது நாதமாய் அந்த சுற்றுப்புறத்தை மயங்கவைக்கும். என்னவோ தெரியவில்லை. அவருக்குக் கொஞ்சநாட்களாகத்தான் இப்படியான குழப்பங்கள். வாசிக்கும்போது சிலசமயங்களில் தடுமாறுகிறார்.

பூசைமுடிந்து குருக்கள் பிரசாதம் வழங்கி கோகுலன் ராமு இருவரும் போய்விட்டார்கள். குணசாமிப்பிள்ளையும் ஆறுதலாய் தன் 'நாயனத்தை' உறையிலிட்டு களஞ்சியஅறைக்குள் இருந்த தவில் அருகே வைத்துவிட்டு தேர் கொட்டகைக்கு அருகே நிழல்பரப்பி நிமிர்ந்து நிற்கும் வேப்பமர வேரில் அமர்ந்தார்.

மாலை நேரத்து சிம்மாசனம் அதுதான். ஆனால் இன்று முன்னதாகவே வந்து அமர்ந்துவிட்டார்.

கோகுலன் வார்த்தைகள் மனதை வாட்டியது.

அவன் தந்தை சண்முகம் இன்று நாடறிந்த நாதஸ்வர மேதை.
நாற்பது வயதான சண்முகம் தன் பத்துவயதில் சிட்சைபெற்று தொழில் கற்றது குணசாமிப்பிள்ளையிடம் என்பது பலருக்குத்தெரியாது.
அதிகம் ஆர்ப்பாட்டம் இல்லாத ஞானவான்.
வித்தையைக் கொடுத்த கடவுள் விதியையும் தன் இட்டத்திற்கு எழுதி விட்டதே. இல்லாவிட்டால் அவர் தொழில் தொடங்கிய காலங்களில் சிறு ஓலைக்கொட்டகையில் இருந்த முருகன் இன்று பாரிய மண்டபங்கள், வாகனசாலை, இராஜகோபுரம் என பணக்காரனாகிவிட அவர் மட்டும் நேற்றுப்பிறந்த சின்னப் பெடியனிடம் குற்றம்கேட்க வேண்டியிருக்கிறதே!
அவர் உறவுக்கார சிறுவர்களில் எவருக்கும் கிடைக்காத வாய்ப்பு உலகப் புகழ்பெற்ற கும்பகோணம் கணேசமூர்த்தியாரிடம்தான் சிட்சை. அதுவும் குருகுல முறையில் தொண்டுசெய்தே பயின்றவர். தந்தையின் கட்டளைப்படி பன்னிரண்டு வயதில் ஐந்தாவதோடு படிப்பை நிறுத்திவிட்டு தலைமன்னார் துறையில் கப்பலேறியவர் இருபது வயதில்தான் நாடு திரும்பினார்.
'தீவெட்டிப்பய' என்ற கணேசமூர்த்தியாரின் திட்டுக்களையும் அவரிடம் வாங்கிய குட்டுக்களையும் நினைத்தால் இப்பொழுதும் மண்டை கலங்கும்.
பதினெட்டுவயதில் குருநாதரின் ஏற்பாட்டால் மதுரை மீனாட்சி சன்னிதானத்தில் அவர் அரங்கேற்றத்திற்கு இராஜாஜி தலைவர். குரு மகிழ வாசித்ததில் குருவே கட்டித்தழுவி தன் கழுத்தில் இருந்த ஐந்துபவுண் சங்கிலியை குணசாமிப்பிள்ளைக்கு போட்டுவிட்டதில் தன் உயிராய் நினைத்து வாழ்ந்தார். எப்படிக்கஷ்டங்கள் ஏற்பட்டாலும் அடவு கடைக்குப் போகாத ஒரே சொத்து அதுதான்.
'மந்திரதந்திரக்கதைகளில் மந்திரவாதியின்உயிர் கிளியிலோமயிலிலோ இருப்பது போல் உங்கள் உயிர் அந்தச் சங்கிலியில் இருக்கிறது!' என பாக்கியலட்சுமி கேலிசெய்வாள்.
அரங்கேறியபின் தன்னோடு வாசிக்க இரண்டு வருடங்களுக்கு வைத்திருந்த ஒரே சீடன் கணேசமூர்த்தியாரின் பாராட்டைப்பெற்ற குணசாமிப்பிள்ளைதான்.
ஆனால் இப்போ...?

குணசாமிப்பிள்ளைக்கும் இளமை வளமாய்த்தான் இருந்தது.
அவர் வீட்டில் இருந்து சாதகம்பண்ணுவதைக் கேட்டே மனதைப் பறிகொடுத்தவள் பாக்கியலட்சுமி. பதினெட்டுவயதுப் பாடசாலை மாணவியாய் இருந்தாலும் அவளது நடை உடைபாவனைகளும் பண்பும் இறைபக்தியும் அவரைக் கவர்ந்ததில் வியப்பில்லை. எந்த ஆடவனும் ஆடம்பரமான பெண்களுடன் பேசிப்பழகினாலும் அமைதியான அடக்கமான அழகான பெண்ணைத்தான் வாழ்க்கைத் துணையாக்க விரும்புவான்.
இருவர் மனமும் இணைந்தாலும் பாழாய்ப்போன குலம் விடுமா? இசைவேளாளரான பிள்ளை விவசாய குடும்பப்பெண்ணைக் கைப்பிடிக்க சமூகம் ஊர் தடைபோட்டது. அதனால்தான் புரட்சித்திருமணம் நடாத்தி தங்களை வாழ அனுமதிக்காத ஊரைவெறுத்து இந்த ஊருக்குக் குடியேறியவர் அவர். இவர் உறவுக்கார வித்துவான்கள் சிலர் தங்கள் குழுக்களில் சேர்ப்பதில்லை. ஆனால் திறமை பிறமேதைகள் எல்லோரும் அவரைக் கொண்டாட வைத்தது.

முப்பது வருடங்களுக்குமுன் பிள்ளை தங்களுடன் ஒரு கச்சேரி வாசித்தால் பிறவிப்பயன் பெறுவோம் என்று அவரது வீட்டில் காவலிருந்தவர்கள் இன்றும் ஆயிரக்கணக்கில் பேரம்பேசி விலாசமாய்த்தான் இருக்கிறார்கள்.
ஒவ்வொரு திருவிழாக்களும் முன்பு போட்டி போட்டு நடப்பது தீவகப் பகுதிகளில்தான். அப்போதெல்லாம் அவர் அங்கேயே தங்கியிருந்து சேவகம் பார்க்கவேண்டிவரும். அன்றே ஆயிரங்களைப் பார்த்த தன் புகழைக்கண்டு தானே பயந்த ஒரே வித்துவான் பிள்ளை அவர்கள்....
இந்த வேப்பமரத்தின்கீழ் ஆதரவுக்கோ உறவென்று சொல்லவோ ஒரு ஆளுமின்றி....
"முருகா! இன்னும் எத்தினை நாளைக்குத்தான் என்னை உலைக்கப் போறியோ?"
— அவரையும் மீறி அவர் எண்ணங்களை வாய் வெளியிட்டுவிட்டது.
"என்ன குணம் ..உலைக்கிறது அலைக்கிறது எண்டு சலிக்கிறாய்?"
கேட்டது சாமிநாதக்குருக்கள்.
ஆலய பிரதம பூசகர்.
இருவரும் ஒரேவயது.அதைவிட பிறந்துவளர்ந்ததும் பாடசாலைசென்றதும் ஒன்றாய் ஒரே ஊரில்.
சுவாமிநாதரின் தாய்வழிப்பாட்டன் ஊர் குணசாமிப்பிள்ளைக்கும் தாய்மண்.
முன்பு சர்மா. இப்போ குருக்கள்.
வயதும்காலமும் அவர்களின்நட்பையோ அன்பையோ குறைத்துவிடவில்லை.
கொஞ்சம் மரியாதையை ஏற்படுத்தியிருந்தது.இந்தநட்பின்பலம்தான் குருக்கள் மூலம் இந்த ஊருக்குவந்து குடியேற உறுதுணையாய் இருந்தது.
"இல்லைக் குருக்கள்.பழசுகளை நினைச்சுக்கொண்டிருந்தாப்போல வாய் புலம்பி விட்டுட்டன்.. வயசும் போகப்போக அப்பிடி இப்பிடித்தானை.."
— பதிலிறுத்தார் பிள்ளை.
"வேறை ஒண்டுமில்லை..அஞ்சரையாகுது...ஆறுமணிக்குத் துவங்கினாத்தான் ஏழு ஏழரைக்கு சுவாமி சுத்தி திருவிழாவை முடிக்கலாம்...அந்த நாசகார புக்காராவோ சுப்பசொனிக்கோ இப்ப கண்டபடி உலாவாட்டாலும் முந்தி முந்தி செய்த சேட்டையளை மறக்கேலுமே..? வாற சனத்தை வேளைக்கு வீட்டை போகவிடவேணும்.மண்ணெண்ணைத் தட்டுப்பாட்டிலை கனநேரம் ஜெனரேட்டரையும் ஓடவிடேலாது...உம்மையும் ஞாபகப்படுத்திப்போட்டு போய் துவங்குவமெண்டு வந்தன்"
— குருக்கள் தனக்குத்தானேசொல்வதுபோல்சொல்லிக்கொண்டு திருமஞ்சனக் கிணற்றை நோக்கி நடந்தார்.
விரைவில் பிள்ளையும் சென்று முகம் கால் கழுவிவிட்டுப் புறப்படும்போது வயிறு தனக்கொன்றும் பகல்பொழுதுமுழுமைக்கும் படி அளக்கவில்லை என்பதை ஞாபகப்படுத்தியது.
இரவுத் திருவிழாவுக்கும் வாசித்து உபயகாரர் காளாஞ்சி பெறும்வரைக்கும் ஏன் தர்மகர்த்தாசபைக் கணக்கர் கோயில் பூட்டும்போதுதான் வீடு திரும்பினார்.
கோகுலனும் ராமுவும் அரைமைல்தூரத்தில் இருக்கும் தவநாதன் வீட்டிற்கு சைக்கிளில் விரைந்துவிட்டனர். தற்போது வடபகுதித் தமிழர்களின் போக்குவரத்து சைக்கிளை நம்பித்தானே இருக்கிறது.

அவருக்கு தான் தொழில்சிறப்போடு இருந்த நாட்கள் நினைவுவந்தது.
அந்தக்காலத்தில் கொம்பனியில் முன்னூறு பவுணுக்கு (ஒரு பவுண் என்பது 100 ரூபாயைக்குறிக்கும் ஒருசொல் அந்தக்காலத்தில்) புதிதாய் இறக்கிய மொறிஸ்மைனர் அவரும் பாக்கியமும்மட்டும் பாவிப்பதற்கு. சேவகத்துக்கு ஒரு சோமசெற்றும், ஏபோட்டியும். அதற்கு மணியமும் பொன்ராசுவும் சாரதிகள். எல்லாம் தலைகீழானது.
'விதி செய்த வேலை' என்பார் பிள்ளை. நூறுநூற்றைம்பது ரூபாய்வரையில் அவர் செலவுசெய்து அவர்பெற்ற சாரதி அனுமதிப்பத்திரம் கறையான் அரித்து படமே தெரியாமல் போய்விட்டது. அவருக்கு கார் ஓட்டத்தெரியும் என்பதை அறுபதாம் ஆண்டிற்குப்பின் பிறந்த ஆருமே பார்த்திருக்க மாட்டார்கள்.
ஐம்பத்தி ஐந்தில் பாக்கியத்தை கைப்பிடித்து ஐம்பத்தாறில் மீனலோஜனி பிறந்தாள். வாழ்வின் அனைத்துப் பயன்களையும் ஒன்றாய் தாம் பெற்றுக் கொண்டதாய் மகிழ்ந்துவாழ்ந்த நாட்கள்அவை.அழகும் புத்திசாலித்தனமும் கிள்ளைமொழியும் இப்போ நினைத்தாலும் வயிற்றுக்குள் நெருப்புக்கோளம் ஒன்று பிறப்பெடுக்கும்.
மீனுவுக்கு நான்கு வயதானபோது —
ஒரு வெள்ளிக்கிழமைதான் அன்றும்.
முருகன் வீதி உலாவந்து திருவிழா முடிந்ததும் பிரசாதமாய் சர்க்கரைப் பொங்கலும் வாழைப்பழமும் சாப்பிட்டுவிட்டு வந்து படுத்தவள்தான். தென்னிந்திய வித்துவான் காரைக்குறிச்சி அருணாசலத்தை, கொழும்பில் பிரபல தமிழ்வர்த்தகர் தமது சொந்த ஊரான அளவைவிநாயகர் கோயிலுக்கு அழைத்திருந்தார்.அவரோடு சரிநிகர்வித்துவானான குணசாமிப்பிள்ளையையும் அழைத்திருந்தார்கள்.
அதேநாளில் இங்கு பாக்கியமும்மீனுவும் வீட்டில் தனித்திருந்து பாக்கியமும் தனக்குத்தெரிந்த கைவைத்தியமுறைகளில் முயற்சித்தது, கச்சேரி முடித்து தாமதமாய் வந்து படுத்த கணவனை காலைப் பொழுதில் எழுப்பும்வரை குணசாமிப்பிள்ளைக்கு மகளின் வியாதிபற்றி ஒன்றும் தெரிந்திருக்கவில்லை. அவரது குடும்பவைத்தியரான யாழ்ப்பாணம் வெற்றிவேலுவே கைவிரித்து விட்டார்.
யாழ் அரசினர் வைத்தியசாலைக்குகொண்டுபோய் சிகிச்சைக்கு வைத்தியர்கள் முயற்சிக்கு ஏமாற்றிவிட்டாள் மீனு.
பிள்ளையும் மனைவியும் அரை உயிராகிவிட்டனர்.
பாக்கியத்தின் உயிருக்கும் விலைவைத்து தான்தங்கிய கருவறையில் எந்த உயிரும் வாழக்கூடாது, வளரக்கூடாது என கருப்பையையும் செயலிழக்க வைத்துப் பிறந்தவள்தான் மீனு.
அவள் ஒருத்தியே எங்கள் குலவித்து. அவள் நலமாய் நீடூழிவாழவேண்டும் என்ற பிரார்த்தனையோடு தான்அரங்கேறிய மதுரை மீனாட்சியின் பெயர் சேர மீனலோஜனி என்று பெயர் வைத்தார். ஆனால் தெய்வமே தன் தவப்பேற்றை பறித்துவிட்டதென்று பதைத்துவிட்டார். பாக்கியமோ நடைப்பிணமாகி விட்டாள். அவள்முகத்தில் இருந்த மகிழ்ச்சி பொலிவு எல்லாம்போய் நாளடைவில் நோயாளியாகிவிட்டாள்.

மகள் மறைந்த துன்பம் அவரைப் பாதித்தாலும் நிலைதளராமல் ஓரளவு தைரியம் உள்ளவராய் ஒப்புக்கொண்ட கச்சேரிகளை ஒப்பேற்றி வந்தார். மனைவியும் நோயாளியானதும் தன்னைவிட்டு அவளும் பிரிந்துவிடுவாளோ என்ற பயம் வந்தது.
என்ன வந்தாலும் மனைவியைக் காப்பாற்றுவதே அவர் கடமையானது. அதுமுதல்தான் அவர் தொழில், புகழ், வாழ்க்கை, எல்லாம் தடம் மாறியது. வெற்றிவேலர்முதல் இணுவில்செல்லப்பா,கந்தையாவரைஆங்கிலவைத்தியமும் ஆயுள்வேதமுமாய் என்னென்னவோ எல்லாம் செய்தார்கள். மந்திர தந்திரங்கள் பூஜை புனஸ்காரங்கள் எல்லாமே அவர் சொத்தைக்கரைக்க உதவிற்றே தவிர பாக்கியம் எல்லாரையும் ஏமாற்றிவிட்டாள்.
இதற்குள் அவரோடு ஒன்றாய் வாசிப்பவர்கள்,சீடர்கள் என எல்லாரும்விலகிக் கொண்டனர். அவருக்கும் வாழ்க்கைப்பிடிப்பு இல்லாததாகிவிட்டது.அவரை வெறுத்த உறவுகளே அவர் நிலைகண்டு கலங்கி ஆறுதல் சொல்ல வந்தது. சிலர் வேறு திருமணத்துக்கும் வலியுறுத்தியதுண்டு. எவராலும் அவர் மனதைக் கலைக்க முடியவில்லை.

குடியிருந்த வீட்டைத்தவிர இப்போ அவரிடம் குருநாதரின் சங்கிலி மட்டும்தான் மிச்சம். அதனைத் தன் கடைசிச்சீடன் சண்முகத்திற்குப் பரிசு கொடுத்தார். வீட்டை பக்கத்து ஊரில் இருந்த அனாதை இல்லத்திற்கு எழுதிக் கொடுத்து ஒரு சிறு குடிசைபோட்டு தானே சமைத்து உண்டு முருகனின் ஆஸ்தான வித்துவான் இன்று ஊர்க்காரரின் பார்வையில் கோயில் நாயனம்.
மீதி எல்லாம் கால ஓட்டத்தில் மறைந்துபோன அல்லது கடந்துபோன நினைவுகள் அவ்வளவுதான்.

இரவுஉணவும் உண்ணாமல்படுத்ததில் அதிகாலையில் நித்திரைகலைந்தது. காலைக்கடன்களை முடித்து முருகனைத்தரிசித்து உணவு சமைத்து மதியத்திற்கு உண்டதில் பகல் ஒரு மணியாகிவிட்டது.
இன்னும் ஒரு வாரத்தில் வருடாந்த கொடியேற்ற உற்சவம் ஆரம்பம். அதனால் நாளை மறுதினம் பந்தல்கால் நிகழ்ச்சி நடைபெறவேண்டும். அதற்காக இன்று கூட்டம்.தர்மகர்த்தா தயாளந்தர் சொல்லியிருந்தார்.அந்த நினைவில் கோவிலுக்கு விரைந்தார்.
அவர் தொழில் தொடங்கிய நாளிலும்சரி கோவிலுக்கு நிரந்தரமாய் ஊழியம் பார்க்கத்தொடங்கிய நாட்களிலும் சரி கடந்த ஆறுமாதமாக நிகழும் தவறுகள் இந்த நாற்பத்தைந்து வருடங்களிலும் நடந்ததில்லை. இப்போ மீனாவும் பாக்கியமும் வந்த நினைவுகளைக் குழப்புவதில் கற்ற வித்தையும் தடுமாறுகிறது. ஒருவேளை அவர்களை சந்திக்கும் நாள்நெருங்கிவிட்டதோ என நினைப்பார்.
மெதுவாய் கூட்டம் நடக்கும் களஞ்சிய அறைவாசலை அடைந்துவிட்டார். "இனியும் அந்தாளோடை வாசிக்க ஏலாது. அவர் தான் குழம்பி என்னையும் குழப்பிறார். ஆரும் சங்கீதம் தெரிஞ்ச வித்தை தெரிஞ்ச சனம் கேட்டால் எனக்கு வீண் கெட்டபேர். இந்த முறை கொடியேறுற இந்த இருபத்தஞ்சு நாளைக்காவது வேறை ஆரையேன் மாத்துங்கோ!" என்ற கோகுலன் குரலை அணையவிடாமல் இராமுவும்.

"ஓமோம்..எனக்கும் அதே பிரச்சினைதான்!" என்று ஒத்து ஊதினான்.
அவர்கள் சிறு பிள்ளைகள். நாலும்தெரிஞ்ச தயானந்தர்கூட "எனக்கும் விளங்குது அப்பு. மணியமா இருந்து நானும் வந்து பத்து வருஷமாச்சு.. அவ்வளவு காலமா இஞ்ச தொழில் செய்யிற மனிசனை என்னெண்டு நிப்பாட்டிறது."
மனதைத்திறந்து காட்டிவிட்டார்.
சுவாமிநாதக் குருக்கள்மட்டும் நண்பனுக்காய் ஏதோ சொல்ல ஆரம்பிக்க குணசாமிப்பிள்ளை நெஞ்சுபொறுக்காமல் கூட்டத்தில் கலந்து கொள்ளாமலே திரும்பிவிட்டார்.

"முருகா எத்தனை உழைப்பு எத்தனை பக்தியாய் இந்த வித்தை கற்றேன்... என் மனைவி பிள்ளை அனைவரையும் இழந்து தனிமரமாய் உன்பாதம் ஒன்றே நிம்மதி என இத்தனை வருடங்களை தாண்டிவிட்டேன். இன்று என்னோடு என்றும் அழியாத என் செல்வம் என்வித்தை ஒன்றுதான் என நினைத்திருந்தால் இன்று அதனையும் பறிக்கவோ?"
— அவர் உள்ளம் புலம்பி அழுது கொண்டிருந்தது...
மனம் கலைந்ததில் உறக்கம் இல்லை. பசி இல்லை. உடலுக்கோ உணர்வுகளுக்கோ எந்தச் சலனங்களும் இல்லாத சமநிலை. அவர் தொடர் சிந்தனை எங்கோ ஓடி அலைக்கழிந்து ஒரு முடிவு நிலை அடைந்தது போலிருந்தது.
அதனாலேயோ என்னவோ நித்திரையின் ஆட்சிக்கு உட்பட்டுவிட்டார்.

கந்தன் கோயிலின் கண்டாமணியின் ஒலியில் திடுக்குற்று எழுந்தார்...
சரியாக ஐந்துமணிக்கு கோவில் அருகே தேனீர்க்கடை வைத்திருக்கும் வேலுப்பிள்ளையர் வந்து மணி அடித்துவிட்டுச் செல்வார். அதேபோல மாலை ஐந்துமணிக்கும் அடிப்பார்.
இது ஊர்மக்களுக்கு நேரம் அறிவிப்பதுபோல் ஒவ்வொரு கோவிலும் ஒவ்வொருநேரத்துக்கு அடிப்பதில் மக்கள்நேரத்தை கடிகாரம்பார்க்காமலேயே தெரிந்து கொள்ள முடியும்.
"இதுவும் ஒருவகையிலை நல்ல சேவைதான்!"
— சொல்லிக்கொண்டேதனது காலைக்கடன்களை கழிக்கச்சென்றார் பிள்ளை.

காலைக் கடன்கள் முடித்து வழக்கம்போல் பூசைபார்த்து காலை உணவாய் பால்குடித்து கோவில்வாசலுக்கு வந்துசேர பத்துமணியாகி விட்டது. தொண்டர்சபை இளைஞர்கள் கோபுரவாசலில் கூட்டித் தண்ணீர் தெளித்து தயாராய்இருக்க தயானந்தரும் வந்துவிட்டார். கோகுலன், இராமு, பிள்ளை மங்கல இசை வழங்கி சுவாமிநாதர் மந்திரம் ஒலித்து பந்தல்கால் வைபவம் முடிந்ததில் அனைவரும் கலைந்து விட்டார்கள்.
வழக்கமாய் நிகழ்ச்சிமுடிய களஞ்சிய அறைக்குள் நாதஸ்வரத்தைவைப்பவர் இன்று தன்னுடன் எடுத்துச்செல்வதை, தேர்மண்டபத்தின் வேரில் இருந்த குருக்கள் வேடிக்கை பார்த்தபடி இருப்பது முகத்தில் தெரிந்தது.
ஒன்றையும் கவனிக்காததுபோல் சென்ற பிள்ளை நாதஸ்வரத்தோடு தன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து வாசிக்க ஆரம்பித்தார். ஒரு ஆவேசம் மனதில் எழுந்ததை நாதஸ்வரம் வெளிப்படுத்திக்கொண்டிருந்தது.

இன்று அதன் குறைவு,ஆவேசம்,நளினம் முழுமையாய் வித்தியாசப்பட்டதை கவனம்கொண்டு சுற்றுப்புற மனிதரெல்லாம் அவர்வீடுநோக்கி விரைந்தார்கள்.
"குணத்தான் பழைய குணத்தானாய் எவ்வளவோ நாளைக்குப்பிறகு வாசிக்கிறான்"
சுவாமிநாதர் யாருக்கோ சொல்லிக்கொண்டிருந்தார்.
மனது முழுதும் குணசாமிப்பிள்ளைக்கு நாதம் இசை என்றே சுழன்று கொண்டிருக்க கண்களில் பாக்கியம் அருகிருந்து ரசிப்பதுபோன்ற பிரமை தெரிந்தது.
தொடர்ந்து வாசிப்பதை கேள்விப்பட்டு தவநாதன் அவர் வீட்டுக் கலைஞர்கள் கோகுலன், இராமு, ஏன் ஊர் முழுமையும் திரண்டுவிட்டதை அவர் கவனிக்கவில்லை.
இப்போ அவர் வாசிப்பின் உக்கிரம் குறைந்து சொல்லமுடியாத ஒரு சோகத்தை நாதஸ்வரம் வெளிப்படுத்திமெல்ல மெல்ல அடங்கிவிட்டது.
அவர் இறுதி மூச்சும் நாதமாய் வெளியேறிவிட்டது.
நறுக்குமட்டும் வாயோடுதங்கிவிட குழலை வலதுகரம் பற்றிப்பிடித்திருந்தது. நறுக்கினூடே லேசான இரத்த நுரை வெளியேற அவர் உடல் சரிந்தது. நாதஸ்வர ஓசைமட்டும் காற்றில் கலந்து அந்த ஊரையே ஆக்கிரமித்து இருக்க, கோவில் மயில் இல்லாதவழமையாய் தாமரைக்குளத்துக்கு அருகே புரண்டுபுரண்டு அகவி ஒரு சோகச்செய்தியை ஊருக்குச் சொல்லிக் கொண்டிருந்தது.

□□□

**பக்தியின்மொழி!**

சமயங்கள் இல்லையேல்
எண்ணற்ற தமிழ் இலக்கியங்களை நாங்கள்
இழந்திருப்போம். அன்றியும் அளவிலும் சுவையிலும்
தமிழிலுள்ள பக்திப்பாடல்களைப்போலப்
பிறமொழி இலக்கியங்களில் இல்லை.

ஆங்கிலம் வணிகத்தின் மொழியென்றால்,
இலத்தீன் சட்டத்தின் மொழியென்றால்
கிரேக்கம் இசையின்மொழியென்றால்,
ஜெர்மன் தத்துவத்தின் மொழியென்றால்,
பிரெஞ்சு தூதின் மொழியென்றால்,
இத்தாலியம் காதலின் மொழியென்றால்,
இன் தமிழைப் பக்தியின் மொழி எனலாம்.

-மு.சாயபு மரைக்காயர்.
(சைவ இலக்கியச்சோலை நூலில்)

## அநுபவப் பூக்கள்....

நம்மால் என்ன சாதிக்க முடியுமென்று
நாம் நினைக்கிறோமோ, அதைவைத்து
நம்மைநாம் எடைபோட்டுக்கொள்கிறோம்.
நாம் என்ன சாதித்தோம் என்பதைவைத்து
பிறர் நம்மை எடைபோட்டுக்கொள்கிறார்கள்.
- லாங் ஃபெல்லோ.

நன்மை என்பது ஆயிரம் தேனீக்கள்
ஆயிரங்காலமாகச் சிறுகச் சிறுகச் சேர்த்துத்
திரட்டும் தேன் போன்றது.
தீமை என்பது ஒருவன் கண்பட்டு
அந்தத் தேனை
ஒரு நிமிடத்தில் அழிவதைப்போன்றது.
- ஜேம்ஸ் ஆலன்.

தீயவனை நண்பனாக்கிக்கொள்வதைவிட
தனிமையை நண்பனாக்கிக் கொள்வதே மேல்.
- நபிகள் நாயகம்.

பிறரிடம் எந்தக்குணத்தை நீங்கள் வெறுக்கிறீர்களோ,
அதே குணம் உங்களை நெருங்கவிடாமல்
பார்த்துக்கொள்ளுங்கள்
- ஸ்பிரோட்.

அமைதி நிறைந்து அடிமையாகி இருப்பதைவிட
ஆபத்துநிறைந்த சுதந்திரம் எவ்வளவோ மேல்.
- காந்தியடிகள்.

தொகுப்பு: சாது.



# நாற்சார் வீடு

- மகேஸ்வரி வேதராஜா.

மண்டையைப் பிளக்கும் வெய்யிலில்
மண்வெட்டி தனைப் பிடித்து
மாய்ந்து மாய்ந்து கொத்தி
மண்ணைக் கையில் அள்ளி
மனம்மிக மகிழ்கிறார் முருகேசர்!

நவாலி என்னும் நல்லூரிலே
நாகமணிக்கு நல் கணவனாக
நான்கு குழந்தைகளுக்குத் தந்தையாக
இல்லறம் எனும் நல்லறம் தனை
இனிதாக நடத்தி வந்தார்!

பொழுது புலரும் நேரத்திலே
பொடிநடையாக வயல் வரம்பினிலே
கால் பதிக்கும் முருகேசர்
தோட்டத்திற்கு சென்றதுமே
சொந்தமெல்லாம் மறந்திடுவார்!

செழித்து நிற்கும் முருங்கை மரங்களும்
குலை தள்ளிய வாழைகளும்
கத்தரி, வெண்டி, மிளகாய்ச் செடிகளுமே
அவரின் சொந்தங்களாகத் தெரியும்
அந்நேரம் அவர் கண்களுக்கு!

ஆண்குழந்தைகள் அற்ற அவருக்கு
அவர் நட்ட அனைத்து
மரஞ்செடி கொடிகள் தான்
அள்ளிக் கொடுத்தன
பொன்னையும் பொருளையும்!

நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த
பாடுபட்ட அவருக்கு
பாகுபாடின்றி பக்குவமாய்
பலனைக் கொடுத்தன!

நான்கு குமர்களையும்
நல்ல வழியில் கரைசேர்க்க
தோள் கொடுத்து உதவியதும் இந்த
தோட்டத்துப் பயிர்கள் தான்!

கடைக்குட்டி செல்லப்பெண்
கஸ்தூரிக்கு
நாற்சார் முற்றம் வைத்து
நன்றாக தான் கட்டிய
மனைதனையே சீதனமாக
மனம் விரும்பிக் கொடுத்தார் முருகேசர்!

நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட்ட
செல்லப்பெண் கஸ்தூரியும்
சென்றிட்டாள் தூரதேசம்
செல்வத்தனை திரட்டி வரவென்று!

மகள் சென்ற பின்பு

மனைதனை காக்கும் பொறுப்பு
முருகேசர், நாகமணி தம்பதியரின்
முதுகிலே சுமத்தப் பட்டது!

வயது போன காலத்திலும்
வயல் வரப்புகளில் வேலைசெய்து
குறைகள் ஏதுமின்றி
குற்றம் சொல்வார் யாருமின்றி
நெஞ்சை நிமிர்த்தி
நிமிர்ந்து நின்றார் முருகேசரும்!

இத்தனை நேரமும்
தோட்டத்தில் நின்ற முருகேசருக்கு
இதமாக பழஞ்சோறு தனை பிசைந்து
தொட்டுக் கொள்ள ஊறுகாயும்
துவையலும் வைத்து
தூக்குச் சட்டியுடன்
தூரத்தில் நாகமணியும்
துணைவரை நாடிவருவதைக் கண்டு

பம்பு செட்டருகே சென்று
கைகால், முகம் கழுவி
விண்ணை மறைத்து நின்ற
வெற்றிலைப் பந்தலருகே
விரைவாக சென்றமர்ந்தார்!

அருகில் வந்த நாகமணியும்
அமைதியாக அருகமர்ந்தாள்
முகத்தில் புன்னகை மலர
தூக்குச் சட்டியைத் திறந்து
துவையலுடன் ஊறுகாயும் வைத்து
இதமாகத் தான் பிசைந்த
இன்னமுதை கணவனுக்கே
கொடுத்திட்டாள்!

மலர்ந்த தன் மனைவியின்
முகமதனை தான் பார்த்து
ஏதோ விஷயமிருக்கு
எதற்கும் முதலில்
இடைஞ்சல் செய்யும் வயிற்றுக்கு
இரை போட்டு விட்டு
வயிற்றைத் தடவி
வாய்வு தனை வெளிவிட்டு

"என்ன நாகமணி
ஏனிந்த முகமலர்ச்சி
விசேஷம் ஏதுமுண்டோ" என்றே
வினயமாக கேட்டிட்டார்!
வெற்றிலைப் பந்தலிலிருந்து
வாய்க்கு இதமாக
கொழுந்து வெற்றிலையாகப் பறித்து
சுண்ணாம்பைத் தான் தடவி
பாக்கும் நடுவில் வைத்து
பக்குவமாய் மடித்து கணவன்
வாயில் வைத்த நாகமணியும்
சேலை முந்தானையில்
செருகி வைத்த மடலதனை
செப்பிடு முன்னரே எடுத்து
கணவன் கையில் கொடுத்தாள்!

வெளிநாட்டுக் கடித
உறையைக் கண்டதுமே
விரைவாகப் புரிந்தது
மனைவியின் மன மகிழ்ச்சிக்கு
காரணம் இதுதான் என்று!

"ஓகோ மகளின் கடிதமோ?
எங்கே அந்த மூக்குக் கண்ணாடியை
தா பார்ப்போம்" என்றே கூறி
எழுத்துக்களை ஒவ்வொன்றாய்
எழுத்துக் கூட்டி படித்திட்டார்!

வெளிநாட்டுப் புதினங்களை
வெகுவாக எழுதியிருந்தாள் மகள்
இங்கிலாந்துக் குளிரில்
இதமான சுகம் உண்டென்று
எழுதியிருந்தாள்
ஏளனச் சிரிப்பொன்று
முருகேசர் முகத்தில் ஓடியது
கொழுத்தும் வெய்யிலும்
பால் போன்ற குளிர் நிலவும்
இதமாக வீசும் இனிய தென்றலும்
இங்கு எம்மண்ணிலன்றி வேறு
எங்கு கிடைக்கும்!

கடிதத்தை வாசித்து
முடிக்கும் வேளையிலே
முருகேசரின் முகம்
இறுகிப் போயிருந்தது
"என்னப்பா எழுதிவிட்டாள்
ஏனிப்படி இருக்கிறீர்கள்?"
என்று பரிவுடனே
தோளைத் தடவினாள்
தோள்தொட்ட அவர் மனைவி!

"வேறு என்ன எழுத வேண்டும்?
வெய்யிலிலும் மழையிலும் இந்த
தோட்டத்து மண்ணில் நான்
பட்ட கஷ்டமெல்லாம்
துடைத்தெறிய நிற்பது
நான் கட்டிய இந்த
நாற்சார் வீடு தான்
வெள்ளையனின் மண்ணைமிதித்த
உன் மகளுக்கு இந்த
நாற்சார் வீடு
நாகரிகமாகத் தெரியவில்லையாம்!

விடுமுறைக்கு தன் கணவர்,
குழந்தைகளுடன்
விரைந்தே வரும் முன்னர்
நாகரிக வீடாகக் கட்டும்படி
பிளானும் அனுப்பியுள்ளாள்
என் உயிர் உள்ளவரை
இந்த வீட்டை இடிக்கவிடமாட்டேன்
என் உயிர் பிரிந்த பின்னர்
எதுவாகிலும் நடக்கட்டும் இதை
எழுதிப்போடு உன் மகளுக்கு"
என்றே இரைந்திட்டார் முருகேசர்!

"சரியப்பா அப்படியே எழுதிப் போடுகிறேன்
சற்று அமைதியாக இருங்கள்"
என்று இதமாக நாலு வார்த்தை கூறி
"வெகு நேரம் தோட்டத்தில் நிற்காமல்
விரைந்தே வீடு வந்து சேருங்கள்" என்றே
விரைவாகக் கூறிவிட்டு
மடி நிறைந்த காய்கறிகளுடன்
மனைநோக்கிச் சென்றாள் நாகமணி!

மாலைப் பொழுது
தோட்டத்து பம்பு செட்டில்
வலிதீரக் குளித்து விட்டு
வீடு வந்து சேர்ந்தார் முருகேசர்!

வாய்க்கு சுவையாக தான் சமைத்த
கறிகாய் கூட்டதனை சேர்த்து
வாழையிலையில்
வைத்திட்டாள் நாகமணி!
நெற்றியிலே திருநீறும்
வெள்ளை வேட்டியுடனும்
வந்தமர்ந்த முருகேசர்
வயிற்றுக்கு வஞ்சனை செய்யாமல்
வயிறார உண்டிட்டார்!

உண்ட களைப்புத் தீர தன்
நாற்சார் முற்றத்திலே
சாய்மனைக் கதிரையிலே
தலைசாய்த்து படுத்திட்டார்
பக்கத்தில் வந்தமர்ந்த அவர் மனைவி
பக்குவமாய் வெற்றிலையை மடித்து
பாங்காகக் கொடுத்திட்டாள்!

வெற்றிலையை வாங்கி
மென்று துப்பிய அவர்
"உன் அருமை மகளுக்கு
நான் கூறியவைகளை
எழுதிப் போட்டாயோ?"
என்றே கேட்டார்!
"அப்படியே எழுதி
அப்பொழுதே தபாலில்
அடியேன் சேர்த்திட்டேன்
கவலையை விடுங்கள்" என்றாள்!

இப்படியாகத் தம்பதியர்
பேசிக் கொண்டிருக்கும் வேளையில்
இடியோசை கேட்டது போல்
எங்கிருந்தோ விமானங்கள்
குண்டுகளைப் பொழிந்த வண்ணம்
குறுக்கும் நெடுக்குமாகப் பறந்தது
படுபாவி இராட்சதர்கள்
பாழ்படுத்தி எங்களையே
பரிதவிக்க வைத்திடவே
பறந்தோடித் திரிகின்றார்!

துடித்தெழுந்த முருகேசரும் மனைவியும்
துணையறியாது தவிக்கையிலே
தோளில் ஏந்திய துப்பாக்கிகளுடன்
துள்ளியே வந்தனர்
இளம் காளையரும் கன்னியரும்.

"ஐயா நீங்களும் மனைவியும்
இங்கிருப்பது ஆபத்து
சிங்கள சிப்பாய்கள்
சிதைத்தெறிய வந்திட்டார்
எங்கள் உயிர் உள்ளவரை
எதிர் தாக்குதல் செய்திடுவோம்
நீங்களும் இங்கிருந்தால்
ஆபத்து இரட்டிப்பு
ஆகையினால் நீங்களும்
அன்பு மனைவியுடன்
அருகிருக்கும் ஆலயத்தில்
அச்சமின்றி அமர்ந்திருங்கள்!"
என்றே கூறிய
நாடுகாக்கும் மறவர் கூட்டத்தின்
வாய்மொழியைத்தட்ட இயலாது
தள்ளாத வயதினிலும்
தன் துணைவியைத்தான் அழைத்து
தன் மனைதனை ஓர் முறை
நிமிர்ந்து பார்த்து
பெருமூச்சு விட்டபடி
அரைமனத்துடன் அவ்விடம்விட்டே
அகன்று சென்றார்.


துடிக்கும் உள்ளங்களுடன்
சின்னஞ் சிறுசுகளும்
குழந்தை குட்டிகளும்
வயோதிபர்களும் பெண்களும்
ஆகாயத்தில் கேட்கும் பேரிரைச்சலில்
உயிரைக்கையில் பிடித்துக்கொண்டு
ஓசையின்றி அமர்ந்திருந்தனர்!
ஆண்டவரே துணையென்று
அவர் பாதங்களைப் பற்றியபடி
அமர்ந்திருந்த அம்மக்கள் மீது
வெறிபிடித்த சிங்களத்தான்
வெறிகுண்டைப் பொழிந்தான்.

"அய்யோ அம்மா!" என்று
அலறல்கள் நாற்புறமும்
தலைவேறு உடல்வேறாக
சிதறிய சடலங்கள்
கண்ணிமைக்கும் நேரத்தில்
கதிகலங்க வைத்திட்ட
கழுகதுவும் தன்வேலை
முடிந்தது என்றே கருதி
முகில்களுக்குள் மறைந்தது.


மரண ஓலங்களுக்கிடையே
உடலில் பல இடங்களிலும்
குருதி பெருகிய நிலையில்
முருகேசர் தன் மனைவியின்
முகமதனைத் தேடுகிறார்.
அந்தோ! என்ன கோரம்
விழுந்த குண்டு முருகேசர் மனைவியின்
முகமதனைச் சிதைத்து
உயிரையும் பறித்திருந்தது.
மனமுருகக் கதறுகின்றார் முருகேசர்.
யாருக்கு யார் ஆறுதல் கூறுவர்
எங்கும் கதறல்கள்.

இயற்கை தன் கடமையை
மறக்கவில்லை
இருள்கலைய நிலம்சிவக்க
ஓடிய தமிழரின் குருதிபோல்
செக்கச் சிவந்த செங்கதிரவன்
கீழ்வானில் எழுந்திட்டான்.
இரவு முழுதும் அழுது
களைத்திட்ட முருகேசர்
தன் மனைவியின் உடல்தனை
தானே சுமந்து
வீட்டுத் தோட்டத்தில்
அடக்கம் செய்ய
விம்மிய மனத்துடனே
தன் வீடு நோக்கி
தளர்நடை நடந்தார்.

வழிநெடுக சிதைந்த கட்டிடங்கள்
சிதறிய உடல்கள்
எனினும் அவர் நடக்கின்றார்
வீட்டை நோக்கி
வீட்டை அண்மித்த அவர்
ஐயகோ என்று அலறுகின்றார்
அந்த அலறலே
அவரின் இறுதி அலறல்.
கையில் தாங்கிய மனைவியின் உடல்
நிலத்தில் சரிய
அவ்வுடல் மீது தன்னுடல் சரிய
தன்னுயிரையும் விட்டார்.
ஆமாம்
நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த
அவர் உழைத்துக் கட்டிய
அந்த நாற்சார் வீடு
தரைமட்டமாகி இருந்தது.




□□□



ஒருவர் —
வருசாவருசம் சிறப்பாகப் பொங்கல் விழா கொண்டாடுவீங்கள். இந்தமுறை ஏன் கொண்டாடேல்லை?
மற்றவர் —
எனக்கு ஜேர்மன் சிற்றிஷன் கிடைச்சிருக்குது.
ஒருவர் — ......................?

ஒருவர் —
அகதியாய் ஜெர்மனிக்கு வந்ததுக்கு இப்பதான் நல்லபலன் கிடைச்சிருக்குது...ரெண்டுவருச விசா தந்திருக்கிறாங்கள்
மற்றவர் —
அதுக்கு ஏன் இவ்வளவு சந்தோசம்?
ஒருவர் —
ஊருக்குப்போயிட்டு வரலாமெல்லே?!
மற்றவர் —
.......................................?!



— சோழியான்.

## மனம் விட்டுக் கொஞ்சம்....

இனிய தமிழ் ஏட்டின் இனிய வாசகர்களுக்கு!
அன்புடன்.
எங்கள் பூவரசு இனிய தமிழ் ஏடு தனது ஐந்தாண்டு இலக்கியப் பணியை நிறைவு செய்து ஆறாவதாண்டில் கால் பதிக்கிறது.
'உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம் சொந்தம்!' என்று அன்புக் கிளை பரப்பி, கலை இலக்கிய ஆர்வலர்களை அரவணைத்து அவர்களது வளர்ச்சிக்கு உறுதுணைபுரிந்து தானும் வளர்ந்தது பூவரசு.

படைப்பாளர்களுக்கு பூவரசு தன்னை ஒரு களமாக ஆக்கிக் கொண்டதே தவிர தன்னுடைய கருத்துக்களைப் படைப்பாளர்கள்மீது திணித்து அவர்களது கருத்துச் சுதந்திரத்துக்கோ எழுத்தார்வத்துக்கோ குந்தகம் விளைவிக்க ஒரு போதும் எண்ணியதில்லை.

பூவரசை மனப் பூர்வமாக நேசித்து தங்கள் படைப்புக்கள் மூலம் பூவரசை மேலும் தரமுயர்த்தி மெருகேற்ற முயலும் படைப்பாளர்களால்தான் பூவரசு இன்று ஒரு தரமான சஞ்சிகை என்ற உங்கள் பாராட்டைப் பெற்றிருக்கிறது.
அதேவேளை ஒரு சில கலை இலக்கிய ஆர்வலர்கள் தாமாகவே சில கருத்து முரண்பாடுகளை முன்னெடுத்து பூவரசின் மீது கல்லெறிந்து பார்க்கவும் முனைகிறார்கள் என்பதும் ஒரு கசப்பான உண்மையே.

எப்போதுமே இருவேறுபட்டது உலகம்.
இதில் எல்லோரும் ஒத்துப் போக முடியும் என்பதும் சாத்தியமற்றது.
எனவே பொதுப்பணியில் முனைந்துள்ள நாம் பொறுமையோடு நமது காரியங்களைத்தொடரவேண்டும் என்பதே இன்றுள்ள நமது கடமை.

'இனிய தமிழ் ஏடு இருதிங்கள் ஒன்று' என்று நான்கு வருடங்களாக நடைபோட்ட பூவரசு தனது ஐந்தாவது ஆண்டிலிருந்து மாத இதழாக மலர ஆரம்பித்தது.

கடந்த ஐந்தாண்டு காலமாக பூவரசு தன்னால் இயன்றளவுக்கு கலை இலக்கியப் பணியில் சளைக்காமல் ஈடுபாடு காட்டி வந்திருக்கிறது.
மறைந்திருந்த பல கலைச் செல்வங்களை வெளியுலகுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறது.

இந்துமகேஷ் என்கின்ற ஒரு படைப்பாளி தன் போக்கில் எல்லாப் பத்திரிகைகளுக்கும் எழுதிக்கொண்டிருந்திருக்க முடியும். ஆனால் அவனது நோக்கம் வளர்ந்த, வளரும் கலை, இலக்கியவாதிகளுக்கு உற்சாகமளித்து அவர்களது திறமைகள் வெளிப்படுத்தப்பட்டு சமூக நலத்துக்கு அவைகள் பயன்படவேண்டும் என்பதாகவே இருந்தது.
அதனால்தான் பூவரசு பிறப்பெடுத்தது.
இன்றுவரை அது சலிக்காது தன் பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

'பூவரசு இன்னும் எத்தனை காலத்துக்குத் தொடரும்?'
என்ற உங்கள் கேள்விக்கு எனக்கு விடை தெரியாது.
விடை தெரிந்தவர்கள் வாசகர்களாகிய நீங்கள்தான்.
உங்கள் ஆதரவு உள்ளவரை பூவரசு தொடரும் என்பதை மட்டுமே என்னால் சொல்லிக் கொள்ளமுடியும்.

பூவரசு பற்றிய உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் அதை மனம்விட்டு எழுதுங்கள்.
பூவரசு உங்கள் சஞ்சிகை என்ற உண்மையை மறவாது
உளப்பூர்வமாக அதன் குறைநிறைகளை எழுதுங்கள்.
மாற்றங்கள் வேண்டின் அவற்றை ஒருங்கிணைந்து செயல்படுத்துவோம்.

இதுகாலவரையும் ஒத்துழைத்த அனைத்து வாசகர்களுக்கும் படைப்பாளர்களுக்கும் நன்றிகளும் -
தொடர்ந்து ஒத்துழைத்துவரும் வாசகர்களுக்கும் படைப்பாளர்களுக்கும் வாழ்த்துக்களும்!

'உலகமே நம் இல்லம்!
உள்ளமெல்லாம் நம் சொந்தம்.'

அன்பன்

**இந்துமகேஷ்.**

# நிறைவான நிம்மதி



மாலைப்பொழுது.
சைக்கிளில் வீடு நோக்கிவந்துகொண்டிருந்தாள் தாரணி.
"தாரணி...கொஞ்சம் நில்லும்!" என்று பின்னால் ஒருகுரல் கேட்டது.
திரும்பிப் பாராமலேயே அந்தக்குரலுக்குரியவனைத் தெரிந்துகொண்டாள் தாரணி.
அவன் ரவி.
தாரணிக்கு அருகில் மிகவேகமாகத் தன் சைக்கிளைச்செலுத்தி வந்தவன் அவளை நெருங்கியதும் சொன்னான்...
"தாரணி...நான் உம்மில வைத்திருக்கிற காதல் தூய்மையானது. உண்மையானது. இது உமக்கு விளங்கவே இல்லையா..? இல்லாட்டில் விளங்கியும் விளங்காததுமாதிரி நடிக்கிறீரா??"
தாரணி மனதில் எழுந்த கோபத்தை அடக்கிக்கொண்டு சொன்னாள், —
"ரவி...நீங்க இப்படிக் கதைப்பது எனக்குப்பிடிக்கவில்லை... நீங்களும் நானும் ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில் படித்து இப்போது ஒரே பாடசாலையில் மாணவர்களுக்குக் கல்விபுகட்டுகிறோம்...இதைத்தவிர எங்களுக்குள் வேறு எந்தத் தொடர்பும் கிடையாது...எனக்கு இந்தக் காதல் கத்தரிக்காய் எல்லாம் பிடிக்கவும் பிடிக்காது!"
— வேகமாகச் சொல்லிவிட்டு அவன் மேற்கொண்டு பேசுவதைக் கேட்க விரும்பாதவளாய் விரைவாகத் தன் சைக்கிளைச் செலுத்தினாள்.

தாரணிக்கு தாய் இல்லை.
தகப்பனும் எழுந்து நடக்க முடியாமல் கடந்துபோன ஐந்துவருடங்களாகப் படுத்த படுக்கையாகவே கிடக்கிறார். ஒரு அண்ணன் ஒரு தம்பி இரண்டு தங்கைகள் என்று இவளோடு உடன்பிறந்தவர்கள் நால்வர்.
குடும்பக்கஷ்டத்திலிருந்து விடுபடலாம் என்ற நம்பிக்கையோடு மூத்தமகன் மோகனை வெளிநாட்டுக்கு அனுப்பிவைத்தார் இவளுடைய அப்பா.
அவனும் வெளிநாட்டுக்குப் போனபுதிதில் அப்பா தம்பி தங்கைமார் என்று பாசத்துடன் பணம் அனுப்பினான். அவன் அனுப்பிய பணத்தில் படித்து இன்று தாரணி விஞ்ஞான ஆசிரியையாக கடமைபுரிகிறாள்.
கொஞ்சக்காலம்செல்ல மோகன் வெளிநாட்டுப்பெண்ணொருத்தியை மணந்து கொண்டதாகத் தகவல் வந்தது.
அதன்பின் அவனுக்கும் இந்த வீட்டுக்கும் இருந்த தொடர்புகள் யாவும் நின்று போய்விட்டன. ஒரு கடிதம்கூடக்கிடையாது.
அடுத்தடுத்து அண்ணனுக்கு தாரணி வரைந்த கடிதங்கள் யாவும் சுவரில் அடித்த பந்தாகத் திரும்பிவந்துவிட்டன.
தம்பி நாதன் குடும்பச்சுமைகளை ஏற்றுக்கொள்வான் என்று நினைத்தபோது அவன் வீட்டிலும்மேலாக நாட்டை நேசிப்பது தெரிந்தது.
ஒரு போராளியாக அவன் இப்போது களத்தில் நின்று கொண்டிருக்கிறான்.
தங்கைகள் சித்திரா சீதா படித்துக்கொண்டு இருக்கிறார்கள்.
தாரணிக்கு இப்போது இருபத்து மூன்றுவயது.
அவள்தான் இப்போது இந்தக் குடும்பச்சுமையைச் சுமக்கிறாள்.

படுத்த படுக்கையாகக் கிடந்தாலும் தன் பெண்பிள்ளைகளைப்பற்றிய கவலை இவளது தகப்பனுக்கு அதிகமாக இருந்தது.
ஒரு பெண்ணையாவது கரைசேர்த்து விட்டால் நிம்மதியாகக் கண்ணை மூடிவிடலாம் என்று அந்தத் தந்தையின் மனம் துடித்தது.
தனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் தாரணிக்கேற்ற வரன் ஒருவனைத் தேடித் தரும்படி அவர் சொல்லிக்கொண்டிருந்தார்.
"அப்பா... நானும் இன்னொரு வீட்டுக்குப் போய்விட்டால் உங்களை யார் கவனிப்பது? தங்கைகளை யார் படிப்பிப்பது? எதற்கும் இன்னும் கொஞ்சக்காலம் போகட்டுக்கும் பிறகு யோசிக்கலாம்!" என்று தகப்பனிடம் சொல்லியிருந்தாள் அவள்.
அவளது வாழ்க்கையில் திடீரென்று இப்போது குறுக்கிட்டிருக்கிறான் இந்த ரவி.

— திச்சாயூர் வேலுநந்தன்.

"அக்கா!" என்று தங்கை சீதாவின் குரல் கேட்டது.
யோசனையுடன் வீட்டைத்தாண்டிப் போகமுயன்ற தாரணி திடுக்கிட்டுத் திரும்பினாள்...
வீட்டுப்படலையில் தங்கை சீதா நின்றாள்...
"என்னக்கா...வீடுவந்தது கூடத்தெரியாமல்...என்ன யோசினை... ஏன் முகம் ஒரு மாதிரி இருக்கு...உடம்புக்கு ஏதாவது சுகயீனமா?"
"இல்லையடி...எனக்கொன்றுமில்லை...ஏதோ யோசனையில் அப்படி நேரே போய்விட்டேன்!" என்று மழுப்பினாள் தாரணி.

தாரணி கை கால் முகம் கழுவி பூசையறைக்குப்போய் சாமி கும்பிட்டுவிட்டு குசினிக்குள் நுழைந்தாள்.
உள்ளே இரவுச்சாப்பாடு தயாராகியிருந்தது.
"ஏன் சித்திரா.. உனக்கு எத்தனைமுறை சொல்கிறது... நான் வந்து சமைப்பேன்தானே...!"
"அக்கா...எங்களுக்காக நீங்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள்...பாடசாலையில் படிப்பிக்கிறீர்கள்...அது போதாது என்று ரியூசன் கொடுத்துவிட்டு வருகிறீர்கள்...உங்களுக்கு ஒத்தாசையாக இந்த உதவியைக்கூடச் செய்யா விட்டால் நாங்கள் என்ன சகோதரங்கள்?" என்றாள் சீதா.
"ஓ... இன்றைக்கு உன் சமையலா..? சாப்பிடலாம்தானே பயமில்லாமல்..?" என்று சீதாவைக் கேலிசெய்தபடி உணவு பரிமாற ஆயத்தமானாள் தாரணி.
"அக்கா..! என் சமையலை இன்றைக்குச் சாப்பிட்டுப் பாருங்கோ... பிறகு ஒவ்வொருநாளும் என்னையே சமைக்கச்சொல்வீர்கள்!" என்று பெருமையடித்துக் கொண்டாள் சீதா.
"சமையல்வேலையை விட்டிட்டு ஒழுங்காகப் படிக்கப்பார்!" என்றாள் தாரணி.
"அக்கா...எப்பவும் வகுப்பில் நான்தானே முதலிடத்தில்...உனக்குத்தெரியாதா என்ன?" என்றாள் சீதா.

சகோதரிகள் தகப்பனுடன்சேர்ந்து இரவு உணவை முடித்துக்கொண்டதும், தங்கைகள் தத்தம் படுக்கைகளுக்குப் போய்விட்டார்கள்.
"தாரணி...இங்கே வாம்மா...!" என்று அப்பா கூப்பிட்டார்.
"என்னப்பா...என்ன வேணும்?"
"எனக்கெதுவும் வேணாம் அம்மா...இப்படி வந்து இரு!" என்று ஆதரவாக அழைத்த தகப்பனுக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்தாள் தாரணி.
"தாரணி..!இவர் சுப்பையாவின்மகன் லண்டனில இருந்து வந்திருக்கிறாராம். உன்னை எங்கேயோ பார்த்திருக்கிறாராம்... பிடித்துவிட்டதாம்...அதுதான் உன்னைப் பெண்கேட்டு காலையில ஆட்களை சுப்பையா அனுப்பியிருந்தார். இங்கு கலியாணம்செய்துகொண்டு உன்னையும் கூட்டிக்கொண்டு லண்டன் போக சுப்பையாவின்மகன் விரும்புகிறாராம்.. சரி என்று சொல்லட்டே?"
தாரணி தகப்பனின் முகத்தைப்பார்த்தாள்.
மகளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுத்துவிடவேண்டும் என்ற ஒரு தந்தையின் இயல்பானஏக்கம் அவரது கண்களில் தென்பட்டது.
"அப்பா...நானும் போய்விட்டால் உங்களை யார்கவனிப்பது?" எனக் கேட்டாள் தாரணி.

"சித்திரா வேலைக்கு எழுதிப்போட்டிருக்கிறாள்... அவளுக்கு நல்ல வேலை கிடைக்கும். அவள் எங்களைப் பார்ப்பாள். நீ கல்யாணம் செய்!"
"அப்பா... முதலில சித்திராவிற்கு ஒரு நல்ல வேலை கிடைக்கட்டும்.பிறகு என் கலியாணத்தைப்பற்றி யோசிப்போம்...!" என்றாள் தாரணி.
"ஏன் பிள்ளை..நீ யாரையாவது விரும்புகிறாயா..?" எனத்தகப்பன் கேட்டார்.
"ஆ... இல்லை அப்பா...!"என்றாள் தாரணி அவசரமாக.
ஏதோ சொல்வதற்காகத் தகப்பன் வாயெடுக்க, "அப்பா உங்களுக்கு நல்ல ஓய்வு தேவை என்று டொக்டர் சொன்னவர்... இப்ப படுங்கோ...மற்றதுகளை பிறகு கதைப்போம்!" என்று அவரைத் தடுத்தாள் தாரணி.
மகளின் மனநிலை புரிந்தவராய் அமைதியானார் தகப்பன்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை.
விடுமுறை நாளானதால் தாரணியும் வீட்டிலேயே இருந்தாள்.
அன்று எதிர்பாராதவிதமாக ரவி தன்பெற்றோருடன் தாரணியைப்பெண்கேட்டு தாரணி வீட்டுக்கே வந்துவிட்டான்.
ரவியின் பெற்றோரும் தாரணி கட்டின புடவையுடன் வந்தால்கூட தாங்கள் ஏற்கத்தயாராக இருப்பதாகவும் சீதனம் அது இதென்று எதையும் தாங்கள் எதிர்பார்க்கவில்லையென்றும் தங்கள் மகனது மனதிற்குப்பிடித்த ஒரு வாழ்க்கையை அவன் தேர்ந்தெடுப்பதையே தாங்கள் விரும்புவதாகவும் சொன்னார்கள்.ஆனால் தாரணியோ மனதில் ரவியை விரும்பியும்கூட இந்தக் கலியாணத்திற்கு மறுத்துவிட்டாள்.
தகப்பன்எவ்வளவோ எடுத்துச்சொன்னார்.கடைசியில் ஓரிருநிபந்தனைகளுடன் தாரணி இந்தக் கலியாணத்திற்குச் சம்மதம் தெரிவித்தாள்.
தங்கை சித்திராவிற்கு வேலை கிடைத்தபிறகே திருமணம் செய்வதாகவும் திருமணமானபிறகும் தன் மாதச்சம்பளத்தில் அரைப்பங்கைத் தன் பிறந்த வீட்டுக்குத் தருவதை யாரும் தடுக்கக்கூடாது என்றும் தாரணி விடுத்த வேண்டுகோளை ரவியும் ரவியின் பெற்றோரும் ஏற்றுக் கொண்டார்கள்.

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் ஒரு வருடத்தை வேகமாக உருட்டித்தள்ளிவிட்டது. சித்திராவிற்கு நல்ல ஒருஅலுவலகத்தில் வேலை கிடைத்தது.அதனால் தாரணிக்கும் ரவிக்கும் திருமணநாளும் குறிக்கப்பட்டது.
ஆனால் விதி...?
அதை வெல்ல யாரால் முடியும்?
ஆம்! தாரணியின் வாழ்விலும் அது விளையாட ஆரம்பித்தது.
மரணம் மன்னர்களின் அரண்மனையிலும், ஏழைகளின் குடிசையிலும் எவரும் அழைக்காமலேசென்று கதவைத் தட்டும் என்பது இயற்கைதானே!
தாரணியின் தந்தையும் மரணத்தின் வாசலை மிதித்தார்.
தந்தையின் மரணம் தாரணியின் திருமணத்திற்கு முதல்தடையாயிற்று.
தகப்பனின் இறுதிக்கிரியைகளில்கூட கலந்துகொள்ளமுடியாத தம்பி நாதன் அடுத்த ஒருமாதத்தின்பின் போர்க்களத்தில் இருகால்களையும் இழந்தவனாக வீடுவந்து சேர்ந்தான்.
"நாங்கள் யாருக்கு என்ன தீங்கு செய்தோம்?கடவுள் ஏன் எங்களை இப்படிச் சோதிக்கிறான்?" எனத் தாரணியும் சகோதரிகளும் கதறினார்கள்.

ஐந்து மாதங்கள் ஓடி மறைந்தன.

ஒருநாள் ரவியும் பெற்றோரும் தாரணியின் வீட்டுக்கு வந்தார்கள்.
"நடந்தது நடந்துவிட்டது...இனிஅவைகளையே நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் எப்படி? நடக்க வேண்டிய காரியங்களைப் பார்க்கலாம்... ரவிக்கும் உனக்கும் கலியாணத்தைச் செய்வோம் என்று நினைக்கிறோம்!" என பெற்றோர் கூறினார்கள்.
அமைதியாக இருந்த தாரணி, "ரவி! நான் திருமணம் செய்வதாக இல்லை!" என்றாள் திடீரென.
ரவி திடுக்கிட்டவனாய், "தாரணி! என்ன சொல்கிறீர்?" என்றான்.
"ரவி! தயவுசெய்து என்னை மன்னித்துவிடுங்கள்...! என்னுடைய அம்மா இறந்ததிலிருந்து நானே எனது சகோதரங்களுக்கு அம்மாவாகவும் அக்காவாகவும் வாழ்ந்துகொண்டிருக்கிறேன்... இப்போது அப்பாவும் போய்விட்டார்... அப்பாபோனநாளிலிருந்து அப்பாவாகவும் ஆகிவிட்டேன்...நான் திருமணம் செய்யாமலே தொடர்ந்தும் என் சகோதரங்களுக்குத் தாயாகவும் தகப்பனாகவும் இருந்து கடமைகளைச் செய்யவிரும்புகிறேன்!" என்றாள் தாரணி.
"அக்கா..! நீங்கள் திருமணம்செய்யுங்கோ...நான் வேலைசெய்து சீதாவைப் படிப்பிக்கிறேன்...!" என்றாள் சித்திரா.
"சித்திரா! அணைந்துபோன விளக்கை மீண்டும் ஏற்றமுடியும்..ஆனால் இறந்துபோன நம்பிக்கைக்கு மீண்டும் உயிரூட்ட முடியாது. அப்பா இறந்த அன்றைக்கே எனக்குத் திருமணம்நடக்கும் என்ற நம்பிக்கையும் என்னை விட்டுப் போய்விட்டது.!" என்ற தாரணியை வேதனையோடு பார்த்தாள் சீதா.
"அக்கா! எங்களால் உங்களது சந்தோசம் கெடுகிறதே!" என்ற சீதாவை அணைத்துக்கொண்டே தாரணி சொன்னாள், —
"சீதா! நீதான் என் கடைக்குட்டிப்பெண்ணம்மா...உங்களுக்காக வாழ்கிறதை விடப் பெரிய சந்தோசம் எனக்கு வேறென்ன இருக்கிறது?"
"தாரணி! நான் உம்மைத்திருமணம் செய்தாலும் உம்முடைய தங்கைகளை என் தங்கைகள்போலப் பார்ப்பேன்!" என்றான் ரவி.
ரவியின் தாயும் ஏதோ சொல்ல முயல, —
"அம்மா! என்மனதில் சஞ்சலத்தை உண்டாக்காதீர்கள்.தயவு செய்து போய்வாருங்கள்!" என்று கரங்கூப்பினாள் தாரணி.
ரவியும் பெற்றோரும் அதற்குமேல் எதுவும் பேசாமல் அங்கிருந்து புறப்பட்டார்கள்.
"அக்கா! இது உனக்கே நல்லாயிருக்கா? ரவி எவ்வளவு நல்லவர்...!" என்றான் நாதன்.
""தம்பி! எப்போதும் மனம் ஒரே நிலையில் இருப்பதற்குப் பெயர்தான் நிம்மதி. எனக்குத் திருமணம் என்றவுடன், நான் உங்கள் எல்லோரையும் விட்டுப் போகவேண்டுமே என நிம்மதி இல்லாமல் தவித்தேன். அப்பா போனவுடனேயே நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்... உங்கள் மூவரின் எதிர்கால நலன்கள்தான் எனக்கு முக்கியம்... இப்போது என் மனதில் சஞ்சலம் இல்லை...சலனங்கள் இல்லை...நான் நிம்தியாகத்தான் இருக்கிறேன்!" என்று கூறிவிட்டுத் தன் அறைக்குள் போனாள் தாரணி.
"அக்கா! உங்களைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை!" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் நாதன்.

□□□

## 'எங்களில் யார்
## முதலில் திருந்துவோம்?'

*பெண்ணடிமை எனும் பதம் இக்காலத்தில் நன்கு அடிபடுகிறது. பெண்ணை அடிமையாகக் கருதக் கூடாது. பெண் ஆணின் அன்புக்கும் பாசத்துக்கும் பக்திக்குமுரியவள். எக்காரணம் கொண்டும் அதை மறுப்பதற்கில்லை. அதேநேரம் எத்தனையோ ஆண்களும் அடிமைகளாக அடிமை போன்ற சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே இவர்கள் குறையையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டுமெனப்பட்டதால் உருவானதே-*

*'எங்களில் யார் முதலில் திருந்துவோம்?'*

*என்னும்தலைப்பிலான இந்த ஆக்கம்.*

*தவறு எங்கிருந்தாலும் திருத்தப்படவேண்டும் என்ற என் எண்ணம் தவறானதாயிருக்க மாட்டாது எனக் கருதுகிறேன்.*

*-க. ஜோர்ஜ்.*

---

**அடுத்த இதழில் ஆரம்பம்-**

*க. ஜோர்ஜ் எழுதும்*

**'எங்களில் யார்**
**முதலில் திருந்துவோம்?'**

*-தொடர் கட்டுரை.*

---

முதற்பரிசுக் கவிதை.

# புலம் பெயர்ந்து

பலம் மிக்க நாடு ஒன்று
உருவாக வேண்டுமென்று
நலம் எண்ணும் மைந்தரெல்லாம்
மந்திரமாய்ச் சொல்லிக் கொண்டு
நிலம் அற்ற தமிழினத்தின்
தாயகத்தை அமைக்கையிலே
புலம் பெயர்ந்து வந்ததனால்....
செய்த பங்கைச் சொல்லுவையோ?

கலமமைத்துக் கடல்கடந்து
வளமடைந்த தமிழனினம்
சிலயுகங்கள் விழிமடிந்து
மதியிழந்து கிடந்ததனால்
பலம்படைத்த நிலையிழந்து
அடிமையினம் ஆனதடா!
புலம்பெயர்ந்து வந்ததனால்....
அது தொடர வேண்டுவையோ?

வலம் இடம் என்று கட்சி
மாறிமாறிப் பட்டபாடு
இலங்கைத் தமிழ் மக்களுக்குப்
போதுமென்றோ திக்கிப்போடு!
பலங்குறைந்த நிலையிலேதான்
சிங்களவன் பின்னே போனோம்
புலம்பெயர்ந்து வந்ததனால்....
சுதந்திரத்திற் கென்ன செய்வோம்?

# வந்ததனால்...

-எழிலன்.

"மலர்வீசி மஞ்சந்தன்னில்
மகிழ்ந்திடவே வைத்தபோதும்
குலப்புத்தி சிங்களவன்
இதயத்துள் பகைமையொன்றே!
கலங்கா தேதமிழா!
கரந்தூக்கிப் போரிடவா!"
புலம்பெயர்ந்து வந்ததனால்....
புலிகள்குரல் கேட்கிறதா?

தலந்தேடிப் புண்ணியங்கள்
பலசெய்யும் புண்ணியனே!
நலஞ்சேர்க்கச் சுதந்திரத்
தீயினுள் கருகினர் பார்!
நிலம்இன்றி எதிர்காலம்
உனக்கில்லை! உணராயேல்
புலம்பெயர்ந்து வந்ததனால்....
பயனில்லை உணர்வாயோ?

பலநூறு ஆண்டுகளாய்ப்
படித்திட்ட காவியங்கள்
சிலகாலப் புலிகளினால்
புதிதாக ஆகுகையில்
பலவாண்டு வெளிநாட்டில்
வாழ்கின்ற தமிழனுக்குப்
புலம்பெயர்ந்து வந்ததனால்....
புத்துணர்ச்சி வந்ததுவோ?

பலம்என்ற ஒன்று மட்டும்
இனம்காக்க உதவிசெய்யும்
பலம்இன்றி நீதிகேட்டால்
பயங்காட்டி நசுக்கி வைப்பான்
பலம்உண்டு நமக்கு அதனைக்
கட்டிக்காக்க உதவவேண்டும்
புலம்பெயர்ந்து வந்ததனால்....
கூடும் அது! செய்குவையோ?

வலம்வந்து தெய்வம்தன்னை
மன்றாடிக் கேட்பதையே
பலம்தன்னை நீதிக்கூட்டி
வெல்லவைத்தல் பெற்றுத்தரும்
நலம்வேண்டும் நமதுமக்கள்
உளம்பொங்கி மகிழவேண்டும்
புலம் பெயர்ந்து வந்ததனால்....
நீ உணர்ந்தால் உதவல் கூடும்.

# விடைபெறும் நேரங்கள்.



## இந்துமகேஷ்

நெடுங்கதை

1.

இவனுக்குத்தெரியாது....
இவர்களெல்லாம் யார்?
அன்றிலிருந்து இன்றுவரை.... இவனைச் சுற்றிச் சுற்றி வந்து போய்க் கொண்டிருக்கும் இவர்களெல்லாம் யார்?
இவனுக்குத் தெரியாது!
தொடரும் பயணம்...
ஆயத்தம் செய்தாயிற்று.
இங்கிருந்து எங்கோ..!
இங்கிருந்து என்பது இவனது தாயின் கருவறையிலிருந்து!
தெரிந்ததா அது?

பத்துத் திங்கள் ஒரு தாயின் வயிற்றில் தங்கியிருந்திருக்கிறேனே என்பதை இப்போது தனியாய் இருந்து நினைத்தாலும் மெல்லிதாய் ஒரு நடுக்கம்— நெஞ்சினுள்ளே.
எங்கிருந்து ஆரம்பித்த பயணம் இது என்று இன்றுவரை எவனும் சொன்னதாயில்லை.
ஆனால் வாழ்கின்ற காலங்களின் எச்சங்களாய் நினைவுகள்....

வாழ்ந்துமுடித்திருக்கிற இத்தனை ஆண்டுகாலத்திலும் எத்தனை நினைவுகள் மனதில் நிலைத்திருக்கின்றன....
வேண்டிய சிலவற்றை விட்டுவிட்டு மிச்சத்தையெல்லாம் காலம் கரைத்துப் போட்டுவிடுகிறது!
மறதி....
அதுகூட அவசியம்தான் பல சந்தர்ப்பங்களில்.
இல்லாவிட்டால் மனிதர்கள் அத்தனைபேருமே மனநோயாளர்களாய்த்தான் வலம் வந்து கொண்டிருப்பார்கள்.

இந்த மண்ணில் வாழ்க்கை என்று ஆரம்பித்தபிறகு
அறிவு தெரிந்த அந்தச்சின்னவயதின் முதல் நினைவு எது என்று இவன் பலதடவைகள் படம்போட்டுப் பார்க்க முயன்றிருக்கிறான்....

ஒருசில நிழற்படமாய்...
நடந்திருக்குமோ நடந்திருக்காதோ என்று மயக்கத்திலேயே தோற்றம்காட்டும்.

ஓரளவுக்கு இவனால் நினைவுபடுத்திப் பார்க்கமுடிந்தபோது —
ஒரு முதல் நினைவு....

இவனது பாட்டி செத்துக்கிடக்கிறாள் —
நன் மகள் வீட்டில்.
இவன் அந்தப் பாட்டி பெற்ற மகனுக்கு மகன்.
வீடு சற்றுத் தூரத்தில்!
இவனையும் அழைத்துப் போகிறார்கள்...
இவனது தந்தையைப் பெற்ற தாய் செத்துக்கிடக்கிறாள்....
அப்பு அழுகிறார். (அப்பு என்பது பழையதலைமுறையில் அப்பாவைக் குறிக்கும்) இவனுக்கு அழுகைவரவில்லை.

வெளியே —
இவனைப்போல் நாலைந்து சிறுபிள்ளைகள் — ஆண்களும் பெண்களுமாய் —
ஒப்பாரிகளைப் பற்றியோ ஓலங்களைப் பற்றியோ கவலைப்படாமல் வீட்டுக்குச்
சற்றுத் தூரத்தில் ஒன்றாய்க் கூடி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.
எல்லோருக்கும் கொண்டாட்டம்...
புதிய சொந்தங்கள் புதிய உறவுகள்...
கூடிவிளையாடக் கிடைத்த நேரம்.

பறைமேளம் கேட்டுக் கொண்டிருக்கிறது.
அது என்ன இப்படி ஒரு கொடுமையான சத்தம்...
மேளத்தோடு சேர்ந்து ஒப்பாரிகளும்...
ஐயோ....என்ர ஆச்சி....!"
இவனுக்கு அந்தப் பாட்டியின் முகம் அவ்வளவாக ஞாபகத்தில் இல்லை...
இப்போது மட்டுமல்ல அப்போதும்தான்!
எப்போதாவது இவனது வீட்டுக்குப் பக்கத்திலிருந்த கோயிலில்
திருவிழாவுக்கு மாட்டுவண்டியில் ஓரிருமுறை இந்தப் பாட்டி வந்தபோது
கண்டது மட்டும்தான்....
முகம் வடிவாய் ஞாபகத்தில் இருக்கவில்லை.

பாட்டி செத்துக் கிடக்கிறாள்!
பேரன் பேத்திமாரைக் கூப்பிடுங்கோ.... இந்தப் பந்தங்களைப் பிடிக்கட்டும்.!"
பந்துப் பன்னிரண்டுபேர் பேரப்பிள்ளைகள் என்று...
சின்ன பேரப்பிள்ளைகளுக்குள்ளேயே இவன்தான் குஞ்சு.
இவன் கையிலும் சின்னதாய் ஒரு தீப்பந்தம்.

அப்பாச்சிக்குப்பக்கத்திலை வந்து நிண்டு பிடி!"
அருகில் போய் நிற்கிறான்....
நல்ல வாசம் வருகிறது.
அப்பாச்சி வெள்ளைச் சீலைகட்டி மாலைபோட்டு நெத்திக்கும்
கண்களுக்கும் மூக்குக்கும் சந்தனம் பூசி ஊதுவத்திப் புகைக்குள்ளை
அமைதியாய்த்தான் கிடக்கிறா...

நாஞ்சநேரத்துக்குப் பிறகு
பெரிய பாடை — குதிரைப் பாடையிலை பெட்டிபோடை அப்பாச்சியை

வைச்சு
தூக்கிக்கொண்டு போயாச்சு...
இரவும் பறைமேளச் சத்தம்!

இந்த மேளச்சத்தத்துக்கு மட்டும்தான் கொஞ்சம் பயம்...
மற்றும்படி இருட்டுக்கு அவ்வளவு பயமில்லை!

அந்தச் சின்னக் கிராமத்தில் நிலவு பெரியதொரு சூரியனாய்
ஒளிவீசிக் கொண்டிருக்கிறது.
இவன் சிணுங்குகிறான் —
"எனக்கு ஒண்டுக்கு வருகுது!"
"வாவன் வளவுக்கை கூட்டிக்கொண்டுபோறன்!"
— ஆரோ ஒரு பாவாடை சட்டைக்காரி.
இவனைவிட நாலைந்து வயதுபெரியவள்...
உறவுமுறையில் பார்த்தால் இவனுக்கு மருமகள்.

"எனக்குப் பயமாக்கிடக்குது!"
"சீ...வாடா!"
— அவள் இவனது கையைப்பற்றி இழுத்துக்கொண்டு வீட்டுக்குப் பின்புறமாய்
கூட்டிப்போய் ஒரு பனைமரத்தடியில் விடுகிறாள்
"இருந்திற்று வா!"

வீட்டுக்குப் பின்புறமாய் வயல் வெளி.
ஆங்காங்கே அதிக நெருக்கமில்லாமல் சில பனைமரங்கள் உயர்ந்து நின்றன.
இவனுக்குத் தயக்கம்...
"நீயும் பக்கத்திலை வந்து நில்!"
"ஏன் பயமாக் கிடக்குதே!"
"ம்...!"
"சரி ...பயப்பிடாதை.... இரு!"
இவனுக்கு ஒண்டுக்குப் போய்க்கொண்டிருக்கிறது.

"டேய்....!"
"என்ன?"
"உனக்கு அழுகை வரேல்லையா?"
"ஏன்?"
"உன்ர அப்பாத்தை செத்திற்றா எல்லே...!"
"அதுக்கு...?"
"நீ அழேல்லையே?"
"ஏன்...? ஏன் நான் அழவேணும்?"
"அவ உன்ர அப்பாத்தை எல்லே?"
"அப்பாத்தை எண்டால்...?"

"உன்ர அப்புவைப் பெத்தவ!"
"அதுக்கு நான் ஏன் அழவேணும்...அப்பு அழட்டுக்கும்!"

□

எத்தனை வயது?
பதினான்கோ பதினைந்தோ..
அன்றைக்குத்தான் முதன்முதலாய் அவனைக் கண்டது..
அந்தச் சுருள்சுருளான கேசத்தின் கீழே பரந்த நெற்றியும் மருளவிழிக்கும் பெரியவிழிகளும் வசீகரமான மூக்கும் அதன்கீழே அந்தச் சின்ன இதழ்களும் அவைகள் விரிந்தால் விடிவெள்ளிகளின் சேர்க்கைகளாய்ப் பிரகாசிக்கும் அந்தச் சிரிப்பும்...

ஒருஅதிகாலைப் பொழுதில் —
தூக்கம் இன்னும் கலையவில்லை.
"டேய்...!" — அம்மாவின் பள்ளி எழுச்சி.
"எழும்பு... கொப்பர் தோட்டத்திலை காத்திருப்பேர்...போ!"
பள்ளிக்கூடம்?
இண்டைக்குச் சனிக்கிழமை...
படிப்பைச் சாட்டாக்கி வேலைக்குத் தப்பிக்கொள்ள முடியாது..
போய்த்தான் ஆகவேண்டும்.

புறப்படும்போது —
வீட்டுக் கிணற்றருகில் அவள்!
முன்பின் பார்த்தறியாத ஒரு முகத்துக்குச் சொந்தக்காரி!
இவன் ஆச்சரியப்பட்டான்.

இந்தக் காலைநேரத்தில் இங்கென்ன வேலை இவளுக்கு
"என்ன...?"
கட்டியிருந்த சாரத்தை இன்னும் சற்று உயரத்தூக்கி தனது வெற்று மார்பை மறைத்துக் கொண்டு கேட்கிறான்...
அவளது சின்ன இதழ்கள் இன்னும் விரிந்து...
"உம்மைக் கூட்டிக்கொண்டுபோக வந்தனான்!"
"எங்கை..?
"உங்கடை தோட்டத்துக்கு!"
"எங்கடை தோட்டத்துக்கோ...? ஏன்?"
"உம்மடை அப்புதான் கூட்டிக்கொண்டு வரச்சொன்னவர்...!"
"அதுக்கு நீ ஏன் வரவேணும்....உன்னை நான் ஒருக்காலும் இங்கை காணேல்லை!"
"இண்டைக்குத்தானை நான் இங்கை வாறன்....! என்ர பெரியண்ணை உங்கடை தோட்டத்தில வேலைக்கு வந்திருக்கிறேர்! நானும்தான் மிளகாய்ப்பழம் புடுங்க வந்தனான்!"
"வேலைக்கோ...?"

"ஓம்...!"
"நீர் பள்ளிக்கூடம் போறதில்லையே...?"
"அதுக்கெல்லாம் வசதி இல்லை!"
அவனோடு தோட்டத்துக்கு நடந்து போய்க்கொண்டிருக்கும்போதே நெடுங்காலம் பழகிய ஒருத்தியாய் அவள் ஐக்கியப்பட்டிருந்தாள்.

தன் உறவுக்காரி ஒருத்தியோடு கதைக்கிறது மாதிரி அவனோடு கதைத்துக்கொண்டு தோட்டத்துக்குப் போனான் அவன்.

சொந்தங்கள் எப்படி எங்கிருந்து ஆரம்பிக்கின்றன?
தெரியவில்லை...
எத்தனை ஆயிரம் பேரோடு பழகினாலும் ஒரு சிலர் மட்டும் உள்ளத்தைத் தம்வசமாக்கிக்கொண்டு
சொந்தக்காரர்களாகி விடுகிறார்கள்.
எவளோ ஒருத்தி...
முன்பின் பார்த்தது பேசியதுகூடக் கிடையாது...
ஆனால் திடீரென்று வந்து இரண்டு மூன்றுநாட்கள் தோட்டத்தில் வேலை செய்யத்தொடங்கி...
இப்போது அவளைப் பார்க்காதபொழுதுகளே விடியாது என்கிறமாதிரி நிலைமை மாறிவிட்டது...
படிப்பில் மனம் செல்ல மறுத்தது...
எங்கெங்கு பார்த்தாலும் அவளே நிறைந்துநிற்கிறமாதிரி ஒரு பிரமை...
உலகம் முழுதும் இனிமைகளால் நிறைந்துபோனது மாதிரி ஒரு உணர்வு...
"நேற்று உங்கடை வீட்டிலை ஏதும் பிரச்சினையே?"
— திடீரெனக் கேட்டாள் அவள்...
"இல்லையே ஏன்....?" என்றான் இவன் அவளது கண்களைப் பார்த்தபடி.
"இல்லை... நான் ஒரு விஷயம் கேள்விப்பட்டன்!"
இவன் ஆச்சரியமாக அவளைப் பார்த்தான்.
நான் மனதில் நினைத்திருப்பதை இவள் தெரிந்து கொண்டு விட்டாளா?
"என்ன..?"
ஆர்வமாய்க் கேட்டான்.
சொல்லு...சொல்லு...நான் உன்னைக் காதலிக்கிற விஷயம் உனக்குத் தெரிந்து விட்டதா சொல்லு! என்று மனது கூத்தடித்தது.
"நீர் படிப்பிலை கவனம் இல்லையெண்டு உம்மடை அப்பு உன்னை அடிச்சவராம்!"

வெட்கக்கேடு....
இதை இவள் கேட்காமலே விட்டிருக்கலாம்.
"ம்...!" என்றான் இவன்.
"ஏன்....படிக்கிறதிலை உமக்கென்ன கரைச்சல்?
"நல்ல பள்ளிக்கூடம் நல்ல வாத்திமார்... நல்ல தாய்தகப்பன்....இதெல்லாம் இருக்கிறபோது நல்லாப் படிக்கலாம்தானை!"
"இதெல்லாம் உமக்கென்னெண்டு தெரியும்?

"என்ன....?"
"எல்லாம் நல்லதுதான் எண்டு!"
"சும்மா கேள்விஞானம்தான்!"
"இவ்வளவு தெரிஞ்சிருக்கிற நீ ஏன் படிக்கேல்லை?"
"முடியேல்லை!"
"ஏன்?"
"என்னைப் படிப்பிக்க ஆருமில்லை... நான் குழந்தைப் பிள்ளையா இருக்கிறபோதே என்ரை அம்மா செத்திட்டா...! பிறகு கொஞ்ச நாளையிலை அப்பா!"
இவன் அவளை அனுதாபத்தோடு பார்த்தான்.
"பள்ளிக்கூடம் போய்க் கனக்கப் படிக்காட்டிலும் எனக்கு எழுத வாசிக்கத் தெரியும்!"
"அது தெரிஞ்சால் போதும்!" என்றான் இவன் பெரிய வித்துவான்போல்.

□

காற்றில் மிதக்கிற மேகங்களாய் —
மனவெளியில் அலைகிற நினைவுகள்.
எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாய் ஒரே நாளில் நினைவுக்குக் கொண்டுவரமுடியுமா?
அது சாத்தியமில்லாத காரியம்.
பழகிய எல்லா மனிதர்களையும் நினைவுக்குக் கொண்டுவர எத்தனை காலமாகும்?
பெற்றவர்களை முன்வைத்து தொடரும் உறவுகள் சகோதரங்கள் என்றும் உற்றம் சுற்றம் நண்பர்கள் என்றும் தொடர்ந்து....
ஒரு நீண்ட பயணம்தான் இது!
மனிதன் தூங்கி விழிக்கும் போது அவன் மறுபடி பிறப்பதாகத்தான் அர்த்தம்.
ஒருவினாடி இருந்தவன் மறுவினாடி இருப்பதில்லை.
மாற்றம் கணத்துக்குக் கணம் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது!

"அவனா... அருமையானவன்!" என்று விமர்சிக்கப்படும் ஒருவன் அதே வாயாலேயே சிலமணிநேரத்துக்குள்ளாகவே "அவனா...அயோக்கியன்!" என்று விமர்சிக்கப்படவும் கூடும்.
நிகழ்வதுதான் இது.
மாற்றம் எப்படி எவரிடம் நேர்ந்தது?
எதனால் இந்த மாறுபட்ட பார்வைகள்.
காரணம் ஒன்றுதான் —
கணத்துக்குக் கணம் மனிதன் மாறிக்கொண்டிருக்கிறான்.
மனிதன்மட்டுமா?
எல்லாம்தான்!
உயிருள்ளது உயிரில்லாதது
அசைவது அசைவில்லாதது எல்லாம்தான்!
ஆக, நேற்றிருந்தவனிடம் இன்றிருப்பவனைத் தேட முடியாது.

அவனாக இவன் இருந்தான்.
இவனும் இவனாக நாளை இருக்கப் போவதில்லை.

பத்துவயதில் இவனைச் சூழ இருந்த சொந்தங்களில் ஒருவர்கூட
இந்த ஐம்பதில் இல்லை...
இப்போது இருப்பவர்களெல்லாம் புதியவர்கள்.
ஆனாலும் இவனது சொந்தங்கள்.
இவர்களெல்லாம் எங்கிருந்து வந்தார்கள்.
மனைவி என்றும் மக்களென்றும் மருமக்களென்றும் பேரக்குழந்தைகள் என்றும்
உறவுகொண்டு வந்து சேர்கிற இவர்களெல்லாம் யார்?
தெரியவில்லை.
ஆனால் இவர்களெல்லாம் இவனது வாழ்க்கையை
அர்த்தமுள்ளதாக்குகிறார்கள்!
அதுமட்டும் உண்மை!

"மாஸ்ரர்!" என்ற குரல்கேட்டு வகுப்பறையின் கதவுப்பக்கம் பார்வையைத் திருப்புகிறான் இவன்.
அவள்!
இருபது வருடங்களுக்கு முன்னால் இவனுடன் தோட்டத்துக்கு மிளகாய்ப் பழம் பிடுங்க வந்தவள்.
இப்போது சற்று நரைவிழுந்த தலையுடன் பழசான ஒரு கைத்தறிச் சேலையில் உடல்மெலிந்து களையிழந்த முகத்தோடு ஆனாலும் இப்போதும் மாறாத அந்தச் சிரிப்புடன்....
"என்ன சிவப்பாத்தை?"
இவன் அப்படித்தான் அவளை அழைப்பான்.
"என்ரை மகளைக் கூட்டிக்கொண்டு வந்தனான்!"
"எங்கை அவள்...ரெண்டுநாளாப் பள்ளிக்கூடத்துக்கும் வரேல்லை!"
"மாட்டன் எண்டு நிக்கிறாள்.... வீட்டுநிலைமையிலை இப்ப தனக்குப் படிப்பு வேணாமாம்!"
"அவளை இங்கை முன்னாலை வரச்சொல்லு!"
"வாவனடி!" என்று தனக்குப் பின்னால் தயங்கிநின்ற மகளை முன்னுக்கு இழுத்து இவன்முன்னால் விட்டாள் அவள்.
தாயைப் போல பிள்ளை!
பாவாடை சட்டையில் தலையைக் குனிந்தபடி நின்றாள் அவள்.
"ஏன் படிக்க மாட்டனென்கிறை?"
"விருப்பமில்லை!"
"ஏன்...?"
"வீட்டிலை ஒரே கரைச்சல்! ஐயா நெடுகிலும் கள்ளுக் குடிச்சிட்டு வந்து அம்மாவை அடிக்கிறோர்!"
"டியேய்...!" என்று அவசரப்பட்டு அவளைப் பிடித்துப் பின்னுக்கு இழுக்கிறாள் சிவப்பாத்தை.
"இல்லை மாஸ்ரர்... இவள் சும்மா ஏதோ சாட்டுச் சொல்லவேணுமெண்டு சொல்லுறாள்!"

"சரிவிடு... அதுக்கு நீ ஏன் இவ்வளவுபதட்டப்படுகிறை! எனக்கும் எல்லாம் தெரியும்!"
"மாஸ்ரர்...?"
அவளது குரல் கம்பிக்கொண்டது...
"எல்லா மனிசருக்குள்ளையும் ஏதாவது ஒரு பலகீனம் இருந்து கொண்டுதான் இருக்கும்... வாழ்க்கையிலை பற்றுள்ளவனுக்கு ஆசை உள்ளவனுக்குஅது கொஞ்சம் கூடுதலாய் இருக்கும்.... அது அவனவன்ரை இயல்பைப் பொறுத்தது... குடி உன்ரை மனிசன்ரை பலகீனம்... அதிலை அவனுக்கு ஒரு சந்தோசம் இருக்கெண்ட அவன்ரை நினைப்பை மாத்தினாலொழிய அவன் மாறமாட்டான்... மகளிலை அவனுக்குப் பாசம் அதிகரிக்கிறமாதிரி— மகளின்ரை வாழ்க்கையிலை முன்னேற்றத்தைவிரும்பிற ஒரு தகப்பனாய் அவன்மாறிட்டால் அவன்ரை குடிப்பழக்கம் குறைஞ்சிடும்.... அதுக்கேதாவது செய்முடியுமா எண்டு முயற்சிபண்ணிப் பார்!"
"ஆனா... இவளின்ரை படிப்பு...!"
"அதை நான் கவனிக்கிறன்... நீ கவலைப்படாதை!"

இவளை இவன் நேசித்தான்...
இன்றுவரை அந்த நேசம் மாறவில்லை!
ஆனால் இவளைக் கல்யாணம்பண்ணிக் கொள்ளத் தடைகள் பல பல்வேறு காரணங்களாய் வந்து குறுக்கிட்டன.
இவளும் வேறு ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு
இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாக....

இவனும் படித்து ஆசிரியராகி தன் கிராமத்திலேயே தான் படித்த பாடசாலையிலேயே பதவிபெற்று....
காலம் போய்க்கொண்டிருக்கிறது.

இது எந்தவகைச்சொந்தம் என்று இவனுக்கு இப்போதும் விளங்கவில்லை.
இவளை இப்போதும் நேசிக்கிற இந்த மனம் இவளது துயரங்களைக் கேள்விப்படுகிறபோதெல்லாம் துடித்துத் தவிக்கும்...
இவள் சந்தோசமாய் இருக்கிறாள் என்று கேள்விப்பட்டால் குதித்துக் கும்மாளம் போடும்.
இப்போது இவளது மகளையே தன் மகளாகவும் எண்ணுகிற மனம்...
இந்தச் சொந்தங்களெல்லாம் எப்படி...
எங்கிருந்து இவனைத் தேடி வந்தன...?
இவைகளுக்கு ஏதாவது பூர்வீகத்தொடர்புகள் இருந்தனவா?
இருக்கின்றனவா?
இவன் தன்னுள் கேட்டுக்கொண்டான்...

(அடுத்த இதழில் முடியும்)

# புலிக்கொடியின் புதிய பரணி!

—வீ.ஆர்.வரதராஜா.

தமிழர்களை புலிகள் என அழைப்பது இன்று நேற்று ஏற்பட்டதொன்றல்ல! பல்லாயிரம்ஆண்டுகட்குமுன்பே தமிழர்களைப் 'புலிகள்' என்றுதான் அழைத்தனர். வீரம்நிறைந்த புலிகளின் மண் தமிழ் மண்.

தமிழர்களின் வீரப்பரம்பரை அறியாத சிலர் 'புலிகள்' என்றதும் இயக்கம் என்று கூறி ஒதுங்கிநிற்க முயற்சிக்கின்றார்கள். ஆனால் பல்லாயிரம் ஆண்டுகட்குமுன்பே வீரத்துடன் உலகை வலம்வந்த தமிழ்க்கொடி எங்கள் புலிக்கொடி.

தர்மத்தை சூதுகவ்வுவதுபோல் சங்கம்வளர்த்த தமிழனின் வீரத்திற்கும் சோதனை ஏற்பட்டு 14ம்நூற்றாண்டளவில் தமிழரின் ஆட்சி வீழ்த்தப்பட்டது. தமிழர்கள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டார்கள் எனக் கருதிய ஏகாதிபத்தியம் 20ம் நூற்றாண்டில் ஈடு இணையற்ற புலிக்கொடி தாங்கிய நவீன சோழனின் வருகையால் தடுமாற்றம்கொண்டுள்ளது.

கடந்த ஆறுநூற்றாண்டுகளில் உலகிலுள்ள எட்டுக்கோடி தமிழ்மக்களும் தமக்கென ஓர் ஆட்சி இல்லாததினால் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். தமிழர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளை வல்லாதிக்கம் மிக்க கரங்கள் மேற்கொண்டுள்ளன. தட்டிக்கேட்க நாதியற்ற இனமாக தமிழினம் தறிகெட்டு நெறிகெட்டு காடுகளும் நாடுகளுமாக ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் ஓடிக்கொண்டிருக்கும் தமிழினம் மானம் காக்கும் நவீனசோழவீரன் புலிக்கொடிதாங்கிய பிரபாகரன் குரல்கேட்டு நின்று திரும்பிப்பார்க்கத் தொடங்கிவிட்டார்கள்.

மீண்டும் புலிவீரம் உலகில் கால்பதித்துவிட்டது.

அடிமைத் தளையை உடைத்துக்கொண்டு புலிவீரத்தலைவன் பிரபாகரனின் தலைமையில் புலிவீரர்கள் அணிவகுத்து நிற்கின்றனர்.

ஆனால் தமிழர்களின் வீரத்தில் தமிழருக்கே சந்தேகம் வரக்கூடாது. சங்ககாலத்தை ஒருமுறை புரட்டிப் பாருங்கள். வியூகம் அமைத்து வீரம் விளைப்பதில் சோழர் ஒன்றும் சளைத்தவர்களில்லையே!

போர்முரசம் கேட்டதும் போர்த்திசை நோக்கி புலிவீரர் பாய்ந்திடுவர் புலிப்போந்தாய்! போர்ப்பரணி ஒலியெனில் எதிரியின் சாக்காடு நிச்சயம். புலிக்கொடியை வீழ்த்துபவன் புவியில் வாழத்தகுதியற்றவன். புலிவீரர் புகழ்பாடும் புறநானூற்றுப் பதிகம்கூறும் வீரசாகசங்கள் மெய்சிலிர்க்க வைப்பவை. புலிக்கொடி தாங்கிய சோழநாட்டில் விளைந்த வீரம் ஒன்றா இரண்டா! சோழத்தமிழ் மன்னர்களின் நீதிவழுவாத ஆட்சியை மக்கள் கவிஞர்கள் தத்துவக் கருத்துக்களுடன் எடுத்துக் காட்டியுள்ளனர். இலஞ்சமும் பஞ்சமும் இல்லாத மலர்ச்சியான காலங்கள் அவை!

சங்கத்தமிழில் கால்பதித்த புலிமன்னன் சோழன் நலங்கிள்ளி குறையில்லா செங்கோல்கொண்டு ஆட்சிசெய்தான். அப்போது ஒருநாள் அத்தாணி மண்டபத்தில் அரசுபுரிதல் எளிதல்ல என ஆன்றோரிடை வாதம் வளர்ந்திட, வீரத்துடன் அறிவும்புலமையும்கொண்ட வேந்தன், அன்றிருந்த அரசுமுறை பற்றிக் கருத்தறிவித்த ஆற்றல்கண்டு அவைச்சான்றோர் அவனைப் போற்றிப் புகழ்ந்து ஏற்றிமகிழ்ந்தனர்.

"மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்
பால்தாவந்த பழவிறல்தாயம்
எய்தினம் ஆயின், எய்தினம் சிறப்பு எனக்
குடிபுரவு இரக்கும் கூரில் ஆண்மைச்
சிறியோன் பெறின் அது சிறந்தன்று மன்னே!
மண்டு அமர்ப் பரிக்கும் மதனுடை நோன்தாள்
விழுமியோன் பெறுகுவன் ஆயின், தாழ்நீர்
அறுகய மருங்கின் சிறுகோல் வெண்கிடை
என்றூழ் வாடுவரல்போல, நன்றும்
நொய்தால் அம்மதானே — மைபற்று
வீசும் உற ஓங்கிய வெண்குடை
முரசுகெழு வேந்தர் அரசுகெழு திருவே"

(புறநானூறு பாடல், 73,75 — பாடியவர் சோழன் நலங்கிள்ளி)

(பொருள் விளக்கம், —
பால்தாவந்த பழவிறல் தாயம், — விதிமுறைப்படி வந்த (வாரிசு) அரசுரிமை. கூரில் ஆண்மை, — ஆண்மைமிகக்கொண்டிராத, மண்டு அமர், — பெரும்போர், மதன், — மனஎழுச்சி, பரிக்கும், — (எதிர்நின்று) தாங்கிடும். அறுகயம், — வற்றிய குளம். கிடை, — நெட்டி. நொய்து, — எளிதானது.)

"முடிபுனைந்த மூத்தோர் மறைந்து, அவர்
வழித்தோன்றல் முடியேந்தி நாடாளும் வாய்ப்புப்பெறின்
அவர்தம் இயல்புக்கேற்ப ஆட்சியின் தன்மை
அமைந்திடும் என்பேன்!
குடிகளைக் கசக்கிப் பிழிந்து
வரிகளைக் குவித்து ஆள்பவர்க்கு
ஊக்கமில்லாக் காரணத்தால்
தூக்கமுடியாப் பளுவாகும் ஆட்சிப்பொறுப்பு!
அஃதன்றி எதற்கும் அஞ்சாது நின்று
பகைமிரட்டல் என்பதற்குப் பணியாமல்
கேடின்றி நாடுகாத்திடும் அரசுகளை
ஏடுபுகழும் மறவாதீர்!
வற்றிய குளத்தில் காய்ந்துலர்ந்த
முற்றிய நெட்டித்தக்கையென
கையிலொரு அன்னச் சிறகுபோல்
கனம் சிறிதுமின்றி எளிதாகத் தானிருக்கும் அந்த ஆட்சி!"

— இவ்வாறு, ஆட்சியின் இருவகைத்தன்மைகளைக்கூறிய மாட்சியை அறிஞர்கள் வியந்தனர். அரசன் நலங்கிள்ளியை வாழ்த்தினர். கல்வி,செல்வம்,

வீரம் நிறைந்த வீரர்கள் வாழ்ந்த சோழர் பரம்பரையினர் காலம் தமிழர்களின் பொற்காலம் என்றுதான் புறநானூறு கூறுகின்றது. அடைத்துவைத்தாலும் உடைத்துக்கொண்டு வெளியே வரும் புலிமன்னர்கள் புவியாண்டுள்ளார்கள்.

புகார் நகரில் உறையூரில் பறக்கின்ற
புலிக்கொடிக்குச் சொந்தக்காரன்
கட்டிஎங்காளைக் கரிகால் சோழன் தானென்று
பட்டினப்பாலை பலகதை சொல்லும்.

நெருப்பிடை நீந்தி குழந்தையாயிருந்த திருமாவளவனைத் தூக்கி வெறுப்புறு பகைவர் சிலரின் உயிரையும் போக்கி பொறுப்புடை பணியினை கிழவன் ஆற்றியபோது, அந்தத் தீப்பொறிகள் பட்டுக்குழந்தை வளவன் சற்றுக் கருகியதாம். கருகியகாலன் கறுப்புத் தழும்பும் கிழவன் கண்ணுக்கோர் அழகாய்த் தோன்றியதால் திருமாவளவன் கரிகால் பெருவளத்தான் என்று திருத்தி அமைத்தான் சோழப்பிள்ளையின் பெயரை! முனிவர் வேடம்பூண்டு வந்த சதிகாரர்கள் நித்திரையிலிருந்த இளைஞன் கரிகாலனை கைது செய்த சிறையில் அடைத்தார்கள். ஆனால் அந்தச் சிறையையே உடைத்துக்கொண்டு வெளியேறிய கரிகாலன் எதிரிகளையும் பந்தாடியவீரம் பட்டினப்பாலை பழம்நூலில் படம்பிடித்துக் காட்டியுள்ளார் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்ற சங்கத்தமிழ்ப்புலவர். இத்தகைய வீரர்கள் எங்கே இனித் தோன்றப்போகின்றார்கள் என்ற அவநம்பிக்கை தமிழ் மக்கள் மத்தியில் இருந்தது. ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற அமைப்பை ஏற்படுத்தி பல்வேறு வீர சாகசங்களையும் செய்ததின்மூலம் பண்டைய சோழர்களையும் மிஞ்சிய வீரனாக திரு வே.பிரபாகரன் இன்று திகழ்கின்றார். தமிழர்களின் தலைவனாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அவர் தமிழர்களின் புதிய வீரவரலாறுகளை ஏற்படுத்திக்கொண்டு வருகிறார் உலகில் எட்டுக்கோடி தமிழ்மக்களும் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணமாக இருப்பவர் அவர். விடுதலைவீரர் பலரை ஈன்றெடுத்த வல்வெட்டித்துறை தந்த இருபதாம் நூற்றாண்டின் சோழர் எங்கள் பிரபாகரன். "அறிவுக்கு இனிப் பாவாணரே தலைமை! தமிழரின் மறத்திற்கு ஈழத்து எல்லாளன் பிரபாகரனே தனிப்பெருந்தலைவன்! தமிழரின் வீரத்தை உலகத்தில் மீண்டும் அரங்கேற்றிவரும் புதியபுறநானூற்றுத் தலைவனே தமிழரால் போற்றுதற்குரியவன்! இக்காலக் கரந்தடிப்போரிற்குப் புதிய இலக்கணமானது அவனது தமிழ் மறம்! தமிழ் நாட்டின் விடுதலைக்கு அத்தகைய தலைவனொருவன் இயல்பாகவே தோன்றும்வரை, அந்த எல்லாளனுடைய வீரமும் துணிவும் கொள்கை கோணாமையுமே தமிழகத்திற்கு நன்கு வழிகாட்டட்டும்! இந்த ஓர்மை, இன மானமிக்க தமிழிளைஞரிடம் வேர்கொண்டுவிட்டால் தமிழர்களுக்கு இனி எந்த இரவல் தலைவனும் போலித் தலைவனும் தேவையில்லை!

— குணா.

(1995ல் வெளிவந்த இந்திய — பெங்களூர் ஆய்வரண் வெளியீடான 'திராவிடத்தால் வீழ்ந்தோம்!' எனும் நூலிலிருந்து. நன்றி — களத்தில்.)

இதேபோன்று தமிழீழவிடுதலைப்போரை முற்றுமுழுதாக ஆதரித்து

நிற்கும் திரு.பழ. நெடுமாறன் திரு.பிரபாகரனைப் பற்றிக் கூறுவதைக் கேளுங்கள்.

"சிங்கள இராணுவத்தை கதிகலங்க அடித்து,இந்திய இராணுவத்தை திணற வைத்து மாபெரும் சாதனை புரிந்துவருகிற திரு பிரபாகரன் உலகின் தலைசிறந்த கெரில்லா போர்த்தளபதிகளில் ஒருவர் என்ற புகழினைப் பெற்றுள்ளார். தமிழர்கள் வீரப்பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்ற பெருமையினைத் தமிழினத்துக்கு அவர் ஈட்டித்தந்திருக்கின்றார்.உலகில் தமிழன் தலைநிமிர்ந்து நடக்க வழிசெய்த பிரபாகரனின் வாழ்க்கை வரலாற்றை ஒவ்வொரு தமிழனும் படித்துப் பெருமிதம் கொள்ளவேண்டும். தாழ்ந்த தமிழினம் மீண்டும் எழுச்சிபெறவேண்டும்!" என்றார்.

— தமிழர் எழுச்சியின் வடிவம் பிரபாகரன் என்ற நூலில் திரு நெடுமாறன் அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளார்.சோழ மன்னர்களின் வீரகாவியங்களை எல்லாம் மிஞ்சி நிற்கும் போர்ச்சாதனைகளைப் புரிந்த பெருவீரன் எம் பிரபாகரன்.

சங்கத்தமிழில் இடம்பெற்ற திருமாவளவன் கரிகால் பெருவளத்தான் என்ற சோழமன்னனுக்கும் புதிய புறநானூறு ஒன்றைப் படைத்துக் கொண்டிருக்கும் தமிழ் தேசியத் தலைவர் திரு பிரபாகரனுக்கும் பலநூறு ஒற்றுமைகள் உண்டு.

அவற்றில் ஒன்று கரிகாலன் என்ற காரணப்பெயர்.

ஆரம்பகாலத்தில் கைக்குண்டுகளை பிரபாகரன் தானே தயாரித்தபோது எதிர்பாராதவிதமாகக் குண்டுவெடித்து அவரதுகாலில் எரிகாயம் ஏற்பட்டது. சிகிச்சைக்குப்பின்னர் அந்த இடம் கருமையாக மாறியது.அதனால் கரிகாலன் என்னும் புனைப்பெயரும் அவருக்கு அமைந்துவிட்டது. அடிமைப் பட்டிருந்த தமிழினம் எழுச்சிபெற்றுவிட்டதென்பதையும், தமிழரின் தாயகம் தமிழீழம் என்பதையும் உலகிற்குப்பறைசாற்றி நிற்கின்றார் எங்கள் கரிகாலன். சர்வதேச அங்கீகாரம்கோரி தமிழீழம் இன்று உலகின்முன் வைக்கப் பட்டுள்ளது. அதைப்பற்றி உலகின் பலநாடுகள் இப்போது சிந்திக்கத் தலைப்பட்டுவிட்டன.

தர்மம் என்றும் வெற்றிபெறும்என்பதற்கு தமிழீழவிடுதலைப் போராட்டம் சிறந்ததோர் உதாரணமாகும். சக்திவாய்ந்த அரசொன்றை எதிர்த்துநின்று வெற்றிபெறுவதென்பது சாதாரண விடயமல்ல. திட்டமிட்டு செயற்படும் திரனாய்வின் மூலமே இந்நிலை சாத்தியமாகும். தமிழீழவரலாற்று நாயகன் பிரபாகரன் தமிழீழவிடுதலைப் போராட்டத்தின் மத்தியில் சமூகப் புரட்சியொன்றையும் ஏற்படுத்தியதை இங்கு யாரும் மறுக்க முடியாது. விவசாயம், மீன்பிடி, நீதி, வர்த்தகம் என சகல துறைகளிலும் தம் கவனத்தையும் பதித்து செயற்படும் ஒரு சிறந்த தலைவர். நீதி தவறாத ஆட்சியும், மக்கள் நிரந்தர வருமானம்பெற்று மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என்றும் திட்டமிட்டு போராட்டம் நடாத்தும் தலைவர்களில் இன்று ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறார் தலைவர் திரு பிரபாகரன்.

திருகோணமலை கோட்டையிலுள்ள கல்வெட்டு கூறுவதுபோல் தமிழன் இன்று தன்னைத்தானே ஆட்சிசெய்யும் காலம் வந்துவிட்டது. தமிழீழத் தேசியத்தலைவர் திரு பிரபாகரனின் தலைமையின் கீழ் ஆயிரக்கணக்கான போராளிகளும் கோடிக்கணக்கான தமிழர்களும் இன்று அதற்காக தயாராகிக்

கொண்டிருக்கின்றார்கள். தலைவரின் ஆணைக்காக உலகத் தமிழினம் இன்று காத்திருக்கின்றது. இக்காலம் தமிழரின் பொற்காலம் என்றே கூறவேண்டும். நாளைய புறநானூறுஎழுதும் தமிழரின் வீர காவியத்தின் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கொடூரம் நிறைந்த ஏகாதிபத்தியத்தின் பற்களைப் பிடுங்கும் புலித்தலைவன் கரிகாலன் பிரபாகரனின் காலம் இது. புலிக்கொடியின் புதியபரணி எழுதும் தகுதி படைத்த தலைவன்.

தமிழனின் புலிக்கொடி மீண்டும் எழுந்துவிட்டது.

உலகின் கடைசித்தமிழன் உள்ளவரை புலிக்கொடிக்கு இனிமேல் வீழ்ச்சியில்லை என வீரமுழக்கமிடும் புலித்தலைவனின் சங்க நாதம் கேட்டு உலகத் தமிழினம் இன்று ஒன்றுபட்டுவிட்டது.மக்கள் தமக்கேற்படும் சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியிலும் தங்கள் விடுதலைக்காக புலிக் கொடியின்புதியபரணிகேட்டுவிழிப்படைந்துள்ளனர்.சோழனின் வழித்தோன்றலான உலகின்தலைசிறந்தவீரர் திரு பிரபாகரனின்பின்னே அணிவகுத்துச் செல்வதை அவர்கள் தம் கடமையாகக் கருதுகின்றனர்.

'சூரியக்கதிர்' பாரிய இராணுவ நடவடிக்கையின் மூலம் சிறிலங்கா அரசாங்கம் எவ்வித வெற்றியையும்பெறவில்லை. மாறாக தமிழீழத் தேசியத் தலைவர் திரு பிரபாகரனின்மீது நம்பிக்கையையும்,தமிழீழம் மலரப் போகின்றதென்ற எதிர்பார்ப்பையும் மக்களிடம் மேலும் உறுதிப்படுத்தியுள்ளது. இந்த இருபதாம் நூற்றாண்டில் புலிக் கொடியுடன் புறப்பட்டுவிட்ட திரு வேலுப்பிள்ளை பிரபாகரன் உலகின் எட்டுக்கோடி தமிழர்களின் அதிபலம் வாய்ந்த தலைவர் என்பதை அறுதியிட்டுக் கூறலாம்.

உயிராயுதம் ஏந்திய மாபெருந் தியாகப் படையொன்றை கரும்புலிகள் என்ற பெயரில் ஏற்படுத்தி உலகையே தம்பக்கம் கவர்ந்து கொண்ட மக்கள் தலைவர் பிரபாகரன். கரும்புலிகளின் தியாகத்தின் எதிரே இன்று சர்வாதிகாரம் தலைகுனிந்து நிற்கின்றது. உயிரோடு வெடிக்கின்ற இந்த நெருப்பு மனிதர்கள் தமிழினம் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காக தங்களையே அழித்துக் கொள்கின்றார்கள். ஆயிரம் ஆயிரம் வீரம்படைத்த தமிழர்களின் பழம்சரித்திரம்காணாத இந்தப் புத்தம்புதுப்படை புலிக்கொடியின் புதிய பரணியில் உதித்ததுபுதிய வரலாறு படைக்கும் கரும்புலிகளின் பெயரைக்கேட்டாலே சிங்களஇராணுவம் நடுநடுங்கிப்போகும். சங்ககாலத்திலும் சரி, அதற்கு முற்பட்ட — பிற்பட்ட காலத்திலும் சரி தமிழ்ப்பெண்களின் வீரத்திலும் குறையிருக்கவில்லை.ஆனால் எக்காலத்திலும் இல்லாதவகையில் இருபதாம் நூற்றாண்டில் பெண்கள் படையணி ஒன்றை புலிக்கொடியின் கீழ் அமைத்துள்ளார் புரட்சித் தலைவர் பிரபாகரன்.இராணுவ எதிரிகளுடன் நேருக்குநேர் நின்று சமர்புரிந்தும்,இராணுவ முகாம்களினுள் பெண்புலிகளாகச் சீறிப்பாய்ந்தும் சாதனைநிகழ்த்துகின்றார்கள் இக்காலத் தமிழ்ப்பெண்கள். பெண்களைப் பற்றிய புதிய சரித்திரம் ஒன்றை எழுதவைத்த மாபெரும் தலைவன் எம் பிரபாகரன்.

'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்!' — இலட்சோப இலட்ச மக்கள் இதயங்களில் நிலையாகவாழும் தலைவர்பிரபாகரனின் காலத்திலேயே தமிழீழம் மலரும்என்பதில் சிறிதும் ஐயமில்லை.புதிய சங்கத்தமிழும் புதியபுறநானூறும் புதியசோழன் பிரபாகரனின் புலிக்கொடியின் புதியபரணியொன்றை எழுதிக் கொண்டிருக்கின்றது.

□□□

# பூவரசு வழங்கும் தொடர்கள்.....

வீ. ஆர். வரதராஜா எழுதிவரும்

## இலக்கிய முத்துக்குளியல்

தோமாஸ் வெல் எழுதிவரும்

## பிறமொழியும் கற்போம்

டொச் தமிழ் பாடத்தொடர்

இந்துமகேஷ் எழுதிவரும்

## இரவு என்பது இருட்டல்ல

தொடர் நவீனம்

எழிலன் எழுதி வரும்

## சத்தியத்தின் சுவடுகள்

படைப்பாளர் வாசகர் பங்குகொள்ளும்

## சந்திப்போம் சிந்திப்போம்.

இந்துமகேஷ் மறுபடி தொடரும்

## என் வாசகர்களைத்தேடி.

(அநுபவத் தொடர்)

**ஆகிய அம்சங்கள் பூவரசு பங்குனிமாத இதழில் தொடரும்**

# தைமகளே வா!

தைமகள் வருகின்றாள் – என்
அத்தைமகள் வருகின்றாள்!
பூ விலே வண்டுறங்க
பூ விழிகள் தாம் சிறக்க
பாவிலே கருத்துறங்க
பாவலனாய் நான் சிறக்க
தைமகள் வருகின்றாள் – என்
அத்தைமகள் வருகின்றாள்.

காலைப்பனியில் காதல் உறவில்
சோலைக்கருவில் சுந்தரத்தமிழில்
பூ விதழ் கதவுகள் மெள்ளத் திறந்திட
தித்திக்கும் கள்ளுச் சுரந்திட
சித்திர ரதமேறி
தைமகள் வருகின்றாள் – என்
அத்தை மகள் வருகின்றாள்.

மார்கழித் திங்களில் ஆளாகி
மாமன் எனை எண்ணி நூலாகி
காதலைச் சுமந்தவள் வருகின்றாள்!
கவிஞனாய் என்னை அழைக்கின்றாள்!

பாட்டாறு மிதமிஞ்சிப் பாலாறாய் ஊற்றெடுக்க
கூட்டாகச் சேர்ந்து கூடிவயல்விதைத்து
தையிலே கதிர் சமைக்க
தைமகளே வா!
என் அத்தைமகளே வா!

*–எஸ். விக்கினேஸ்வரன்.*
(பிரான்ஸ்)

முதற்பரிசுக் கட்டுரை

# ஐரோப்பிய நாடுகளில் எமது குழந்தைகள்.

-த. பவானந்தராஜா

"குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள் மழலைச்சொல்கேளாதவர்!" என்கிறார் வான்புகழ் கொண்ட வள்ளுவர்.

"ஒவ்வொரு குடும்பத்திற்கும் கடவுளால் வழங்கப்படும் மாபெரும் செல்வம் குழந்தைச் செல்வம்தான்!" என்கிறார் அன்னை தெரேசா.

இன்றைய குழந்தைகள்தாம் எதிர்கால அறிஞர்கள். இந்த அறிவுச்செல்வங்களான எமது குழந்தைகள் எமதுநாட்டில் நடக்கும் இனக் கலவரம் காரணமாக எம்மோடு சேர்ந்து அந்நிய நாடுகளுக்கு அகதிகளாக வரவேண்டியசூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அத்தோடு இந்த நாடுகளிலும் நமக்குக் குழந்தைகள் பிறந்தனர்.

இங்கு நமதுகுழந்தைகள் தாங்கள் வாழும் நாட்டு மொழியையே முதல்மொழியாக ஏற்றுப் படிக்கவேண்டிய சூழ்நிலை.இதனால் தாயகத்தில் தாய்மொழிமூலம் சிலவருடங்களுக்கு கல்வி பயின்றுவிட்டு இங்குவந்து ஐரோப்பிய மொழியில் கல்வியைத் தொடரும் பிள்ளைகள் ஆரம்ப காலங்களில் மிகவும் கஷ்டங்களை எதிர் நோக்குகிறார்கள்.

அதேவேளை பாலர்வகுப்பிலிருந்தே ஐரோப்பிய மொழிமூலம் கல்வியைத் தொடரும் பிள்ளைகள் ஐரோப்பியப் பிள்ளைகளுக்கு நிகராகக் கல்வியில் திறமைகாட்டுகிறார்கள். இவர்களுக்குத் தாய்மொழி என்ற இடத்தை அந்நிய மொழியே ஆக்கிரமித்துள்ளது. ஐரோப்பியநாடுகள் அனைத்துமே பிள்ளைகளுக்குத் தரமான கல்வியையே வழங்குகின்றன.

எங்கள் தமிழ்ப்பெற்றோர்கள் இயல்பாகவே தமது பிள்ளைகளின் கல்வியில் மிகவும் கவனம் செலுத்துபவர்கள். இங்கு ஒருபிள்ளை தனக்கு ஆர்வமான எந்தத்துறையைத் தேர்ந்தெடுத்தாலும் அந்தத் துறையில் மிகவும் உன்னத நிலையை அடைய நிறைய வாய்ப்புக்கள் உண்டு.

கல்வியைத் தொடரமுடியாத பிள்ளைகளுக்குக்கூட நல்ல தொழிற்கல்வி பயிற்றுவிக்கப்படுகின்றது. இதன்மூலம் பல சுயதொழில்கள் செய்யக்கூடிய வாய்ப்புக்களும் உண்டு.

அனேகமாக எமது பெற்றோர்கள் தமது பிள்ளைகள் ஒரு வைத்தியராகவோ பொறியியலாளராகவோ வரவேண்டும் என்றுதான் விரும்புபவர்கள். ஐரோப்பிய நாடுகளில் பெரும்பாலும் எல்லாத்தொழில்களுமே மதிக்கப்படுகின்றன. பிள்ளைகள் எந்தத்துறையில் ஆர்வம்காட்டுகிறார்களோ அந்தத்துறையிலேயே பிள்ளைகள் படிப்பதற்கு ஊக்கமளிக்க வேண்டியது பெற்றோர்களின் கடமையாகும். இங்குவளரும் குழந்தைகளுக்கு ஐரோப்பிய மொழியோடு தாய்மொழியையும் கற்பதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவேண்டும்.

சிலபெற்றோர்கள் தாய்மொழியைப் படிப்பதனால் ஐரோப்பியமொழியில் படிக்கும் தமது பிள்ளைகளின் படிப்பு குழம்பிவிடுமோ என்று அஞ்சுகிறார்கள். தாய்மொழியைப் படிப்பதனால் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. பத்து வயதிற்குட்பட்ட பிள்ளைகள் ஐந்துக்கு மேற்பட்ட மொழிகளைக் கிரகிக்க முடியும் என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

ஐரோப்பியமொழியுடன் சேர்த்து தமிழ்மொழியையும் நல்லமுறையில் படித்தால்தான் இங்கு படித்து ஒரு நல்லநிலையை அடையும் எமது பிள்ளைகளினால் எமது தமிழ் இனம் பயன்பெறமுடியும்.

தமிழ் ஒரு வளமானமொழி, பக்திமொழி என உலக மக்களால் அங்கீகரிக்கப்பட்ட மொழி. தனித்து இயங்கக்கூடிய ஆற்றல்மிக்க மொழி. நமது மொழியின் பெருமையையும் வரலாறுகளையும் நாம் வாழும் அந்நியநாட்டவருக்கும் அறியப்படுத்தவேண்டும். எமது பிள்ளைகளுக்கும் இவற்றை அறியப்படுத்தவேண்டும்.

இதற்காக எமது பிள்ளைகளுக்கு ஐரோப்பிய மொழியின் தரத்திற்கீடாக தமிழ்மொழியையும் கற்றுக்கொடுக்கவேண்டும். அனேகமாக இங்கு வளரும் பிள்ளைகள் ஐரோப்பியப் பிள்ளைகளுடனேயே தமது பெரும் பொழுதுகளைச் செலவிடுவதனால் பல விடயங்களில் அவர்களுடைய பாணியையே பின்பற்றுகின்றார்கள்.

எங்கள் கலாச்சாரமும் ஐரோப்பிய கலாச்சாரமும் மிகவும் மாறுபட்டது.இங்கு குழந்தை பிறந்தவுடனேயே தனியறைக்குப் போய்விடுகிறது. இங்கு பெரும்பாலும் பிள்ளைகளுக்கு அடிப்பது கிடையாது. பாடசாலைகளிலும் இந்த முறைதான் பின்பற்றப்படுகின்றது.

சிறுவயது முதலே ஆண்பெண்குழந்தைகள் சகஜமாகப்பழகுவது போலவே பருவவயது வந்தபின்னரும் சகஜமாகப் பழகுகிறார்கள். 18 வயதிற்குமுன் திருமணம் செய்வது அனுமதிக்கப்படாவிட்டாலும் அதற்கு முன்னரே ஆண்பெண் இருபாலாரும் நெருங்கிப்பழகுவதை இவர்கள் பொருட்படுத்துவதில்லை. இங்கு வளரும் நமது தமிழ்ப்பிள்ளைகள் பல விடயங்களில் ஐரோப்பிய பாணியில் வளர்ந்தாலும் பிள்ளைகள் பருவ வயதடைந்ததும் குறிப்பாக பெண்பிள்ளைகள்மீது நாம் மிகுந்த கட்டுப்பாடுகளை விதித்துவிடுகின்றோம். பரம்பரை பரம்பரையாக நம்மால்

கடைப்பிடிக்கப்பட்டுவந்த சில ஒழுங்கு விதிகளை எம்மால் மிக இலகுவில் விட்டுவிட முடிவதில்லை. பெரும்பாலான எமது திருமணங்களை பெற்றோர்தான் பேசித் தீர்மானிக்கிறார்கள். ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்நெறிகொண்டது எமது தமிழர் கலாச்சாரம். எமது பிள்ளைகளும் இந்த ஒழுக்க நெறிகளைப் பின்பற்றிவாழவேண்டும் என்றுதான் நாம் விரும்புகிறோம்.

ஆனால் எமதுகுழந்தைகள் இங்கு வெளியில் வித்தியாசமான சூழலிலும் வீட்டில் எமது கட்டுப்பாட்டிற்குக் கீழும் வாழ்வதனால் உளரீதியாகப் பாதிப்புக்குள்ளாகிறார்கள். ஆகையினால் பெற்றோர்கள் பிள்ளைகளிடம் கூடுதலான அன்பைச் செலுத்தவேண்டும்.

அத்தோடு எமது கலாச்சாரத்தை நாம் பின்பற்றுவதால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் ஐரோப்பியக்கலாச்சாரத்தில் சிலவற்றை நாம் பின்பற்றுவதால் விளயக்கூடிய தீமைகளையும் பிள்ளைகளுக்கு விளக்கிக் கூறுவதன் மூலமும் பிள்ளைகள் பாதைமாறாமல் தடுக்கமுடியும். இப்படிக்கூறுவதால் ஐரோப்பியக் கலாச்சாரங்கள் மோசமென்பதல்ல. நமது கலாச்சாரத்தில் பல சிறப்பம்சங்கள் உண்டு என்பதைப் பிள்ளைகளுக்குப் புரியவைப்பதற்காவே. இங்கு வயதுவந்த பிள்ளைகள் சிலர் தமக்குக் கிடைக்கும் சுதந்திரம் காரணமாக குடிப்பழக்கம், புகைப்பழக்கம், போதைமருந்து பாவித்தல், பாலியல்ரீதியான பல கெட்டபழக்கங்கள் என்பனவற்றுக்கு இலகுவில் அடிமையாகிறார்கள். எமது பிள்ளைகளும் இப்படிப்பட்ட பிள்ளைகளுடன் நெருங்கிப்பழக நேரிட்டால் அவர்களும் இப்படியான தீயபழக்கங்களுக்கு வசப்பட்டுவிட வாய்ப்புண்டு.ஆகவே பெற்றோர்கள்தான் பிள்ளைகளின் சினேகிதர்களைக் கண்காணித்து இப்படியான பிள்ளைகளுடன் பழகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அதேவேளை எமதுபிள்ளைகள் முற்றுமுழுதாக ஐரோப்பியப் பிள்ளைகளிடமிருந்து ஒதுங்கிவிடாமலும் இருக்கப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

இங்கு பிள்ளைகளின் முக்கிய பொழுதுபோக்கு தொலைக்காட்சிதான். சில பிள்ளைகள் நான்குஐந்து மணித்தியாலங்களுக்கு மேல் தொலைக்காட்சி பார்க்கிறார்கள். இப்படிப் பலமணிநேரம் தொலைக்காட்சி பார்ப்பதனால் கண்பார்வை பாதிக்கப்படுவதுடன் பத்திரிகை புத்தகங்கள் வாசிக்கும் பழக்கங்களும் இல்லாமல்போய்விடுகிறது. தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் விளம்பரப்பொருட்களைப் பார்த்துவிட்டு தாங்களும் அதை வாங்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். எல்லாப் பெற்றோர்களாலும் அவற்றை வாங்கிக்கொடுக்க முடியாது. இதனால் பிள்ளைகள் பெற்றோர்மீது வெறுப்புக் கொள்கிறார்கள். அவர்களின் மனநிலையிலும் பாதிப்பு ஏற்படுகிறது. பிள்ளைகள் தொலைக்காட்சி பார்ப்பதற்கு செலவிடும் நேரத்தை பெற்றோர்கள் கட்டுப்படுத்தவேண்டும்.

எமது பிள்ளைகள் தொடர்ந்து இங்கேயே இருக்க நேரிட்டால் தமிழ்மொழி ஓரளவிற்கு கதைக்கத்தெரிந்தாலும், எழுத வாசிக்கத்தெரியாதவர்களாக நமது நாட்டைப்பற்றி அறியாதவர்களாக நமது கலை கலாச்சாரங்களைப்பற்றி அறியாதவர்களாகத்தான் வளர்வார்கள்.இவர்களுக்கு இனப்பற்று மொழிப்பற்று இருக்குமா என்பதும் சந்தேகம்தான்.

ஐரோப்பியநாடுகளில் வெளிநாட்டவர்களுக்கெதிரான உணர்வு வளர்ந்து

கொண்டு வருவதோடு வேலையில்லாத்திண்டாட்டமும் இருக்கின்றது.இந்த நிலையில் எமதுபிள்ளைகள் படித்து ஒரு நல்லநிலைக்கு வந்தாலும் இங்கு தகுதியான தொழில்வாய்ப்பினைப்பெற்று நிம்மதியாக வாழமுடியுமா என்பதும் கேள்விக்குறிதான்.

தமிழ்மக்களாகிய நாம் எமது சொந்தநாட்டிலும் இரண்டாந்தரப் பிரஜைகளாகத்தான் நடாத்தப்பட்டோம். நம்நாட்டுப் பெரும்பான்மையினரின் மொழி நம்மீது திணிக்கப்படுவதை எதிர்த்தோம்.

நமது தாய்மொழி அழிந்துவிடும் என்பதற்காக.

ஆனால் இங்கு யாருமே திணிக்காமலேயே எமது குழந்தைகள் அந்நிய மொழியைப் பயின்று தாய்மொழியை மறக்கும் ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். நாம் இங்கும் இரண்டாந்தரப் பிரஜைகளாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எமது பிள்ளைகள் எவ்வளவு காலம் இங்கு இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டாலும் நமது தாய்நாடு ஈழம், நமது தாய்மொழி தமிழ், நாம் தமிழர், நமக்கு என்றோர் கலை கலாச்சாரம் உண்டு என்ற உண்மைகளை மறக்காமல் வாழப்பழக்கவேண்டியது பெற்றோர்களின் கடமையாகும்.

□□□

# வாழ்த்துகிறேன்!

*வருடா வருடம் வருகின்ற தையினிலே*
*தருகின்றாய் புதுமலர்கள் தளதளத்து நிற்கின்றாய்*
*பூச்சிரிப்பால் என்னைப் பூட்டிவைத்த பூவரசே!*
*பேச்சென்னவென்றுமடி போதைதரும் சிரிப்பினிலே.*

*மூடம் முடிச்சவிழ்ப்பு மோட்டுத்தனங்களினைச்*
*சாடும் நீ சாராதே சாரமில்லார் படைப்புக்களை.*
*மூடுன் கிளைபரப்பி மூட்டியபழி கள்ளிகளை.*
*பாடும் கவிக்குயில்கள் பாருன்னைப் போற்றிடுவர்.*

*பூவரசே! என் இனியதமிழேடே! தமிழாலே*
*பூ அரசாய் நீநின்று பூவாண்டாய் பூவண்டு*
*நானுன்னைக் கண்டின்று ஆனடைந்தா? அழகே வா!*
*தேனுண்ணத்தா! இன்பத்தமிழென்ற இதழாலே!*

— அழலாடி.

# பொங்கல் பெருவிழா!

பொங்கல்.
உழைப்பின் உள்ளொளி!

பொங்கல்.
மண்ணைக்கீறி
விண்ணைப்பார்க்கும் திருவிழா!

பொங்கல்.
உழவுப் பெருமகனின்
மதிப்பீட்டு வரைகோடு!

பொங்கல்.
வேர்வை துளிக்குள்
இயற்கையின் காட்சி!

பொங்கல்.
பசுமைக்குக் கிடைத்த
பரிசில்!

பொங்கல்.
பத்திரப்படுத்தப்பட்ட
பழம்பெரும் திருவிழா!

பொங்கல்.
உண்மைச்சிரிப்பின்
ஓய்யார ஆட்டம்!

பொங்கல்.
தமிழனின் தார்மீக விழா!



சீ. அருணாசலம்
(பகாவ், மலேசியா)

# சில நினைவுகள்.

—இராஜன் முருகவேல்.

பூவரசு 5வது ஆண்டை நிறைவுசெய்து 6வது ஆண்டில் காலெடுத்து வைக்கிறது.

ஐரோப்பாவில் வெளிவரும் சஞ்சிகைகளுள் இலக்கியநயத்துடனும் பொழுது போக்கு அம்சங்களுடனும் இதழுக்கு இதழ் வித்தியாசங்களுடனும் நடுநிலைபிறழாது அனைத்துத்தரப்பு வாசகர்களையும் அணைத்துச்செல்லும் பூவரசு மாத சஞ்சிகையையும் அதன் ஆசிரியர் திரு இந்துமகேஷ் அவர்களையும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

தாயகத்தில் ஈழத்து எழுத்துலகில் நியூவேவ் எழுத்தாளர் எனத் தனக்கென ஒரு தனிமுத்திரைபதித்த இந்துமகேஷின் எழுத்தின் இனிமை—நியூவேவ் என்ற பதத்திற்கு அர்த்தம்சேர்த்த அந்த கனவுகளைத் தூண்டிவிடும்போக்கு—ஜெர்மனியில் குறுநாவல்கள் வெளியிடும்வரை தொடர்ந்து— பூவரசில் குறைந்தது அல்லது மறைந்தது பெருங் குறையாயினும் அவரது எழுத்தின் முதிர்ச்சி சஞ்சிகைக்கு இலக்கியநயம் சேர்ப்பதை மறுக்கமுடியாது.

ஒரு தனிமனித முயற்சியில் புகலிட இலக்கியத்தில் ஆழ வேரூன்றி வளரும் பூவரசு சஞ்சிகையைப் பாராட்டும் வேளையில், கடந்த காலங்களில் ஜேர்மனியில் தோன்றி மறைந்த சஞ்சிகைகளையும் மறக்கமுடியாது.

அதிலும் 1985 ஆனிமாதம் 'வசந்தம்' என்ற சஞ்சிகையை உருவாக்க நானும் என்னுடன் லங்கென்பீல்ட்நகரில் வசித்த சில நண்பர்களும் அடைந்த சிரமங்களை பூவரசு வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வதில் தவறில்லை என நினைக்கிறேன்.

1985ல் சஞ்சிகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடான நேரம்.

எங்காவது தூர இடங்களுக்குச்சென்றே சஞ்சிகைகளையோ கதைப் புத்தகங்களையோ தேடிவாங்கவேண்டிய நிலை. இந்த நிலையில்தான் நாமே ஏன் ஒரு சஞ்சிகையை உருவாக்கக்கூடாது என்ற எண்ணம் எழுந்தது. சஞ்சிகை ஒன்றைத் தொடங்கத் தீர்மானித்தோமே தவிர அதைப்பற்றிய முன் அனுபவம் எம்மில் எவருக்குமே கிடையாது. எனினும் குமுதம்,கல்கிபோன்ற இந்தியச் சஞ்சிகைகளையும் சிரித்திரன், மல்லிகை, கதம்பம், மாணிக்கம் கலாவல்லி, கலகலப்பு போன்ற ஈழத்துச் சஞ்சிகைகளையும் வாசித்த அனுபவங்களையும் கொண்டு வசந்தம் வெளிவந்தது.

1985ம் ஆண்டு ஒரு நகரத்தைவிட்டு இன்னோர் நகரத்துக்குச் செல்ல முடியாத தடை. தற்போதுஉள்ளதுபோல் இருபக்கமும் பிரதிபண்ணக்கூடிய 'போட்டோக்கொப்பி' இயந்திரம் லங்கென்பீல்ட் என்ற சிறிய நகரத்தில் கிடைக்கவில்லை. அதனால் வசந்தம் ஆரம்பத்தில் ஒவ்வொரு பக்கம் ஆக்கமும் மறுபக்கம் வெறுமையாகவும் வெளிவந்தது.

இந்தவேளையில் திரு இந்துமகேஷ் அவர்களின் கையெழுத்தில் அவரது

சிவம்(லூனன்), ரூபன்(முல்கைம்), பாபு, கலைநிலா, நந்தன் (ஓபகௌசன்) போன்றோர் நினைவில் நிற்கிறார்கள்.

நாம் எதிர்பார்த்தவாறு 'வசந்தம்' பரவாவிட்டாலும் மாதாமாதம் எம்மை நாடிவந்த வாசகரின் நாலைந்து கடிதங்கள்கூட எமக்கு உற்சாகமூட்டக் கூடியனவாக இருந்தன.

எனினும் சஞ்சிகை உற்பத்திச்செலவு, விநியோகப் போக்குவரத்துச்செலவு ஆகியன எமக்குப் பொருளாதாரச் சுமைகளை ஏற்படுத்தியதால் வசந்தம் தொடர்ந்து வெளிவரமுடியாமல் நின்றது. 'வசந்தம்' மூன்று இதழ்கள் வெளிவந்த வேளையில் நொயிஸ் நகரிலிருந்து நம்நாடு என்ற சஞ்சிகையும், அதனைத்தொடர்ந்துஅறுவை,கலைவிளக்கு,ஏலையா,போன்ற சஞ்சிகைகளும் தட்டெழுத்தில் தூண்டில்,பிரளயம் போன்ற சஞ்சிகைகளும் தோன்றி காலப்போக்கில் சஞ்சிகைகளின் தோற்றம் பரவலாகினாலும் — இவற்றில் பல முக்கியமாகப் பொருளாதாரப் பிரச்சினைகளால் தொடர்ந்து வெளிவராமை துரதிர்ஷ்டமே. ஆரம்பத்தில் தென்றல், கலைவிளக்கு சஞ்சிகைகளின் வெளிப்பாட்டுக்குப் பின்புதான் தமிழ்ச்சஞ்சிகைகளுக்குச் சில ஸ்தாபனங்களின் உதவிகளைப் பெறலாம் எனத்தெரியவந்தது.ஆனால் இந்த உதவிகள்கூட மிகச் சொற்பமானதாகவும் சஞ்சிகைகளின் சுதந்திரமான போக்கை மட்டுப் படுத்துவதாகவுமே அமைகின்றன.

பொதுவாக எழுத்தாளர்களின் படைப்புக்களில் பல — சிகரட்டுக்கு அடிமையாகாதே — குடிக்கு அடிமையாகாதே என்ற பாணியில் அறிவுரை கூறும். ஆனால் எழுத்தாளர்களை எழுதாமல் இருக்கச் சொல்லுங்கள். அவர்களால்முடியாது. ஏனெனில் அவர்கள் எழுத்துக்கு அடிமையானவர்கள். அதில் ஒருவித சுகத்தை அனுபவிப்பவர்கள்.அவர்களால் அந்தச் சுகத்தில் இருந்து சுலபமாக மீளமுடியாது.

அதுவும் ஜேர்மனியில் ஒரு சஞ்சிகையை உருவாக்கும் வேலை இருக்கிறதே...

குறுநாவல்கள்வெளிவந்தன.அவை தரத்திலும்வடிவமைப்பிலும் வசந்தத்திலும் ஒருபடி மேலேநின்றன. இதனால் வசந்தத்தின் வடிவமைப்பில் கவனம் செலுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஒருவாறாக இருபக்கமும் பிரதிசெய்யக்கூடிய போட்டோப்பிரதி இயந்திரத்தை டுசில்டோவ் என்ற நகரில் கண்டுபிடித்தோம். ஆனால் அந்த நகரத்திற்குச் செல்ல அனுமதி இல்லை. அப்போது அந்த நகரப் புகையிரதநிலையத்தில் பொலிசாரின் தொல்லைகளும் அதிகம். எனினும் சஞ்சிகைவெளிவரவேண்டும் என்ற ஆவல் சட்டத்தைமீற வைத்தது. முதலாவது வசந்தம் சஞ்சிகை 1985 ஆனிமாதம் லங்கென்பீல்ட், சோலிங்கன், இராட்டிங்கன், ஓபகௌசன் போன்ற நகரங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

இன்றைய காலகட்டத்தில் ஒருசஞ்சிகையைப் புதிதாகவெளியிடுவதானால் ஏனைய சஞ்சிகைகளிலோ பத்திரிகைகளிலோ விளம்பரம்செய்வதன் மூலமாகச் சஞ்சிகையைப் பரவலாக்கலாம். அன்று அந்த வசதி இல்லாவிட்டாலும் வசந்தம் நாம் விநியோகித்த நகரங்களைவிட வேறு சில நகரங்களுக்கும் மெதுவாகப்பரவி சில எழுத்தாளர்களின் ஆக்கங்களையும் தாங்கியது. இவ்வாறு வசந்தத்தை அலங்கரித்த எழுத்தாளர்களுள் பாலா(எசன்),

ஆக்கங்களைத் தரம்பிரிப்பது, பின் சஞ்சிகைக்கு ஏற்றாற்போல் எழுதுவதோ அல்லது கணனியில் அச்சாக்குவது,பக்கங்களாக அமைப்பது,எஞ்சும் வெற்றிடங்களை நிரப்பத்தலையைப்பிய்ப்பது, போட்டோப் பிரதியெடுக்கப் போவது, பக்கங்களை ஒவ்வொன்றாகச்சேர்த்துச் சஞ்சிகையாகக் கோர்ப்பது, முகவரி எழுதுவது, முத்திரை ஒட்டுவது, அவற்றைச் சுமந்துகொண்டு தபாற்கந்தோருக்குச் செல்வது, இவ்வாறு ஒருமாதம் கழிய மீண்டும் வாசகரின் கடிதங்களையும் ஆக்கங்களையும் படித்துத் தரம்பிரிப்பது, சுயமாகஎழுத முயற்சிப்பது இவற்றிற்குமத்தியில் தன் குடும்பத்தைக் கவனிப்பது.


இவ்வாறான ஒரு கஷ்டத்துடன் சஞ்சிகை வெளியிடுவதன் நோக்கம் என்ன? என்பதைப்பற்றிச் சில தாயக எழுத்தாளர்கள் சிறிதும் சிந்திக்காமல் தமது சாந்தகுணம் களைந்து காழ்ப்புணர்ச்சியோடு எரிமலையாகக்குமுறி இத்தகைய புகலிட முயற்சிகளைக் கொச்சைப்படுத்துகிறார்கள் என்பதை அறியும்போது வேதனையாகக்கூட இருக்கிறது. ஆனால் இத்தகைய கொச்சைப்படுத்தும் போக்கானது அவர்களது எழுத்தாளத்தன்மையை வாசகர்களுக்கு அம்பலப்படுத்தி உண்மையைத்தெளிவாக்கும் என்பதுதான் கண்கூடு.

□□□

**படைப்பாளர்களின் கவனத்திற்கு!**

*பூவரசு இனிய தமிழ் ஏடு-*
*உங்கள் கருத்துச் சுதந்திரத்திற்கு இடமளிக்கிறது!*
*எழுதப்படும் ஆக்கங்களின் கருத்துக்கள்*
*ஆக்கதாரரின் சுய உரிமை.*
*பூவரசு அவற்றிற்குப் பொறுப்பாகாது!*
*மனிதநேயத்தோடு,*
*சமுதாய நலன்கருதி படைக்கப்படும்*
*படைப்புக்களைப் பூவரசு*
*இதயபூர்வமாக வரவேற்கிறது!*

— ஆசிரியர்


எங்கள்
இளந்தளிர்கள்

**அன்புச் செல்வங்களே!**

எங்கள் பூவரசு இந்த இதழிலிருந்து தனது 9வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. பூவரசு ஆரம்பித்தபோது சின்னஞ்சிறுவர்களாய் இருந்த உங்களில் பலர் இப்போது பெரியவர்களாய் இருப்பீர்கள்.

"வயதுக் கட்டுப்பாடு காரணமாக இந்தத் தடவை எங்களால் இளந்தளிர்களுக்கான போட்டிகளில் பங்கு கொள்ள முடியவில்லை!" என்று பல தம்பி தங்கைகள் குறைப்பட்டிருக்கிறீர்கள்.

"இன்னும் நிறையப் போட்டிகளை எங்களுக்கு ஏற்றவாறு தயாரித்து எங்களை உற்சாகப் படுத்துங்கள்!" என்றும் கேட்டிருக்கிறீர்கள்.

'ஆண்டுக்கு ஒருமுறைமட்டும் போட்டிகளை நடத்தாமல் அடிக்கடி போட்டிகளை நடத்தினால் நல்லது!' என்றும் உங்களில் ஒருசிலர் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறீர்கள்.

உங்கள் கருத்துக்களையும் கவனத்தில் கொள்கிறோம். இந்த ஆண்டு பூவரசு நடாத்திய போட்டிகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமதுபாராட்டுக்கள் வாழ்த்துக்கள்! பரிசு பெற்றவர்களுக்குத் தனித்தனியாக கடிதமூலம் அறிவித்துள்ளோம்.

வெற்றிபெற்றவர்களின் பெயர் விபரங்கள் யாவும் அடுத்த பூவரசு இதழில் வெளியாகும்.

— ஆசிரியர்.

# எலியும் பூனையும்.

-ஓரங்க நாடகம்-

(ஒரு எலியைக்கண்டு அதனுடன் நட்புக்கொள்ள விரும்புகிறது ஒரு பூனை. ஆனால் எலியோ பயந்து ஓடுகிறது.)

பூனை —

வரவிடு வரவிடு சுண்டெலியே
வருவேன் இனி உந்தன் வாசலுக்கே!

எலி —

விடு விடு எனை நீயும் விரட்டாதே
விருந்தென வருவேன் நான் உனக்கே!

பூனை —

பழையது பழையது மறந்துவிடு
பாசம் இதுவென உணர்ந்துவிடு

எலி —

புதியது புதியது உறவுகளே
புரிபடப் புரிபடப் பகையாமே!

பூனை —

மனிதரை மனிதரை நினைக்காதே!
மறுபடி மறுபடி துடிக்காதே!
அவர்குணம் அடிக்கடி இடம்மாறும்
அவரைப்போல் எனையும் நீ நினைக்காதே!

எலி —

பகைதனை மறந்திடும் உறவெதுவோ?
பசித்திடப் புசித்திட இரைவருமோ?
இரையென எனையிங்கு எடுத்திட வருகிறாய்
அருகினில் வர எனைப் பயம்விடுமோ?

பூனை —

பசித்திடப் புசித்திடப் பாலுமுண்டு
பகைதனை அறுத்திட நேசமுண்டு
உயிர்தனை அழித்தொரு உடலினைப் புசித்திட
உண்மையில் நான் இன்று வெறுப்பதுண்டு!



எலி —

மனிதரை மனிதரே கொல்லுகிறார்
மறுபடி மறுபடி வெல்லுகிறார்
கொல்லவும் வெல்லவும் குறிவைத்த இவர்களை

கொல்லவும் வெல்லவும் எவர் வருவார்?

பூனை —
கொல்வதும் வெல்வதும் மனிதர்களே
குணமதை நமதினம் மறந்திடுமே!

(எலி பூனைமீது நம்பிக்கை வைத்து அருகில் வருகிறது)

எலி —
பூனையாரே பூனையாரே
புரிந்துகொண்டீர் சேதி
மனிதரைப்போல் வாழும்வாழ்க்கை
நமக்கினிமேல் வேண்டாம்
பூனையாக எலியாக
புரிந்துகொண்டு வாழ்வோம்.
புரியாத மனிதருக்குப்
பாதை ஒன்று சொல்வோம்.

பூனை —
எலிகளோடு பகைவளர்த்த
பூனை இன்று இல்லை
எவ்வுயிரும் தன்னுயிரே
என்று எண்ணுவேனே!
நாளை ஒரு காலம்வரும்
நல்லவரே வாழ்வார்
நல்லவர்க்குத் தீங்குசெய்த
வஞ்சரெல்லாம் வீழ்வார்.

எலி —
நாயோடு பூனை இங்கு
சண்டையிட்ட துண்டு
நாள்தோறும் பூனை எலி
புசித்ததுவும் உண்டு
நாய் பூனை எலி எல்லாம்
இன்று ஒன்றாய் வாழும்
நன்றிகெட்ட மனிதர்மட்டும்
நம்மைவிட மோசம்!




பூனையும் எலியும் —
அன்பு கொண்ட மனிதருக்கு
அனைத்துயிரும் ஒன்றாம்
அன்பில்லாத மனிதரிலும்
விலங்குகளே நன்றாம்.

-இந்துமகேஷ்.






வர்ணம் தீட்டுங்கள்.
| = நீலம். • = மஞ்சள். + = பச்சை. O = சிவப்பு.




இங்கே 3 கணக்குகள் உள்ளன. இலக்கங்களுக்கிடையே பொருத்தமான கணிதக் குறியீடுகளை இடுவதன்மூலம் சரியான விடை வரவேண்டும்.

## கண்டு பிடியுங்கள்!




இலக்கங்களை
இணைத்துப்பாருங்கள்.



இங்கே 6 கறுப்புவட்டங்கள் உள்ளன. இவற்றை நீங்கள் 3 வட்டங்கள்வீதம் 3வரிசையில் அடக்கவேண்டும். எப்படி?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ↓ | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | → |



மேலுள்ள இலக்கங்களில் அம்புக்குறியிடப்பட்டுள்ள 6ம் இலக்கத்திலிருந்துஆரம்பித்து ஒரு கோட்டின்வழிலாக 28ம் இலக்கத்தினூடாக வெளியேற வேண்டும். ஒருமுறை கோடிடப்பட்ட இலக்கத்தில் மறுபடி செல்லக்கூடாது. முயற்சித்துப்பாருங்கள்.



விடைகள் அடுத்த இதழில்.

# உலக அரங்கில் தமிழர் தாய்மொழி.

**Dr.செல்லத்துரை ஆனந்தவரதன்**
(Ph.D,M.Ed.)

5.6 பிலியன் மக்களைக்கொண்ட இந்த உலகில் சுமார் 4000மொழிகள் பேசப்பட்டு வருகின்றன.

சுமார் 200 வருடங்களுக்கு முன்பு 10,000 மொழிகள் இருந்ததாயும் பின் பிரபலமான அல்லது பெரும்பான்மை மொழிகள் வாழவும், சிறுபான்மை அல்லது பழங்குடிபாசைகள் அழியவும்செய்தன எனவும் அறியவருகின்றது. சகல பாசைகளும் ஒரு தொடர்ந்த மாறுதலுக்கு உட்படுகின்றன. மாற்றமும் வேறு பாசைகளை கலத்தலும் நடந்து வருகின்றது. மொழிப்பிரச்சினையின் அடிப்படை தாய்ப்பாசை, நாட்டின் தேசியபாசை இரண்டும் வேறாகவும் ஒன்றுடன் ஒன்று பலப்பரீட்சை செய்யும்போதும் வருவதாகவும் உள்ளது.

உலகின் பல பகுதிகளில் சமூக அரசியல் பொருளாதாரத்துடன் தாய்மொழி சம்பந்தப்பட்டதாக இருப்பதால், இதுவே சிலசமயம் அரசியல் பிணக்குகளுக்கும் கொந்தளிப்புகட்கும் காரணமாக இருக்கிறது.

மொழியுடன் தொடர்பான பிரச்சனைகள் இலங்கை, இந்தியா, ரஷ்யா, பொஸ்னியா, ஸ்பெயின், வேல்ஸ், தென் ஆபிரிக்கா, ஏனைய நாடுகள் பலவற்றிலும் உண்டு.

ஒரு நாட்டின் பொதுப்பாசை (உம்.— ஆங்கிலம்) பல இன மக்களையும் ஒன்றுசேர்க்கும் தன்மையையும் கொண்டது.ஆனால் எது பொதுப்பாசையாக இருப்பது என்பது ஒரு பிரச்சனைக்குரிய விடயமாகவே பல நாடுகளில் உள்ளது. உதாரணமாக சிங்களமா? ஆங்கிலமா? என்ற பிரச்சனை இலங்கையிலும், இந்தியா? ஆங்கிலமா? என்ற பிரச்சனை இந்தியாவிலும் காணப்படல்.

இலங்கையில் தமிழர்தாய்மொழிக்கு உரியமதிப்பும் உரிமையும் வழங்கப் படாமை, அவர்களை மனம்வெறுத்து, விரக்தி அடைந்து தனிநாடுகோரச் செய்தது. ஆங்கிலத்துடன் நன்கு பழக்கமான பல தமிழர்கள், பேசவோ, விளங்கவோ, எழுத வாசிக்கவோ தெரியாத சிங்களத்தை பொதுப்பாசையாக்க மறுத்தனர். திணிக்கமுயலும் சிங்களவர்போக்கு இதற்கு மேலும் உரமூட்டியது.

தற்போது சுமார் 65 பிலியன் தமிழ்பேசுவோர் உலகில் வாழ்கிறார்கள். உலகில் 18வது இடத்தில் தமிழ்பேசுவோர் தொகை உள்ளது.
இந்தியாவில் இந்தி, தெலுகு,பெங்காலி, மராத்திக்கு அடுத்து தமிழ்பேசுவோர் அதிக தொகையில்(1987ல் 54 பிலியன்) வாழ்கின்றனர்.
திராவிட மொழிபேசுவோர் 1987ல் 181 பிலியனாக இருந்தபோது இந்தி பேசுவோர் 220 பிலியனே.
மலேசியாவில் 1985ல் 642,000 தமிழ்பேசுவோரும்,மொறிசியசில் 1986ல் 37,000 தமிழ்பேசுவோரும்(பலதமிழர் பிரஞ்கிறியோல் பேசுகின்றனர் தமிழை மறந்துள்ளனர்) சிங்கப்பூரில்(தமிழ் சீன,மலே,ஆங்கிலத்துடன் அரசமொழியாக உள்ளது) 1984ல் ஏனைய இந்தியருடன் சேர்ந்து 169,000 பேரும் இலங்கையில் 1986ல் 3.5 மிலியன் தமிழ்பேசும் மக்களும் உள்ளதாக பிரித்தானிய உலக தரவு கூறுகிறது.
சரியான புள்ளி விபரம் தற்போது அறியவேண்டியது முக்கியம்.
பல இந்தியத்தமிழர் தம்மை இந்தியர் எனப் பதிவதால் தமிழர் விபரம் சில நாடுகளில் அறிவது கடினம்.அதேபோல் பல இலங்கைத்தமிழரும்,தம்மை மேல்நாடுகளில் இலங்கையர் எனப்பதிவதால் தமிழர் விபரம் அறிவது கடினமாகும்.
பர்மா,பிஜி,இந்தோனேசியா,தென் ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பிய வட அமரிக்காவிலும் தமிழர் விபரங்கள் அறிந்து தொகுக்கப்படல் அவசியம்.

பல தமிழ் தொண்டர்கள்,சமூக சேவை நிறுவனங்கள்,தமிழ் சங்கங்கள்,மூலம் புதிய உற்சாகத்துடன் நவீனதொடர்புச்சாதனங்களால் தமிழை வளர்த்து வருவது மகிழ்வானதே!

நாமுண்டு நம் குடும்பமுண்டு என தமிழர் இராது,நல்ல தமிழ் வளர்ப்பு முயற்சிகட்கு ஊக்கம் அளிக்கும்பண்பு நல்லது! பாராட்டத்தக்கது!
வேற்று இனத்தவர் தம்மொழியில்காட்டும் பற்றும் ,தமிழுக்கு உலகமெங்கும் காட்டும் பாகுபாடும்,அடக்குமுறையும், அலட்சியமும், சில மேற்கத்தையரின் பாராட்டும், பழமை,இனிமை,செழுமையுள்ள நம்தமிழ்மொழியை பாதுகாப்பது முக்கியம் எனும் உணர்வை தமிழர்க்கு ஊட்டியுள்ளன.
உலகின் பலமூலைகளிலும் தமிழர் கலைநிகழ்ச்சிகள் அன்றாடம் நடந்து கொண்டு வருகின்றன. சிலவேற்று இன மக்கட்கு இவை வெறுப்பு, பயம், பொறாமை, கோபம் ஆகியவற்றை ஊட்டினும்,பலரை பல்லினகலைகளைப் பரந்தமனத்துடன் இரசித்து ஏனையோரும் நம்போன்ற மக்களே! அவர்களிடமும் திறமையுண்டுஎனும் அங்கீகாரம்,ஆச்சரியம்,மதிப்பை இந்தக் கலைநிகழ்ச்சிகள் ஊட்டிவருகின்றன.
ஜேர்மனியில் தமிழர் ஒருவர் தொடங்கிய தமிழ் தொலைக்காட்சியை இலங்கையிலுள்ள சிங்கள அரசு தடுத்துநிறுத்தும் முயற்சியில் ஈடுபடுவதை வேற்று இன குறுகியமனப்பான்மைக்கு ஒரு உதாரணமாகக் கொள்ளலாம்.
1956ல் இலங்கையில் பண்டார நாயக்கா கொண்டுவந்த தனிச் சிங்களச்சட்டம் பல தமிழரை வேலைஇழக்கவும்,பதவி உயர்வுதரமறுக்கவும் காரணமாயிற்று. இனக்கலவரங்களையும் தமிழர்க்கு தந்து பல தமிழரை கொல்லவும் அது காரணமாயிற்று.

இந்தியாவிலும் இந்தியை அனைவருக்கும் இணைப்பு மொழியாகக் கொண்டுவரும் முயற்சி திராவிடர் எதிர்ப்பால் வெற்றிபெறவில்லை.
தம்மொழியில் சிங்களவர்,இந்திக்காரர் காட்டிய தீவிர பற்றும்,அதிகாரத்தனமும் தமிழரை தம்மொழியை ஆவேசத்துடன் பாதுகாக்கச்செய்தது.
அதில் தப்பேதும் இல்லை என்றே தெரிகிறது.
மேற்குநாடுகள் மொழிப்பிரச்சினையை நன்கு புரிந்து அவரவர் தம் பாசை பயிலவும் கலாசாரத்தைப் பாதுகாக்கவும்,தம்மொழிமட்டும் பேசுவோர் அம்மொழியிலேயே தொடர்புகொள்ளவும் உதவி செய்கின்றன.
புத்தியுள்ள சிங்கப்பூர் இப்படி சீன,மலே,தமிழ், ஆங்கிலப்பாசைகளையும் மதிப்பதால்பொருளாதாரம்உச்சவேகத்தில்செல்ல,இலங்கையோஇப்பிரச்சனைக்கு தமிழரை ஒட்டுமொத்தமாக அழித்து விடுவதுதான் புத்தியுள்ளவழி என எண்ணி 24மணிநேரத்தில் தீர்வுகாணக்கூடிய பிரச்சனையை,யுத்தத்தை தொடர்கதையாக்கி இலங்கைப்பொருளாதாரத்தை பாதாளத்தை நோக்கி இட்டுச்செல்கிறது.
ஒரு தடவை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர் ஒருவர் "நீ எந்த நாட்டில் வசிக்கிறியோ அந்நாட்டின் பெரும்பான்மை மொழிதான் உன் தாய்மொழி!" என முரட்டுவாதம்புரிந்தார்.
சிங்கள கலைச்சொல் அகராதியை எடுத்துவந்து காட்டி
"உன்தாய் என்னமொழிபேசி உன்னை வளர்த்தாளோ அதுதான் உன்பாசை!
என நிரூபித்ததும்தான் அவர் வெட்கத்துடன் ஒத்துக்கொண்டார்.
"நன்றாகக்கற்ற நீயே இப்படிப்பேசினால், படிப்பறிவற்றவர்கள் எப்படிப் பேசுவர்?" எனக்கூறி நீங்கள்தான் இந்த நாட்டை ஆளப்போகிறீர்கள் என மனதுக்குள் நினைத்துக்கொண்டேன்.
பலமேல்நாடுகளில்குடியேறிய தமிழர் சந்ததி எதிர்காலத்தில் அந்தந்தநாட்டு மொழிகளை முதல்மொழியாக்கும் சந்தர்ப்பம் பலாத்காரமின்றியே உண்டாகும் தொழில்,கல்விவாய்ப்பும், தப்பிவாழலும் இங்கு காரணங்களாகும்.எனினும் தமிழின்பெருமை,இனிமைபற்றி ஆர்வத்தை ஊட்டிவிடின் அவர்களும் தமிழைவிரும்பி கற்கவும் ரசிக்கவும் பழகுவர்.
விலாசமுள்ளவர்களாக வாழவிரும்பின் இதனை நாம் செய்யவேண்டும்.
மலேசியா,மொறிசியசில் பல பிள்ளைகள் அந்நாட்டு மொழிகளில் கல்வி கற்று தமிழ் எழுத வாசிக்கமுடியாது இருப்பது கவலை,நவீன முறைகளைப்பாவித்து தமிழை வளர்க்கவும் தம்மிடையே பாகுபாடு காட்டாது இருக்கவும் ஒருவரோடுஒருவர் நட்பு, நம்பிக்கை,அன்பு இரக்கம் கொண்டு பொறாமையின்றி வாழவும்,வறிய தமிழர்,பாமர தமிழர்க்கு உதவி உலகத்தமிழர் அனைவரும் மேன்மைபெறலும் நாம்முயற்சிசெய்தால் முடிகிற காரியமே.
□□□

**(நன்றி. சர்வதேச தமிழர் — நோர்வே)**

உன்னை
இதழ்வரையும் தானே
யாசித்தார்கள்...
ஆனால் —
நீயோ
இதயம் வரையல்லவா
புகுந்து விடுகிறாய்.
போதைவழியில் — நீ
ஊற்றெடுத்ததனால் பாதிப்போ
இங்கு பலரிடத்தில்.
சிகரட்டே...
எனது நண்பர்களைக்
கொன்றுவிடாமல்
சற்று விலகிக்கொள்வாயா....?




ராஜன்'ஸ் ஆட்டிஸ்ட்
சுவிற்ஸர்லாந்து



## பிரிவுகள் தடுப்போம்!

இலட்சியம் ஒன்றென்றே
உரக்கப் பாடுவோம்! — பின்
மற்றவர் குற்றங்கள்
மறந்திடக் கற்போம்!
அனைவரும் —
உற்றவர் என்றே
உறவுகள் கொள்வோம்! — தமிழர்
ஒற்றுமை ஒன்றே
உயர்வெனச் சொல்வோம்!
சகோதர
இரத்தங்கள் சிந்தும்
இழிநிலை தவிர்ப்போம் — விடுதலை
சரிவுகள் தொடராது
பிரிவுகள் தடுப்போம்!

— கவித்தென்றல்
எஸ்.டெய்ஸி.

# ஒரு தாயின் மறுபக்கம்

இதிகாச புராணங்களிலும் இன்றைய எழுத்தாளர் கதை இலக்கியங்களிலும் தாயைத் தெய்வமாகப்போற்றியே எழுதப்படுகின்றன. இவை எதற்கும் ஓர் மறுபக்கம் உண்டு என்பதை தமது எழுத்துக்களில் குறிப்பிடத்தவறிவிடுகிறார்கள். வாசகர்களும் அதற்கே பழக்கப்பட்டு இப்படித்தான் இந்தக் கதை முடியும் என்பதைக் கதையின் பாதியிலே ஊகித்து விடுகின்றார்கள். கதை எப்படியும் முடியலாம்.

தாய் தந்தை சகோதரர்களுக்குப் பொதுவான நல்ல குணாதிசயங்கள் உண்டு.கிளையுள்ள தென்னைமரம், இரு தலையுடன் பிறக்கும் கன்று இவைபோன்றே அதிகாரம் பண்ணும் தாய், அப்பாவித்தந்தை, அடக்குமுறைசெய்யும் சகோதரர்கள், இவர்களுடன் வாழ்ந்த அனுபவத்தை இதில் வரும் குணசீலன் என்ற பாத்திரம் வசன கவிதையில் கூறுகின்றார்.

நாட்டுப் பிரச்சனையையும், தமிழ்மக்கள் படும் அவல நிலையையும் மனதில்எண்ணாது சிலபெற்றோர் தான்தோன்றித் தனமாக நடந்துகொள்கிறார்கள்.

இதில் வரும் தாய் பிழைக்கவழியின்றி நோய்வாய்ப் பட்டிருக்கும் ஒரு மகனை ஊரில் தனியே விட்டுவிட்டு தானும் கணவரும் இந்தியாவந்து திருச்சியில் குடியிருந்து கொண்டு 'உச்சிப்பிள்ளையார் உன்னை ஒருபோதும் கைவிடமாட்டார்' என்று மகனுக்குக் கடிதம் எழுதுகிறார். இது எவ்வகையில் நியாயம்?

கொட்டிவைக்க கொள்கலம் இல்லாத திரவத்தை கையில் ஏந்தியபடி அவதிப்படுவதுபோல் இக்கவிதையில்வரும் குணசீலன் அன்பைக்கொட்டிவைக்க இடமில்லாத மன வேதனையைக் கூறுகின்றார்.

வெளிநாட்டில் இரவும்பகலும் உடலைப்பிழிந்து உழைத்து அதில் மீதப்படுத்தி ஊருக்கு அனுப்பிக் கொண்டு இருக்கும்போது அங்கிருந்து ஆறுதல் கடிதம் இல்லாததன் வெளிப்பாடு,தந்தைமூலம்பணம்பெற்றுக்கொண்டு தான்தோன்றித் தனமாகவும்,தன்பிள்ளையுடன் வறட்டுக்கௌரவமும் வன்மமும் சாதிக்கும் ஒரு தாயைப்பற்றிக் கூறும் கவிதைகள் இவை...

— ப. இராஜகாந்தன்

## ஓர வஞ்சனை.

வேண்டாத பிள்ளைதனை
வெறுப்போடு வளர்க்கையில்
பிள்ளைபடும் வேதனைகள்!

பெற்றவுடன் பிள்ளையைக்
கொன்றுவிடும் தாய்மார்கள்
எத்தனைபேர் உண்டு உலகில்
என்றெழுதும் பத்திரிகையின்
புள்ளிவிபரக் கணக்கெடுப்பெல்லாம்
புரட்டிநான் பார்த்துவிட்டேன்

பொதுவாழ்க்கைப் பழமொழியைப்
பெரிதாக்கி
நடைமுறையில் உள்ளவற்றை
நம்ப மறுக்காதீர்!
வீட்டுக்குவீடு ஒரு கதையென்றால்
விதிவிலக்காகவும் சில கதை உண்டு
என்வீட்டுக் கதைகேளுங்கள்
இதன் பின்னால் உணர்வீர்கள்!

கொண்ட அன்பிற்கும்
கொடுத்த முலைப் பாலுக்கும்
தண்டங் கொடுத்தாயோ தாயே!
கேட்டுவந்து பிறந்தவனாநான்? – உங்கள்
கேளிக்கைக்கு உதவினேனா?
என்னைத்தான் பெறவேண்டும்
என்றெண்ணியிருந்து பெற்றெடுக்க
பிறந்தபின் குணம்மாறி
ஏமாற்றிவிட்டேனா?
என்ன தவறு செய்தேன்?
அதுதான்
எனக்கும் தெரியவில்லை!

என்னைமட்டும் ஒதுக்கிவைத்துவிட்டு
இன்னொரு பிள்ளையை
இனிதாய்க்கவனித்தாய்!
காணாமல் மறைத்து
உணவு கொடுத்து
கண்ணூறு பட்டதென்று
காய்ந்த மிளகாய் உப்பெடுத்து
கரிசனையோடு உடல்தடவி
அடுப்பின் அக்கினிச் சந்நிதியில் எறிப்பாய்!
இதைப்பார்த்து நானும்
இவர் இவ்வுலகின்
மன்மதனோ என்றெண்ணி
ஏங்கியதுண்டு!
கண்கவரும் உடலழகு
சந்ததியின் அடிச்சுவடு.
காரணத்தை என்மேல் போடுவது – உன்
கருங்காலி மனப்போக்கு

இம்மென்றால் இசைந்தாடும்
என் தந்தை – நீ
இருவிழியை உருட்டினால் போதும்
கம்மென்று இருந்துவிடுவார்.
என்னென்று சொல்வேன் இதை?

கெட்டியாய்ப் பிடிக்கவில்லை
என்றதனால் தன்
குட்டியைத் தள்ளிவைத்த
குரங்கைப்போலே
மூட்டிமோதும் பிள்ளை நான்
மூர்க்கன் என்று சொல்லி
வெட்டியே விட்டுவிட்டாய்
உறவை அன்றே.

இது விளங்காமல் நானுமிங்கே
வெட்டியான் கையில்
விலைபோன பசுவை – வீட்டு
பட்டியிலே தேடும் கன்றைப்போலே
பாசம்தேடி அலைகின்றேன்.
தொட்டிலில் பிள்ளை என்றால்
புட்டிப்பால் போதுமம்மா – இது
தொடர்பின்றிப் பலகாலம் – உன்
குடும்பத்துப் பட்டியிலே
காத்திருக்கும் கருப்பாடு.
இரைமீட்கும் எண்ணமெல்லாம்
என்னன்னை நீயன்றோ – இந்த
இரகசியத்தை நீயறியாது
இதுவரைக்கும் நீயிருந்தால் – என்
இப்பிறவி வீணாகும்.
முதுமையிலே பிள்ளை
முன்னைப்போல் இல்லை.
ஒரு கடிதம் எழுதாயோ
ஒப்புக்கு என்றாலும்.
அன்பிழந்த வறுமை – அது
ஆற்றொணாக்கொடுமை – என்
ஆருயிரின் தாகம் என்றும்
அன்னை நீயன்றோ!!

சாத்தானின் வேதம்.

உடலில் இருப்பது
ஒன்பது வாசல் – இவை
ஒன்றாய் அடைத்திருந்தால்
ஒரு வழியாய்ப்போயிருப்பேன்.
ஒன்றுமட்டும் அடைத்தது
இன்றெனக்கு
மலம்போக மறுத்து
மந்தமாய் வயிறு பெருத்து
மரம்போலே நான்கிடக்க
மற்றவர் என்னைப்
பிணம்போலே தூக்கிச்சென்றனர்

பின்னால் வருவதற்கும்
பிறர் துணையில்லை – இதுதான்
பிறநாட்டு வாழ்க்கை.

முன்னால் சிறுவயதில்
மூக்கி முனகிடும்போது
என்னால்பட்ட சிரமம்
இன்னவென்று கடிதத்தில்
எடுத்துரைத்தாய் – இல்லை
இதைச்சொல்லிப் பணம்கேட்டு
இடித்துரைத்தாய் –
இப்படிப்பார்த்தால்
எவருக்குப் பதில் சொல்வேன்?

நான்கைந்து வயதில் – நான்
பட்டகடன் தீர்க்கவா?
நானுநம் இங்கே கடன்
நல்ல தாதியர்க்கு
நர்ஸ் என்னும் தாய்மார்க்கு
முன்னால்பட்ட கடன்
முடிவதற்கு முன்னாலே
முடிவின்றித் தொடருதென்னை
முற்பிறவிக் கடன்தொல்லை.

புடம்போட்ட தங்கமென்று
பிறர் சொல்லக் கேட்டேன்
உடன் பிறந்த சகோதரர்க்கும்
உனக்கும்தான்
குடும்பத்துப் பகையானேன்
அகம்பாவம் பெரிதென்றால்
அப்படியே இருந்துவிடு!

வரும் பாவம் பழிவந்து
சேரட்டும் என்னை – உன்
ஜன்மத்தின் வடிவத்தை
வருங்காலம் சொல்லட்டும்.
ஜென்மத்துப் பகையென்றாலும் – நான்
ஜனித்த இடமல்லவா?
இன்றிந்த நிலைகேட்டு
கன்றீந்த பசுவங்கே
கதறியழ மாட்டாதோ?
கனம் இப்படியும் நினைப்பதுண்டு
கட்டுண்டு உன் சொல்லைக்
கடைப்பிடித்தால மட்டும்தான்
கரிசனங்கள் காட்டுவாயோ?
கட்டாக்காலி என்று – நீ
விட்டுவிட்ட வேதாளம் இன்று
முருங்கைமரக் கிளையிருந்து
விட்டிறங்க மாட்டாதாம்.
விட்டுக்கொடுப்பதில்லை – என்பதிந்த
வேதாளத்தின் வேதாந்தம்.
சாத்தான் வேதம் ஓதுமோ என்று
சான்றோர் கேட்கக்கூடும்.
சாத்தானின் தாயுமொரு
பேயென்ற சத்தியத்தைச்
சொல்லிவிடு அவர்க்கு
இதென்னடா பேய்க்குடும்பம்
என்று சொல்லி
பேசாமல் போய்விடுவார்.

<u>தத்துத்தாய்.</u>

ஊருக்கெல்லாம் ஒரு நீதி
எனக்குமட்டும் அநீதி
பேருக்குப் பெற்றோர் உண்டு
பிள்ளைமேல் பாசம் இல்லை
கூறுபோட்ட பங்கும் வேண்டாம் – ஒரு
குழி நிலமும் வேண்டாம்.
ஆறுதலுக்கு ஒரு வார்த்தை
அன்னைநீ பேசாயோ?
ஆராரோ தாலாட்டு
யாராரோ கூறக்கேட்டு
ஏமாந்த என்மனது
ஏங்குவதை அறியாயோ?
ஏறெடுத்தும் பார்ப்பதில்லை
ஒருவீட்டில் இருக்கையிலே
ஏழெட்டு வருடங்கள்
எனைவிட்டுப் பிரிந்திருந்தும்
இன்னுமென்ன வெறுப்போ?
கூறு நீ குற்றத்தை
குமைழுந்து நான் வருந்துகின்றேன்
கொடியவன் நான்தானா
கும்பிடும் தெய்வத்தைக் கேட்கிறேன்
மடியதனில் தவழும்
மழலையில்லை நானிப்போ
மலைபோலே மக்கள்
நான்கு பேர் எனக்குண்டு
முடிநரைத்துக் கிழமாகி
மடிவதற்கு முன்னாலே
மன்றாடிக் கேட்கின்றேன்
குற்றமென்ன சொல்லாயோ?
சொல்லாலும் செயலாலும்
பொல்லாப்புக் கேட்டவன் நான்
உல்லாசம் உவகை
ஒருபோதும் எனக்கில்லை
ஊர் சொல்லும் பழிமொழிக்கு
ஒப்புவமை நானில்லை.
பெத்தமனம் பித்தென்பார்
பித்தனாகிப் போய்விட்டேன்
பெற்ற மனம் இரங்காமல்
விட்டகுறை என்னவென்று
விளங்காமல் கேட்கின்றேன்
உற்ற துணை உடன் பிறப்புக்கள்

ஊரிலங்கே தவிக்கின்றார் – நீயோ
குற்றவியல் பட்டியலைக்
கட்டிக்கொண்டே போகின்றாய்
கிட்ட இருந்தால்தானே
முட்டப் பகை என்பார்
பத்துநூறுமைல் தாண்டியும் ஏன்
பற்றுவர மாட்டாதாம்
நாலுபத்து வருடங்கள்
நாயாகக் காத்திருந்தும்
பெற்ற தாய் அன்பை!
பெறவில்லை என்பதினால்
தத்தாக ஒரு தாயைத்
தருவித்துக்கொண்டேன் நான்
பெற்ற தாய் எனக்கில்லை
கற்ற தமிழே என் கன்னித்தாய்! – அவள்
சொத்தான மக்கள் எட்டுக்கோடி
இருந்தும்
எக்காலும் அவள்
எவரையும் வெறுத்ததில்லை!

## தலைமுழுக்கும் தள்ளாடும் மனமும்

என்னை ஒரு அன்னை வந்து
எடுத்து மடியில்வைத்து
என்ன குறை உனக்கு
என்று கேட்கையிலே
பிள்ளை மனம்பொங்காதோ
பெருங்களிப்பில்.
இருக்கின்ற அன்னையிடமிருந்து
இன்னுமொரு கடிதமில்லை
இருந்தும்
என் மனதின் கற்பனைக்கோ
எல்லை இல்லை
தொல்லைதரும் என்தொடர்பைத்
துண்டித்துவிட்டு
தொலைபேசி அழைப்புக்கும்
தொடர்பு கொள்ள மறுத்துவிட்டாய்
இல்லை இனித்துன்பம்
என்றிருக்க விட்டாயோ?
எந்நாளும் மனதை
ஏன் குழப்பி ஆழுகிறாய்?
தூரத் தொலைநாட்டில்
தூக்கமின்றித்தவிக்கின்றேன்
ஆரத்தழுவி அன்புடனே
ஆதரிக்கவோர் அன்னை
இல்லையென்றேங்கி
மீளாத் துயில்கொண்டு
மீண்டும் பிறந்துவந்தோ
வேண்டும் தாயன்பை
நான் பெறவேண்டும்.
தீண்டத் தகாதென்றென்னைத்
திட்டிக் கழித்துவைத்தாய் – அந்தத்
தீயின்னும் அணையவில்லை
தினம் மனதில் புகைகிறது
ஆண்டுக் கணக்கிட்டால்
அதிகம்தான் என்வயது – ஆனால்
அன்பைத்தேடும் வரிசையிலே
அறியாக் குழந்தையிது.
எந்தச் சூழலிலும்
என்மனது மாறாது
சொந்தச் சூழலிலே
சுற்றிவரும் செக்காவேன்
செக்கிழுக்கும் மாட்டுக்குச்
சூடுமில்லைச் சொரணையில்லை
இதுபோல்
எத்தனைமுறைதான் சேற்றில்
மிதித்துக் கழிவிவிட்டேன்



– இதனால்
ஈற்றில் ஒரு முடிவு எடுத்து
இருக்கும் போதே என்தாயைத்
தலைமுழுகி விட்டுவிட்டுத்
தனிமையில் இருந்து பார்த்தேன்
தானாடாவிட்டாலும்
தசையாடக்கண்டேன்
தள்ளாடும் மனது மீண்டும்
தாயனைத் தேடக்கண்டேன்!!

பூவரசு இனிய தமிழ் ஏடு
இந்த ஆண்டு வெளியிடவுள்ள

# கையெழுத்துப் பிரதிகள் 1985-1995

சிறப்பிதழுக்கு

புலம்பெயர்நாடுகளில்வாழும் **படைப்பாளர்கள்,வாசகர்கள், சஞ்சிகையாளர்களின் ஆதரவு வேண்டப்படுகிறது.**

1985 – 1995 காலப்பகுதிகளில் வெளியான கையெழுத்துப்பிரதிகளிலிருந்து சிறந்த ஆக்கங்களைத்தொகுத்து குறிப்பிட்ட சஞ்சிகைகள் பற்றிய குறிப்புக்களுடன் பூவரசு வெளியிடவுள்ள இந்தச்சிறப்பிதழுக்கான ஆக்கங்ளைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் கடமை உங்களுடையதே!

புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தில் படைப்பாளர்களின் முயற்சிகள் மறக்கடிக்கப்படாவண்ணம் பாதுகாக்கும் பூவரசின் இந்தப்பணிக்கு ஒத்துழையுங்கள்.

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் குறிப்பிட்ட சஞ்சிகைபற்றிய குறிப்புக்களுடன் அதில் வெளியான ஆக்கங்களில் உங்களுக்குப் பிடித்தமான ஆக்கம்பற்றியும் குறிப்பிட்டு பூவரசு முகவரிக்கு அனுப்பிவைப்பதுமட்டுமே!

(நீங்கள் அனுப்பும் சஞ்சிகையை மீளப்பெறவிரும்பின் அதையும் குறிப்பிடுங்கள்.)

***ஒத்துழைப்பீர்களா?***

# உண்மையே...

உண்மைக்கு இடமெங்கு கிடைக்கு மென்று
உண்மையை உலுக்காத அறிஞரில்லை।
உண்மையாய்த் தானுன்னை நானும் கேட்டேன்
உண்மையில் நீஅவ்வண் செய்ததுண்டோ?

உண்மையாய் உன்னன்னை சொல்லைக் கேட்டாய்।
உண்மையாய் அவளுரை தனை மதித்தாய்।
உண்மையாய் நீ கண்ட அவளின் பாதை
உண்மையாய் உனையிங்கே காக்கவில்லை?

உண்மையாய் வாழ்கின்ற மனித ரிங்கே
உண்மையாய்க் காணவே இல்லையென்பாய்।
உண்மையில் உன்போன்ற நிலையில் நின்றே
உண்மையாய்ப் பாடினேன் கவிதையின்று.

உண்மையாய் நட்பினுக் கென விரும்பும்
உண்மைகொள் ளுள்ளமென் றொன்றுவுண்டா?
உண்மையாய் நீகண்ட முறுவலெல்லாம்
உண்மையில் உண்மையோ உண்மை சொல்வாய்।

உண்மையாய் உன்நாட்டு மக்கள் துன்பம்
உண்மையாய் உனக்கேதான் நடந்ததேபோல்
உண்மையாய்ப் பொய்சொல்லி வாழுகின்றாய்
உண்மையில் அதுபற்றி வருந்துவாயோ?

உண்மையில் உனக்காக உயிர் கொடுப்பார்
உண்மையைக் காக்கவே அதை விடுத்தார்
உண்மையாய் அவர் வெல்ல உதவலின்றேல்
உண்மையாய் தெய்வத்தின் பழி சுமப்பாய்।

உண்மையாய் வாழ்வதாய் காட்டிடற்கு
உண்மையில் வேடமேன் என்று நின்று
உண்மையில் உன்பங்கு என்னவென்று
உண்மையாய் உணர்ந்துநீ செய்து நில்லு।

உண்மையில் நம்மினம் மீளவென்று
உண்மையில் உன்மனம் சொல்லுதன்றோ।
உண்மையாய் அதையுந்தன் செயலில் கொண்டு
உண்மையாய் உன்பங்கை செய்து நிற்பாய்।

# பொய்...

பொய்மையே பெருமையாய் உலக மெங்கும்
பொய்யாகப் புகழ் கொண்டு ஆடுதென்று
பொய்யேற்க முடியாத மாந்தரின் கண்
பொய்யோரின் முன்னின்று அழுவதென்னே!

பொய்சொல்லி வாழ்ந்தாரே இல்லையென்றார்
பொய்சொல்லி வாழ்வோரை என்ன சொல்வார்?
பொய்யான புகழ்சொல்லிப் பிறரை ஏய்க்கும்
பொய்யான மனிதருக் கென்ன செய்வார்?

பொய்யான மதவாதி வந்துநின்று
பொய்சொல்லி மக்களின் இடம்பிடித்தான்
பொய்யான மிதவாதி அதனைச் சொல்லி
பொய்யான பணிசெய்தே பணம்பறித்தான்!

பொய்யாகச் சமத்துவம் பேசுகின்றான்
பொய்யாகச் சங்கங்கள் அமைத்துவிட்டு
பொய்யான தலைவனாய் ஆகவிட்டால்
பொய்யாமோ சமுதாயம் அழியுமென்றால்?

பொய்யாக எழுதிடும் காவியங்கள்
பொய்மனங் கொண்டவர் எழுத்திலாகும்
பொய்சொல்லி இனப்பகை ஊட்டிவைக்கும்
பொய்காரர் எழுதுகோல் அதனை ஆக்கும்.

பொய்கண்டு விலகிடும் வீரம்வேண்டும்
பொய்யரை விலக்கிடும் வீரம் வேண்டும்
பொய்யான நண்பரைக் கண்டுகொண்டால்
பொய்யாகச் சிரிக்காது உணர்த்த வேண்டும்.

பொய்மைக்குத் துணைபோகும் மக்களைத்தான்
பொய்காணத் தெரியாமல் நட்புகொண்டோம்
பொய்யாகிப் போகட்டும் கடந்த காலம்
பொய்யரில் விலகிநாம் நன்மை காண்போம்.

பொய்யான தமிழரின் தலைமையெல்லாம்
பொய்யாக வேபோச்சு சிங்க ளத்தில்
பொய்யான சமத்துவம் பொசுங்கிப் போக,
பொய்யாக நீட்டும் வாழ லாமோ?

- விஜயா மஹேந்திரன்.

# மனம்



மனம் எனும்பெண்ணே நீ வருக! – என்
மனதினில் அமைதியைத்தருக!
தினம்தினம் பட்டகஷ்டம் மறந்து நான்
தூங்கையிலும் எழுப்புவது ஏனோ?

அன்னிய தேசத்தில் ஆடம்பர வாழ்க்கையென்று
ஆசையுடன் ஓடிவர அமைதியில்லையிங்கு.
பேசவொணா மொழிசுமந்து பிதற்றியே திரிந்து
போலிக்கே எம்வாழ்வு கடைசிவரை அமைதியில்லை.

பொன்னைப் பொருளை பிறந்து வளர்ந்த மண்ணை
கண்ணினிய காட்சிகளை காணமுடியா நண்பர்களை
பெண்களை ஆண்களை பேணி வளர்த்த பெற்றவரை
உண்கையிலும் உடுக்கையிலும் உடன் பிறந்த உறவுகளை
எண்ணிவந்த எம் நெஞ்சத்தை ஏனோ வதைக்கின்றாய்.
குண்டுகள்வீழ்ந்து குருதி வெள்ளம் கொப்பளித்து
நண்டுகளாய் அலைந்து நடுஇரவில் மறைகுழியில்
வண்டுகளாய் ஓட்டிக்கொண்டு வாடிய இரவுகளை
துண்டுதுண்டாய்ப் படம்காட்டி துளைப்பதை நிறுத்திவிடு.

மனம் மாறி குணம்மாறி மனிதர்களின் நிறம்மாறி
இனம்மாறிப்போகின்ற இன்னல்களால் இங்கும்
கனல்ஆகி நெஞ்சம் கரைகின்ற வேளையிலும்
தினம் நீயும் என்னை திண்டாடச் செய்யலாமோ?

நல்லாரை நல்லவற்றை நல்நிகழ்வை நம்தமிழர்
எல்லோர் இதயத்திலும் இடித்துரைப்பாய் எந்நாளும்
பொல்லாத பொழுதுகளை புறத்தே அழித்துவிட்டு
நல்லுலகைத் தோற்றுவிக்க நயமுடனே எழுந்துவாராய்.
உன் செயலால் உள்ளங்கள் உயர்ந்த நேயமுடன்
நன்மை செய்து வாழட்டும்
நாட்களெல்லாம் சிறக்கட்டும்.

அ. வேணுகோபாலன்

# தர்மங்கள்

பஸ் தரித்துநிற்குமிடம்.
வேலைக்குப் போவதற்கு பஸ்சுக்காய் காத்திருக்கின்றான் சுந்தர்.
பஸ்சும் வருவதாய்த்தெரியவில்லை.
'எங்கடை ஊரிலை நேரத்திற்கு என்னதான் நடக்கும்?'
— மனதிற்குள் சலித்துக்கொண்டான்.
சுந்தருக்கு எரிச்சல் எரிச்சலாய் வந்தது.
நேரம்பிந்திப்போனால் மனேஜரிடம் திட்டுவாங்கவேண்டும். நிலைமைகளைச் சொன்னாலும் அவருக்கு விளங்கப்போவதில்லை. அதுவும் வேலைக்குப் புதிதாய் சேர்ந்துவிட்டால் போதும். துவைத்தே விடுவார்கள்.
சுந்தர் அடிக்கடி கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொள்கிறான்.
அதோ...
தொலைவில் ஒரு பஸ் வருவது போல் தெரிகிறது.
மனதில் ஒரு திருப்தி...ஆனாலும், நேரம் போச்சு... இண்டைக்கு மனேஜரிடம் வாங்கிக் கட்டவேண்டியதுதான்.
பஸ்சும் வந்துநின்றது. காத்திருந்தவர்கள் முண்டியடித்துக் கொண்டு ஏறினர். சுந்தரும் ஏறிக்கொண்டான்.
பஸ் நகர்ந்தது.



.க.ஶ்ரீதாஸ்

இன்னுமொரு தரிப்பிடம். இன்னும் சிலர் ஏறிக்கொண்டனர். சுந்தர் இன்னும் ஐந்து தரிப்பிடத்தைக் கடந்தாகவேண்டும்.
பஸ் உறுமிக்கொண்டு சென்றது.

மூன்றாவது தரிப்பிடம்.
இந்தத் தரிப்பிடத்தில் சுந்தர் சந்திக்கும் அதே சிறுவன்...
இடுப்பில் ஐந்து வயதுச் சிறுமி ஒருத்தியைச் சுமந்தபடி!
இன்னொரு கையில் ஒரு தட்டு.
தர்மகர்த்தா!
சிலவேளைகளில் இவரையும் பஸ்ஸில் காணலாம்...சுந்தரோடு கொஞ்சம் பழக்கமும்கூட.

மூன்றாவது தரிப்பிடத்திலும் கொஞ்சப்பேர் ஏறிக்கொண்டனர்.
மீண்டும் பஸ் நகர்ந்தது.

சுந்தர் ஒரு கம்பனியில் கணக்காளராய் சேர்ந்து நான்கு மாதம். ஒவ்வொரு காலையும் இந்தச் சிறுவனையும் சிறுமியையும் இந்தத்தரிப்பிடத்தில் காணத் தவறுவதில்லை.

"அம்மா தர்மம்!...ஐயா தர்மம்!"
— அவன் வேண்டுதல் நீண்டுகொண்டே போகும்.
அவன் வைத்திருக்கும் அலுமினியத்தட்டில் சில்லறைகள் வந்து விழுந்தன.
சுந்தரும் அவனுக்காய்க்கொண்டுவரும் காசைப் போட்டுக்கொண்டான்..
அது அவனுக்குப் பெரிய ஆறுதலைக் கொடுக்கும்...
'ஏன்...?'
சிலரது வாய்க்குள் முணுமுணுப்பு...
சிலரோ கண்டவுடன் விலகிக்கொள்வார்கள்...
சிலரோ சில்லறை என்பார்கள்..
சிறுவனோ இவைகளைப் பொருட்படுத்துவதில்லை...
சிறுவன் எல்லோரையும் வேண்டி நிற்பான்..
பஸ் அடுத்த தரிப்பில் நின்றது...
இதில் பலர் இறங்கிக்கொண்டனர்...
சிறுவனும் இறங்கிக் கொண்டான்...
பஸ் மீண்டும் நகர்ந்தது...
சுந்தருக்கு மனதில் ஒரு நெருடல்...
சுந்தர் இறங்கும் தரிப்பிடம்..அவசரமாய் இறங்கிக்கொண்டு வேலைத்தலத்தை நோக்கிச் சென்றான்.

மீண்டும் மறுநாள்... அந்தத் தரிப்பிடம்...
அதே சிறுவன் அதே சிறுமி—
"அம்மா தர்மம் ஐயா தர்மம்..".
தர்மகர்த்தாவை நோக்கியும் தட்டை நீட்டினான்...
அவருக்குத் திடீரென்று கோபம்வந்தது. கோபத்துடன் தட்டைத் தட்டி விட்டார். தட்டில் உள்ள சில்லறைகள் சிதறியது.
சிறுமி வீரிட்டுக் கதறினாள்.
எல்லோர் பார்வையும் அந்தச் சிறுவன் மீது.
சுந்தரின் பார்வை தர்மகர்த்தாவை நோக்கியது.
விழுந்த சில்லறைகளைப் பொறுக்கிச் சிறுவனிடம் கொடுத்தான்.
மீண்டும் சுந்தரின் பார்வை அவர் பக்கம் திரும்பியது.
சிறுவன் இறங்கும் தரிப்பிடம்.
அழுது கொண்டே இறங்கிக் கொண்டான்.

பஸ் நகர்ந்தது.
சீ...என்ன மனிதர்?
தனக்குள் நினைத்துக்கொண்டு கோபமாய் தர்மகர்த்தாவைப் பார்த்தான்.
"என்ன பார்வை...?" — கேட்டார்.
"ஏன் இப்படிச் செய்தீங்கள்?" சுந்தர் கேட்டான்.
"தம்பி! இண்டைக்கெண்டு நல்ல விஷயத்திற்குப் போகேக்கை இப்படி அபசகுனங்கள் மாதிரி இதுகள்.... எனக்குப் பிடிக்கேல்லை!"
"ஓ..அபசகுனம் என்றால் ஏன் பஸ்ஸில் வந்தனீங்கள்...?இண்டைக்கு நீங்கள்

போறவிஷயம் சரிவராட்டி சிறுவன்மீது பழி... சிறுவன் இன்று குறுக்கிடாது போனாலும் நீங்கள் போறவிடயம் சரிவரவில்லை...அப்போது யார்மீது பழியைப் போடுவீங்கள்?"

"என்ன தம்பி...வளவளவென்று கதைக்கிறீர்...நான் போறவிடயம்..."

"பெரியவரே!எனக்கு நீங்கள் போறவிடயம் தெரியவேண்டிய அவசியமில்லை...! ஆனால் நீங்கள் இப்படி நடந்துகொள்வது அழகல்ல."

"என்ன தம்பி... பிச்சைக்காரனுக்குப் போய் பரிந்துகொண்டு பேசுகின்றீர்...?"

"அப்படிச் சொல்லாதீர்கள் பெரியவரே! இந்த உலகத்தில் அவர்கள் வழிதவறி வந்திருக்கலாம்...அதனால் அவர்களும் வாழவேண்டும்...வாழ்வதற்கு என்று அவர்களும் பிறந்துவிட்டார்கள்...மனிதர்கள்தானே... நாம் இப்படி நடந்து கொள்ளலாமா?"

"தம்பி...! பெரிய பிரசங்கமே நடத்திப்போடுவாய் போலக்கிடக்கு...நீ என்ன சொல்ல.. எனக்குப் பிடிக்கேல்லை!"

"பெரியவரே! உங்களைத் தர்மகர்த்தா என்றுதானே சொல்கின்றார்கள்...ஆனால் உங்க மனசிலை வரட்சிதானே இருக்கின்றது...தர்மம்செய்ய மறுக்கின்றீங்கள்.. வேண்டாம்...செய்யாவிட்டாலும் தயவாவது காட்டியிருக்கலாம்...அதைக்கூட செய்ய மறந்துபோயிட்டீங்கள்..."

"தம்பி...நான் கடவுளுக்குத் தொண்டுசெய்கிறவன்...என்னைப்பார்த்தா இப்படிக் கேட்கின்றாய்..!"

"தொண்டு...?எது உங்கள்தொண்டு பெரியவரே..?கடவுள் கதியற்றவர்களுக்கு உதவி செய்யக்கூடாது என்று சொல்லவில்லையே.. குழந்தையும் தெய்வமும் ஒன்று என்கின்றபோது குழந்தைகளான அந்தச்சிறுவனிடம் சிறுமியிடம் இறைவனைக் காணவில்லையா? ஐயாபெரியவரே! கோயில் குளங்களைமட்டும் கட்டினால் போதாது மனிதவடிவில் வாடும் இதயங்களுக்கு இரக்கம் காட்டுங்கள்...அதுவும் தர்மம்தான்..."

"தம்பி...வளவளவென்று பேசாதையும்!"

"பெரியவரே! கடவுள் கடவுள் என்பீர்களே! கடவுள் உங்களை இந்த நிலைக்கு உருவாக்கியது மற்றவர்களுக்கு உதவி செய்யத்தான்... உதாசீனப்படுத்தஅல்ல...மனிதவடிவில் அனாதைகளாய்த்தெரியும் இவர்களுக்கு முதலில் கருணைசெய்யுங்கள் ...கடவுள் தோன்றுவார்...!"

— இருவருக்கும் இடையில் காரசாரமான சம்பாஷணைகள்...

தரிப்பிடம்...

தர்மகர்த்தா கோபத்தோடு இறங்கிக்கொண்டார்.

பஸ் நகர்ந்தது...

மீண்டும் அடுத்த நாள் அதே சிறுவன் அதே சிறுமி..!

தர்மகர்த்தா இல்லை.

சுந்தரும் தன் பங்கைத் தட்டில்போட்டான்.

"நன்றி!"

— கூறிக்கொண்டே ஒவ்வொருவரையும் நோக்கிச் சென்றான் அந்தச்சிறுவன்.

மீண்டும் தரிப்பிடம்.

அவன் இறங்கும் இடம்.

இடுப்பில் இருந்த சிறுமியை இறக்கிவிட்டான்..

அவள் ஓடினாள்..

அவளைப் பிடிக்க சிறுவன் பின்னால் சென்றான்...பஸ்ஸிலிருந்து சிறுமி இறங்கி அடுத்த வீதியைக் கடந்தாள்..

இவனும் கடக்க முயன்றான்..
லொறி ஒன்று...
சட்டென அவனை மோதித் தூக்கி எறிந்தது

பஸ் நகர்ந்தது...
கூட்டம் கூடியதைத்தான் சுந்தரால் பார்க்க முடிந்தது.
சுந்தரின் மனம்பரபரத்தது...
வேலையில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள முடியவில்லை!

மீண்டும் அடுத்த நாள்...சுந்தருக்குள்ஒரு ஏக்கம்..
சிறுவனைக் காணவேண்டும்...
அவன் ஏறும் பஸ்தரிப்பில் பஸ் நின்றது...அவனை அங்கு காணவில்லை.
அவனுக்குப் பதிலாய் அவனது இடுப்பிலிருந்த சிறுமி—கையில் தட்டுடன்!
"அம்மா தர்மம்...ஐயா தர்மம்!"
தர்மகர்த்தாவும் இருந்தார்...
சுந்தர் அருகில் சிறுமி வந்தாள்...
"எங்கே மற்றவன்?".வினவினான்.
சிறுமி அழத்தொடங்கிவிட்டாள்...
"அண்ணா... அண்ணா... செத்திட்டான்!"
ஓவெனச் சுந்தருக்கு அழத்தோன்றிற்று. ஆனால் அழவில்லை!
ஒருவகையில் நானும் அனாதைதான்! பெரியவர் ஒருவரின் ஆதரவில்தான் நானும் வளர்க்கப்பட்டேன்....என்வாழ்க்கை திசைதிரும்பிய மாதிரி இந்தச் சிறுமியையும் நான் வளர்க்கவேண்டும். நாளை இந்தச் சிறுமிக்கும் நல்ல எதிர்காலம் வரலாம்... இந்தச் சிறுமியையும் சாகவிடக்கூடாது!
அடுத்த தரிப்பிடம்...
சிறுமி இறங்கிக்கொண்டாள்...சுந்தரும் இறங்கிக்கொண்டான்... சிறுமியின் கையைப் பிடித்துக்கொண்டான்...
"இனி உனக்கு அண்ணன் நான்தான்!"
அவளது கரத்தை இறுகப்பற்றி வீட்டை நோக்கிச்சென்றான்...
இனி இந்தச் சிறுமி அனாதையும்அல்ல பிச்சைக்காரியும் அல்ல...
இவளுக்கும் ஒருஉறவு உண்டு.
சுந்தர் அன்று வேலைக்குப் போகவில்லை...
மனதினில் நிறையச் சந்தோஷம்...

யார் இவர்கள்?
வஞ்சிக்கப்பட்ட பூமியில்
வழிதவறிப்போனவர்கள்.
தாய் உண்டு
தாலாட்டை அறியாதவர்கள்.
தந்தையும் உண்டு
முதலெழுத்து தெரியாதவர்கள்
ஆனாலும் இந்தப் பூமியில்
இவர்களும் வாழவேண்டியவர்கள்



□□□




தங்கக்காசை.....
புரட்டிப், புரட்டிப்..
தடவிப்பார்க்கின்றாய்...!சிறு
செப்புக்காசை......
புரட்டி, புரட்டி..
உரைத்துப்பார்க்கின்றாய்....
நோட்டுக்காசை...
திருப்பித்,திருப்பித்.....
கோட்டைப் பார்க்கின்றாய்....!
நடுக்கோட்டைப் பார்க்கின்றாய்...!
மனித உள்ளம்தன்னை...
திருப்பிப் பார்க்க.....!
ஏனோ...! மறக்கின்றாய்...!அவன்
மறுபுறத்தை நீயும் பார்க்க...
ஏனோ...! மறுக்கின்றாய்...!மானிடமே..
ஏனோ...!மறுக்கின்றாய்.....!

அகத்தினழகை....
தேடமறந்து.....போய்
உடலினழகை....
தேடியலையும்...மானிடமே...!உடல்
அழகு என்பது..! தேன்கூடு...அதைத்
தொட்டால் குத்தும்...!
தேன்குளவி.....!
என்பதை நீயும் மறந்ததுமேன்.....?
எண்ணிட நீயும் மறுப்பதுமேன்....?

மழையைக்கண்டு சிரிப்பதுமட்டும்...!
மண்தானா....? சில
மனிதர் செயலைக்கண்டு.....!
வெறுப்பதுமட்டும்......!
மானிடமா..........?இதை
எண்ணிட நீயும் மறப்பதுமேன்...?
உணர்ந்திட நீயும் வெறுப்பதுமேன்..?
உண்மையென்றிட நீயும் மறுப்பதுமேன்...?

வேலணையூர் பொன்னண்ணா.

# பல்சுவை

காப்பாற்றும் கூக்குரல் எது?




இரவின் இருளில் ஒருநாள் சிவனும் பார்வதியும் விண்வழியாகப் பயணம் செய்துகொண்டிருந்தபோது ஒருவன் மரக்கிளையில் உட்கார்ந்திருப்பதைப்பார்த்தனர். கீழே தரையில் விழுந்தால் அவனது அங்கங்கள் துண்டாகும் நிலைமை. அவன்மீது அனுதாபப்பட்ட பார்வதி அவனைக் காப்பாற்றும்படி சிவனிடம் வேண்டினார். அதற்கு சிவன் நீ காப்பாற்றினால் என்ன என்று திருப்பிக்கேட்டார்.இதற்கிடையில் அவன் விழும் நிலைமை அபாயகட்டத்தை அடைந்தது.

அப்போது அவர்கள் அவன் "அம்மா" என்று கத்தினால் பார்வதி காப்பாற்றவேண்டும் என்றும் "அப்பா" என்று கத்தினால் சிவன் காப்பாற்றவேண்டும் என்றும் தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.

ஆனால் அந்த ஆசாமியோ அம்மா என்றும் கத்தாமல் அப்பா என்றும் கத்தாமல் "ஐயோ!" என்று கத்திவிட்டான். அதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு தனிமையில் விடப்பட்டான்.

*— மாலினி குணராஜன்.*

---

போராயுதம் ஒன்று கலை ஆயுதமானது.

வீரர்களின் தோள்களில் தூங்கி தேவையானபோது களத்தில் அவர்கள் கைகளில் புகுந்த வெற்றிகளை குவித்த வில் இன்று கலைவாணர்களின் மடியில் இருந்த இசைபாடுகிறதே. போர்க்கருவி எப்படி இசைக்கருவியானது?

கர்ணபரம்பரைக் கதை ஒன்று இப்படிக் கூறுகிறது.

பண்டைய தென்பாண்டி நாட்டில் ஒரு சிற்றரசன் காட்டுக்குள் வேட்டையாடிவிட்டு இளைப்பாறிக் கொண்டிருந்தான். ஆனால் மனதுக்குள்ளே பெரும் குழப்பம். என்னதான் மன்னனாயினும் பிற உயிர்களைக் கொல்ல எனக்கு என்ன உரிமையிருக்கிறது? இந்தப் பாவத்தை எப்படிப் போக்கலாம் என மன்னன் தன் அருகிருந்த அமைச்சரைக் கேட்டான்.

"பண்ணிய பாவம்தொலைய பண்ணோடு இறைவனைப் பணிந்து பாடுங்கள் மன்னவா!" அமைச்சன் அறிவுறுத்தினான். பாட இசைக்கருவிகள் இல்லையே

என சிந்தித்த மன்னன் தோளிலிருந்த வில்லை எடுத்து தன் மடியில்வைத்து அம்பினால் தாளம்தட்டிப் பாடினான்.

அன்றே வில்லிசைக்கலை பிறந்தது.

பக்திக்குமட்டும் இருந்த இந்தக்கிராமியக்கலை பின்னர் நகருக்கும் வந்தது. பகுத்தறிவுக்கும் இன்னும் பல விடயங்களுக்குமாய் வில் விரிந்தது.

தென்னிந்தியாவில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், சின்னக்கலைவாணர் இராஜகோபால், கவிஞர் சுப்பு ஆறுமுகம் போன்றோரும் ஈழத்தில் திருப்பூங்குடி ஆறுமுகம், கலாவினோதன் சின்னமணி போன்றோரும் புகழ்கொண்டு விளங்கினர். தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் பெரும் பங்குவகித்துவரும் இவ் வெழுச்சிக்கலையில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் கலைஞர்களும் ஈடுபட்டு சிறப்பு சேர்த்துவருகின்றனர்.

— *பவன் கணபதிப்பிள்ளை.*



---



கண்ணன் —

காலையில் தலைதெறிக்க விழுந்தடித்து ஓடினாயே... ஏன்?

கோபால் —

ஒரு சண்டையை நிறுத்துவம் என்றுதான்.

கண்ணன் —

யார் சண்டைபோட்டது?

கோபால் —

நானும் இன்னொரு ஆளும்.



மருத்துவர்.

நீங்கள் புகைபிடிப்பதை நிறுத்தவேணும்.

நோயாளி —

அதெல்லாம் ஒரு பெரியகாரியம் இல்லை. முன்பு 20 தடவை நிறுத்தியிருக்கிறேன்.

சிந்திக்கும் திறன் கொண்டோர்க்கும்.......
சிந்திக்கும் திறன் விழைவோர்க்கும்......
சந்திக்கும் பாலம் போல.....
சிந்தித்தே ஆக்கி வைத்த ......
சிந்திக்க வைக்கும் நூலே.......

எழிலனின்...

## புதியதல்ல.... புதுமையுமல்ல.......

நமக்குள் உழன்று கொண்டிருக்கும் எத்தனையோ உண்மைகளை உணராமல் -- உணர முயலாமல் நாமிருந்துகொண்டிருக்கின்றோம். நமது சிந்தனை இருட்டில் மறைந்துநிற்கும் பொய்மையை இனங்காட்ட வேண்டும். இல்லையேல் மின்மினிப் பூச்சிக்கும் விடம் கொண்டலை நுளம்பிற்கும் வித்தியாசம் தெரியாது மாட்டிக் கொள்வோம். பொதுத் தொண்டு செய்வோரில் போலிகளின் ஆக்கிரமிப்பு மலிந்து இருப்பதால் மக்கள் திசை திருப்பப்படுகின்றார்கள்.
வைரத்தை அடையாளங்காண விடாதவர்கள் – கண்ணாடித்துகள்களைக் காட்டி உங்களை ஏமாற்றுகிறார்கள். சமுதாயத்தின் பெயரைச் சொல்லித் தம்மை வளர்த்துக் கொள்ளும் இந்தப் போலிகளை அடையாளங்காண வேண்டுமென்றால் உண்மைக்குமேல் இவர்கள் போர்த்திவைத்திருக்கும் பழியான – பொய்யான கூடாரத்தை நாம் அகற்றிவிட்டு உள்நுழைந்து உண்மையைத் தேட வேண்டும். அதைத்தான் இந்நூல் உங்களைச் செய்யத் தூண்ட விழைகின்றது.
சரியாகச் சிந்தித்திடும் ஆற்றல் தனிநபர் சொத்தன்று நம் ஒவ்வொருவரினதும் சொத்தது மற்றவர் கருத்துக்களை மனப்பாடம் செய்துவிட்டு அவற்றை நம்மிடம் திருப்பிச் சொல்லிப்புகழ்தேடும் போலி உலகமிதை ப் புரிந்து கொள்ளுங்கள்.
சிந்தனை பலவீனம் பெருவலிகளின் வெற்றிக்கே வழி செய்யும் நாம் நம்மை உணர்ந்து கொண்டால் நம்மை ஏய்ப்பவனை விரட்டிவிட்டு நம்மைக் காத்துக் கொள்ளலாம்.

சமுதாயக் கள்ளர்களை இனங்காண – சமுதாயத்தின் நன்மைக்கு வழிதேட –
தனிநபர் சிந்தனைத்தெளிவொன்று மட்டுமே உதவ முடியும்.
அதற்கு உங்களை ஊக்குவிக்கும் ஒரு சின்னஞ்சிறு தூண்டுகோலே

## புதியதல்ல.....புதுமையுமல்ல......

கவிதைகள் – கட்டுரைகள் – கருத்துச் செறிந்த ஆன்றோர் அமிர்துரைகள் நிறைந்து வெகு விரைவில் வெளிவரவிருக்கின்றது.

வாசகர்கள் – எழுத்தாளர்கள் – கவிஞர்கள் அனைவரும் கண்டிப்பாக வாசிக்க வேண்டும்.

உங்களின் பிரதியை முன்கூட்டியே பதிந்து கொள்ள பூவரசு நற்றமிழ் ஏட்டுடன் எழுதித் தொடர்பு கொள்ளுங்கள்

காவியம் பாடிப்பாடிப் பொழுதினை இழக்கை போதும்
பாவிகள் நம்மை ஏய்க்கா நன் நிலை காணல் வேண்டும்.
கோவிலும் குளமுமல்ல சிந்தனைத் தெளிவு ஒன்றே
நாவிலும் நடக்கை எல்லாம் நல்லதை நாடச் செய்யும்.

போனவர் தந்து சென்ற நல்லவை நம்மைச் சேர
நானென்னின் இதயம் சொல்லும் உண்மையை மட்டும் ஏற்பேன்
ஏனை எதையும் கேட்பேன் பொய்யதை இழையும் காண்பேன்
என்னினம் ஏற்றல் செய்ய எம்மிலுள் கல்வாய் டேன் .

இது என் கருத்தல்ல...உங்கள் உள்ளத்துள் உறைந்துள்ள உண்மையான கருத்து.அதனைத் தட்டி எழுப்ப உங்களுக்காக வெளிவருவதே புதியதல்ல ......புதுமையுமல்ல....

அன்பின் தமிழ் நெஞ்சங்களே!

உங்களுடைய பிறப்புச்சான்றிதழ் (birth certificate)
கல்யாணப் பதிவுச்சான்றிதழ் (marriage certificate)
ஆகியவற்றை மொழிபெயர்ப்பதற்கும்,
கல்யாணப் பதிவுக்குக்
கல்யாணப் பதிவுக்காரியாலயத்தில் (Standesamt)
நேரில் சமூகமளித்து மொழிபெயர்ப்பதற்கும்,
மற்றும் உங்களுக்குத் தேவையான
அத்தியாவசியமான சகல மொழிபெயர்ப்பு வேலைகளையும்
இலகுவாகவும் விரைவாகவும் செய்துகொள்வதற்கு
நீங்கள் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

**George Dias**
**Lortzing Str 10, 59063 Hamm.**

**Tel: 02381/ 511 26**
**0231/ 4093 46**

**OLG (HAMM)**
**ERMÄCHTIGER**
**ÜBERSETZER.**

விரைவில் வெளிவருகிறது!

## கமலம்.

(முத்திங்கள் இதழ்)

இது ஒரு பொழுதுபோக்கு இதழல்ல!
ஆய்வுத்தொகுப்பு நூலான முத்திங்கள் இதழ்!
சீர்திருத்தக்கருத்துடையோரின் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

கமலம் பற்றிய மேலதிக தொடர்புகளுக்கு—

S.KAMALANATHAN, HASSEL RIEDE 9,
30900 WEREMARK.

பிறேமன்வாழ் தமிழ் தொலைக்காட்சி ரசிகர்களுக்கு !

# கலைமாலை

தமிழ் ஒளிபரப்பு

பிரதிமாதமும் 2வது 4வது புதன்கிழமைகளில்

Offener Kanal அலைவரிசையில் ஒளிபரப்பாகிறது.

தாயகத்தில் தயாரான குறும்படங்கள்,
மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன்
புலம்பெயர்ந்த தமிழ்மக்களால் நடாத்தப்படும்
கலைநிகழ்ச்சிகளும் இதில் இடம்பெறுகின்றன.

# RP

## வீடியோ

உங்கள் இல்லத்தில் இடம்பெறும் வைபவங்கள், மற்றும்
கலை நிகழ்ச்சிகள் யாவற்றையும்
**Professional *Camera*** மூலம்
சிறந்தமுறையில் அழகுறப் படம்பிடித்துக் கொள்ள -

**P.Pathmaharan**
Neuwieder Str - 1
28325 Bremen
Tel:- 0421 / 407721



# வளரட்டும் பூவரசு!

தமிழ் வாசகநெஞ்சங்களின் அபிமானச் சஞ்சிகையாக ஐந்து வருடங்களாகத் திகழ்ந்த பூவரசு இன்று தனது ஆறாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது என எண்ணும்பொழுது எனதுஉள்ளம் உவகையால் பூரிக்கின்றது.

இன்றைய நவீன உலகிலே கவர்ச்சிகரமாக அச்சிடப்பட்டு வெளிவரும் புத்தகங்களின் மத்தியிலே மிக எளியமுறையில் வெளிவரும் பூவரசு ஐந்து வருடங்களை நிறைவு செய்து வெளிவந்து கொண்டிருக்கிறதெனில் அதற்குக் காரணம் பூவரசின் மீது மக்கள் கொண்டுள்ள பற்றுதல்தான் என்றால் அது மிகையாகாது.

இயந்திரம்போல் உழைக்கவேண்டிய ஐரோப்பிய நாடு ஒன்றிலிருந்துகொண்டு இவ்வாறான ஒருசஞ்சிகையைத் தொடர்ந்து வெளியிடுவதென்பதுஇலகுவான காரியமல்ல. அதற்காக உழைக்கும் ஆசிரியரும் அவரைச் சுற்றியுள்ளவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே!

காற்றிலே மழையிலே வெய்யிலிலே எந்தச் சூழலிலும் எவ்வாறு ஒரு பூவரசுமரம் தனக்கேயுரிய பாணியில் நிமிர்ந்து நிற்கின்றதோ அதேபோலத்தான் பூவரசு சஞ்சிகையும் தனக்குநிகர் தானே என மற்றவர்களால் நினைக்கத் தோன்றுமளவிற்கு நிமிர்ந்து நிற்கின்றது. ஆறாவது ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் பூவரசு தான்செல்லும் இடமனைத்தையும் வளம் படுத்தும் ஆறுபோல தமிழ்வளர தமிழர்கள்வாழ தன் முயற்சியினைத் தொடரும் என நம்புகிறேன்.

— மா. சுந்தரமூர்த்தி
(கனடா)

# இந்து வழிபாட்டுச் சங்கம் பிறேமன்.

திரு.சு.மகேந்திரமூர்த்தி
தலைவர்
திரு.இரா.உதயகுமார்
செயலாளர்
திருமதி.வ.புவனேந்திரன்
இணைச்செயலாளர்
திரு.ந.குணராஜன்
பொருளாளர்
திரு செ.ஜெயபாலன்
வெளிவிவகாரத்தொடர்பாளர்.

அறங்காவல் குழுவினர், —
திரு.மா.இலட்சுமிகாந்தன்
திரு.இரா.சுவேந்திரராஜா
திரு.செ.புவனேந்திரன்
திரு.சு.செல்வரட்ணம்
திரு.சு.கு.ஜெயக்குமார்
திரு.மூ.ரூபேந்திரன்
செல்வன்.அ.குசேலன்
திருமதி.ச.தேவராஜா
திருமதி.ஸ்ரீ.ஜித்தேந்திரா

*ஆசிரியர்.*
*பூவரசு.*

*அன்புடையீர்!*

*பூவரசு இனிய தமிழ்ஏடு தனது ஐந்தாவதாண்டு*
*கலை இலக்கியப் பயணத்தை நிறைவு செய்துள்ளதையிட்டு*
*எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*
*புலம்பெயர்ந்தவாழ்விலும் நமதுமொழிக்காகவும்*
*கலை, இலக்கியங்களுக்காகவும் பணியாற்றும் நல்மனம்*
*படைத்தோரை தமிழ்கூறும் நல்லுலகம் என்றும் மறந்துவிடாது.*
*இந்தவகையில் தமிழ்க் கலை இலக்கியத்துறையில்*
*பூவரசுக்கென்று ஒரு தனியிடம் என்றும் உண்டு.*
*தங்கள் பணி தொடரவும்*
*பல்லாண்டுகாலம் பூவரசு தழைத்துவளரவும்*
*இறையருள்வேண்டுகிறோம்.*
*வாழ்க!வளர்க!*

அன்புடன்

இரா. உதயகுமார்
(செயலாளர்.)

சு.மகேந்திரமூர்த்தி
(தலைவர்)

பிறேமன் வாழ் தமிழ்வாசகர்களுக்கு!

பிறேமன் பொதுநூலகத் தமிழ்ப்பிரிவில்
ஏராளமான தமிழ்நூல்கள்
உங்களுக்காய்க் காத்திருக்கின்றன.

வாசிப்பதற்கு நாங்கள் செலவிடும் நேரம்
எங்கள் வாழ்வை அர்த்தமுள்ளதாக்கும்.

நீங்கள் படித்துப் பயன்பெறத்
தகுதியான பலநூல்கள்
உங்களுக்காய் வருவிக்கப்பட்டுள்ளன.

வாசித்து மகிழுங்கள்!

நூலகமுகவரி —
OSTERHOLZ BIBLIOTHEK,
WALLISER STR. 125,
28325 BREMEN.

Stadt-
Bibliothek
Bremen



Complete Printing & Graphic Design
THEEPAN
Printing Service
Saarbrücker Str 75
66386 St.Ingbert
Tel: 06894 / 38 30 94
"தரத்தினைப் பேணும்
தனித்துவம் கொண்டோம்"